# வணிகத்தளிர்

# VANIKATHALIR

1996 1997

5-M

JAFFNA

திருக்குடும்பக் கன்னியர்மடம், யாழ்ப்பாணம்

HOLY FAMILY CONVENT

JAFFNA

தளிர் 5

★ சேட்டிங்
★ சூட்டிங்
★ ஜப்பானிய / இந்திய — சாறிகள்
★ சிறுவர்களுக்கான ஆடைகள்
றெடிமேட் ஆடைகள்
அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

# சிவராதா
# பிடவை மாளிகை

16 - B, பெரியகடை பஜார், யாழ்ப்பாணம்.

# SIVARATHA

Dealers in TEXTILES :

- SHIRTING
- SUITING
- READYMADE ITEMS

16 - B, GRAND BAZAAR, JAFFNA.

144544
147745

# வணிகத்தளிர்

# VANIKATHTHALIR

Convent Maha Vidyalayam
JAFFNA
VC 51

1996 1997

இதழாசிரியர்கள்

செல்வி சஜி. பேரின்பநாயகம் செல்வி சில்வேனியா சிங்கராயர்

Commerce Students Association
J / Holy Family Convent,
Jaffna.

வர்த்தகமாணவர் மன்றம்
யா / திருக்குடும்ப கன்னியர்மடம்,
யாழ்ப்பாணம்.

# தளிரில் துளிர்த்தவை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | நேர்காணல் | ... மா. நடராஜசுந்தரம் | 01 |
| 2. | இலங்கையின் மனிதவள அபிவிருத்தியும் | ... க. தேவராஜா | 06 |
| 3. | முகாமைத்துவமும் அதன் செயற்பாடுகளும் | ... கு. நாமகள் | 13 |
| 4. | ஆசிய அபிவிருத்தி வங்கியும்...... | ... சூ.மேரி யூலியா | 26 |
| 5. | உள்நாட்டுக் கைத்தொழில் வர்த்தக...... | ... யே. சஜி | 29 |
| 6. | இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தி...... | ... பா. ஆன் அஜோஜா | 35 |
| 7. | கையிருப்புக் கட்டுப்பாடு | ... T. வேல்நம்பி | 38 |
| 8. | அறவிடமுடியாக் கடன், ஐயக்கடன் ஏற்பாடு | ... பு. மெஜித்தா | 46 |
| 9. | இலாப நோக்கற்ற நிறுவனக் கணக்கு | ... றொ. றொபினா | 51 |
| 10. | ஏற்பாடும் ஒதுக்கமும் | ... ஜெ. ஜெனற் சிராணி | 58 |
| 11. | நிதி அறிக்கையிடல்...... | ... ம. சாந்தி | 62 |
| 12. | இலங்கையில் நாணயமுகாமைத்துவத்தில்...... | ... இ. இரட்ணம் | 67 |
| 13. | சந்தைப் பொருளாதாரம் ஒன்றில்...... | ... இ. நர்மதா | 73 |
| 14. | பதங்கள் | ... வெ. பெனிற்றா | 78 |
| 15. | காலத்தொடர்ப்பகுப்பாய்வில்..... | ... சி. சில்வேனியா | 83 |
| 16. | தமிழ் க.பொ.த (உயர்தரம்) புதியபாடத்திட்டம் | ... வை. சுகனியா | 87 |
| 17. | கத்தோலிக்க விவிலியத் தொகுப்பில்...... | ... கு. சஜினி | 92 |
| 18. | Education for peace | ... சி. சிந்தியா | 94 |
| 19. | நன்றி நவில்கின்றோம் | | 96 |
| 20. | விளம்பரப் பகுதி | | 97 |

# சமர்ப்பணம்

மண்ணில்

17 - 9 - 34



மனதில்

29 - 3 - 97

## அமரர், வண. பிதா ஹில்லறி ஜெபநேசன்

யாழ். மறைமாவட்டத்தின் அருட்குருவாக, பேராலயத்தின் பங்குத் தந்தையாக எமது பாடசாலையின் ஆன்ம வழிகாட்டியாகப் பணி செய்து மறைந்த எமது அன்புக்குரிய அருட்தந்தை பிதா ஹில்லறி ஜெபநேசன் அவர்களுக்கு வணிகத்தளிரின் 5வது இதழைச் சமர்ப்பணம் செய்வதில் இம் மன்றம் பெருமையடைகிறது.

" வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் "

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இலக்கணமாக வாழ்ந்தவர் பிதா ஜெபநேசன். இறைபணிக்கும் மக்கள் பணிக்கும் தன்னை அர்ப்பணித்தவர், யாழ் மறைமாவட்டத்தில் பல பாரிய பொறுப்புக்களை வகித்தவர். எந்தச் சிறிய விடயத்திற்குக்கூட நேர்மை தவறாதவராக, கடமை வீரராக அஞ்சாது உண்மை உரைப்பவராக, மக்களின் நலனைப் பேணுபவராக விளங்கினார். அடக்கமான சுபாவமும், ஆழ்ந்த அறிவும், மலை போன்ற உறுதியும் அவரிடம் காணப்பட்டன. மனிதமுன்னேற்ற நடுநிலையத்தின் இயக்குனரான அவர் நீதிக்காகவும், பொது நலனுக்காகவும் குரல் கொடுத்தவர். அனைவரது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவராக அவர் விளங்கியதில் ஆச்சரியமில்லை. போர்க்காலச் சூழ்நிலையிலே இன்னலுற்ற மக்களுக்கு அவர் ஆற்றிய பணி அளவிடற்கரியது.

பேராலய பங்குத்தந்தையாக அவர் பணியாற்றிய நாட்களில் எமது பாடசாலையின் ஆன்ம குருவாகவும் இருந்தார். அப்போது மாணவியரின் ஆன்மீகக் கருமங்களில் மிகுந்த அக்கறை எடுத்துவந்தார். அவர் மூலமாக நாம் அடைந்த நன்மைகளுக்காக அவருக்கு நன்றி செலுத்த விழைகின்றோம்.

அவரது நீங்காத நினைவாக இந்த இதழை எமது அன்புக் காணிக்கையாக அவருக்குச் சமர்ப்பணம் செய்கின்றோம்.

# எமது அதிபரின் வாழ்த்துரை

எமது கல்லூரியின் வர்த்தக மாணவ மன்றத்தின் வெளியீடான ''வணிகத்தளிர்'' ஐந்தாவது தளிராக மலர்வதையிட்டுப் பெருமகிழ்வடைகின்றேன். மாணவர்கள் தங்கள் சுய ஆற்றல்களை வளர்த்து அதன் வெளிப்பாடாகச் சிறந்த ஆக்கங்களை உருவாக்கிச் செயல்வடிவமாக்கும் முயற்சியில் கால்பதித்துத் தங்கள் ஐந்தாவது தளிரை வெளிக் கொணர்ந்துள்ளனர்.

இத்தகைய சஞ்சிகை வெளியீடுகள் மாணவர்களின் மன எழுச்சிகளை ஆற்றுப்படுத்துவதோடு, மாணவர் தம் எழுத்தாற்றலை வளர்க்கவும், அவர்களின் அறிவுத் தேடலைப் பூர்த்திசெய்யவும், பாடப்பரப்பில் மாணவர்களுக்குத் தேவையான தரவுகளை அளிக்கவும் வழிசமைக்கின்றன. மாணவர்களின் அயரா உழைப்பின் பேறாக இச்சஞ்சிகையானது அழகு, எளிமை, அடக்கம் என்பவற்றை உள்ளடக்கி வெளிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

நூல் வெளியீடென்பது சிரமமானதொரு கருமமாயினும், அப்பணியை இனிது நிறைவேற்றிய வர்த்தக மன்றத்தினர், அவர்களை நெறிப்படுத்திய பொறுப்பாசிரியர்கள் ஆகியோரின் விடாமுயற்சியையும், ஆக்கபூர்வமான செயற்பாட்டையும் பாராட்டுகிறேன்.

இத்தளிரானது ஆண்டுதோறும் புதுப்பொலிவுடன் மலர்ந்து வணிகத்துறைக்கு வலுவூட்ட வேண்டுமென வாழ்த்துகிறேன்.

அருட்சகோதரி யோலன்ட்

28-11-1997

## OUR PRINCIPAL



**Sr. Yolande**

B. A. (Cey.), Dip - in Ed., Dip - in. Mgt.,
M. A. (Ed.)

# கல்விப்பணிப்பாளரின் ஆசிச்செய்தி

யா / திருக்குடும்பக் கன்னியர் மடம் – உயர்தர வர்த்தக மாணவ ஒன்றியத்தின் வெளியீடான இம் மலருக்கு ஆசிச் செய்தி ஒன்றினை வழுங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இம்மாணவர் மன்றம் தொடர்ந்தும் தரமுள்ள, மாணவர்களுக்கேற்ற கட்டுரைகள், வழிகாட்டல்களை வழங்குவதற்கு இச்சஞ்சிகை உதவிபுரிவதுவரவேற்கத்தக்கது. தொடர்ந்தும் இத்தொண்டினை வணிகமன்றத்தின் வெளியீடு ஆற்ற எனது இதயபூர்வமான ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கு. இரத்தினராசா
கல்விப் பணிப்பாளர்

வலயம் — 1,
கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
28-11-97

# உதவிக் கல்விப் பணிப்பாளரின் (வணிகக்கல்வி) ஆசிச் செய்தி

வணிகச்சஞ்சிகை வரலாற்றில் 1988ல் யாழ். திருக்குடும்ப கன்னியர்மட வர்த்தக மாணவமன்றம் 'வணிகத் தளிர்' சஞ்சிகையை வெளியிட்டு, முதன் முதலாக வணிகச் சஞ்சிகையை வெளியிட்ட மகளிர் கல்லூரி என்ற புகழையும், சாதனையையும் தம்வசப்படுத்திக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

தாம் பெற்ற, சாதித்த சாதனையைப் பாதுகாத்து மென் மேலும் மனஞ் சோராது துணிச்சலுடன் வணிகத்தளிரை மெருகூட்டி வெளிக் கொணர்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

'வணிகக் கல்வி' செய்முறையுடன் கற்க வேண்டிய ஒரு கலையாகும். இதற்குப் பொருத்தமான வசதிகள் எமது பிரதேசத்தில் மிகவும் அரிதாகவே உள்ளன. ஆயினும் இக்கல்லூரி பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம், தட்டச்சுப் பாடநெறி, வணிகத்தளிர் வெளியீடு ஆகியவற்றின் ஊடாக, செய்முறைக் கல்வியை வழங்க முனைந்து செயற்படுகின்றது. இச் செயற்பாட்டினால் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் 100% சித்தியும், கா.பொ.த. உயர் தரப்பரீட்சையில் 85% பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் தகுதியைப் பெற்றுள்ளமை சான்றாகும்.

இச்சஞ்சிகை மாணவர்களின் எழுத்தாற்றலையும், சிந்தனையாற்றலையும், தலைமைத்துவப் பண்பையும் வளர்ப்பதற்கு உறுதுணையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. வணிகக்கல்விப் போட்டிகளில் தேசிய பாடசாலைக்கு நிகரான ஒரு தரத்தை இப்பாடசாலை மாணவிகள் கடந்த மூன்றாண்டு காலமாகச் சாதித்து வருவது பாராட்டிற் குரியதாகும்.

வ. க. பாலசுப்பிரமணியம்,
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வணிகக்கல்வி

வலயம் — 1,
கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
01–12–97

# உங்கள் பணிதொடர வாழ்த்துகிறோம்

எமது கல்லூரியின் ஐந்தாவது "வணிகத்தளிர்" எனும் குழந்தை உங்கள் கைகளில் தவழ்வதையிட்டு மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றோம்.

இன்று கல்லூரிகளின் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மன்றங்களின் செயற்பாடு இன்றியமையாதது. அந்த வகையில் எமது கல்லூரியின் வணிக மன்ற மாணவர்களும் தமது விடாமுயற்சியால் தமக்குக் கிடைத்த வளங்களை முழுமையாகப்பயன்படுத்தி அறிவுசார்ந்த, துறை சார்ந்த விடயங்களை, உள்ளடக்கி ஐந்தாவது தளிரை உங்கள் கைகளில் தவழவிட்டுள்ளனர்.

மாணவர்கள் தமது கல்லூரி வாழ்வில் இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் எதிர்காலத்தில் மாணவரின் ஆற்றல் விடாமுயற்சி – பரந்தபார்வை - தேடல் மூலம் அறிவைப் பெருக்கும் வாய்ப்பு என்பன ஏற்பட இடமுண்டு. ஒரு கல்லூரியில் இடம்பெறும் அனைத்து நிகழ்ச்சிகளும் மாணவர்களது ஆளுமையில் உயர்வான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது வெளிப்படை. ஆகவே இத்தகைய சஞ்சிகை வெளியீடு என்ற செயற்பாடு மாணவர்களது ஆளுமையிலும் உயர்வான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. மாணவர்களின் உள்ளார்ந்த கிடக்கைகளினை வெளிக்கொணர்ந்து அவர்களின் சுய ஆற்றலுக்கு உருவம் கொடுக்கும் ஒரு செயற்பாடாகவே இச் சஞ்சிகை வெளியீடு அமைகின்றது. இம் மலரை வெளிக்கொணர்வதற்கு எமது அதிபர் காட்டிய ஆர்வத்திற்கும் ஏனைய ஆசிரியர்களின் ஒத்துழைப்பிற்கும், மாணவர்களின் ஊக்கத்திற்கும் மன்றத்தின் சார்பாக நன்றி கூறுகின்றோம்.

இம்மலர் ஆண்டுதோறும் மலர்ந்து மாணவச் செல்வங்கள் இந்நறுமலரை நுகர எல்லாம் வல்ல இறைவன் இன்னருள்புரிய இறைஞ்சுகின்றோம்.

*"உள்ளத்தால் உயர்ந்தவரை நாம் சமைத்தால்*
*உயர்வான உலகமதை நாம் படைப்போம்"*

பொறுப்பாசிரியர்கள்

# ஐந்தாவது தளிர் வெளியீட்டில் அகமகிழும்

# இதழாசிரியர்களின் எண்ணத்துளிகள்

யா / திருக்குடும்ப கன்னியர் மடம் — ஆங்கிலப் பாடசாலையின் வணிகத்துறை மாணவ மன்றத்தின் வெளியீடாக 5வது தளிரை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

வெறுமனே ஏட்டுக்கல்வியுடன் நின்றுவிடாமல் மாணவர்களாகிய எமது உசாவுதிறனை வளர்க்கும் நோக்குடனும் எமது கல்லூரியின் உயர்தர வகுப்பு வணிகக்கல்வியினை வளர்ச்சியுறச் செய்யும் நோக்கத்தோடும் மாணவர்களின் உள்ளார்ந்த திறனை வெளிக்கொணர்வதற்கும் இவ்வணிகத் தளிர் வெளியீடு ஒரு வடிகாலாக அமைகின்றது.

இத்தளிர் செழிப்புற அவ்வப்போது உயரிய ஆலோசனைகளைத் தந்து வெளியீடு செய்வதற்கு ஒப்புதலும் வழங்கிய அதிபருக்கு, நாம் நன்றி கூறுகின்றோம். இத்தளிர் அர்த்தமுள்ளதாக அமைய உறுதுணையாக உழைத்த மன்ற ஆசிரியர்களுக்கும், சிறப்புக் கட்டுரைகளை வழங்கிய விரிவுரையாளர்களுக்கும், மாணவர்களுக்கும் நாம் என்றென்றும் கடப்பாடுடையோம்.

ஐந்தாவது தட்டில் வண்ண மலராக வடிவெடுத்திருக்கும் இவ் ஏட்டை மேலும் அழகு செய்வதற்கு உழைத்தவர்களான பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் மன்ற உறுப்பினர்களுக்கும், நிதி உதவி நல்கியவர்களுக்கும், விளம்பரங்கள் தந்து ஆதரித்தோருக்கும், இம்மலரைச் சிறப்பாக அச்சிட்டு வெளியிட்ட அச்சகத்தினர்க்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றிகள்.

இறுதியாக இந்நூலில் பற்பல குற்றங்குறைகள் காணப்படலாம். எனினும் இன்று தளிர் நடைபோடும் இம் மலரானது வருங்காலத்தில் குறைகுற்றங்கள் இன்றி வீறு நடைபயின்று மங்காப்புகழ் அடைய வாழ்த்தி நிற்கிறோம்.



நிலம் செழுமையாக்கி
வித்திட்டு, நீரூற்றி
கனிதரும் மரமாக
இத் தளிரைக்
காலங் காலமும்
எம் கல்விக் கூடத்தில்
வளர்ப்போம்.

இதழாசிரியர்கள்

செல்வி சஜி. பேரின்பநாயகம் — செல்வி சில்வேனியா சிங்கராயர்

# வர்த்தக மாணவ மன்றச் செயற்குழு

## 1995—1996

| | | |
|---|---|---|
| காப்பாளர் | — | அருட்செல்வி யோலண்ட் (அதிபர்) |
| துணைக்காப்பாளர் | — | திருமதி தி. ஜெயப்பிரகாசம் (உபஅதிபர்) |
| மன்றப் பொறுப்பாசிரியர்கள் | — | திருமதி லெ. பரராஜசிங்கம் |
| | — | திருமதி ர. அச்சுதம்பிள்ளை |
| துணை ஆசிரியர்கள் | — | திருமதி சி. ராஜரட்ணம் |
| | — | திருமதி நி. தெய்வேந்திரா |
| | — | திருமதி ஆர். சௌந்தரலிங்கம் |
| | — | திருமதி எ. அன்ரனி |
| | — | செல்வி பூ. பெனடிக்ற் |
| | — | திருமதி ப. சிவபாலன் |
| | — | திருமதி எஸ். சிறீஸ்கந்தராஜா |
| தலைவர் | — | செல்வி ஜுவனிற்றா செகராஜசிங்கி |
| உப தலைவர் | — | செல்வி ஜீவனி வில்லியம் |
| செயலாளர் | — | செல்வி றொபீனா பிலிப் |
| உப செயலாளர் | — | செல்வி சுமங்கலா ராஜேஸ்வரன் |
| பொருளாளர் | — | செல்வி டெனிசியா சூசைதாசன் |
| இதழாசிரியர்கள் | — | செல்வி அமலராணி ஞானப்பிரகாசம் |
| | — | செல்வி ஜெயந்தினி பேரின்பநாயகம் |
| விளம்பரப் பொறுப்பாளர் | — | செல்வி அனெஸ்ற் நியோஜினி சூசைப்பிள்ளை |
| | — | ,, விசாந்தினி அல்பேட் |
| | — | ,, சுவைடா ஜெறோம் |
| | — | ,, றொஷாணி மத்தியூஸ் |

# வர்த்தக மாணவச் செயற்குழு

# 1996—1997

| | | |
|---|---|---|
| காப்பாளர் | — | அருட்செல்வி யோலண்ட் மத்தியாஸ் |
| உப காப்பாளர் | — | திருமதி மே. தி. ஜெயப்பிரகாசம் |
| பொறுப்பாசிரியர்கள் | — | திருமதி லெ. பரராஜசிங்கம் |
| | — | திருமதி ர. அச்சுதம்பிள்ளை |
| துணை ஆசிரியர்கள் | — | திருமதி சி. இராஜரட்ணம் |
| | — | திருமதி நி. தெய்வேந்திரா |
| | — | திருமதி ப. சிவபாலன் |
| | — | திருமதி டெ. நாகேந்திரன் |
| | — | திருமதி க. குணம் |
| | — | திருமதி ற. அம்பலவாணர் |
| | — | அருட்செல்வி புவனா துரைச்சாமி |
| | — | திருமதி வி. அருளானந்தம் |
| | — | செல்வி லி. துரைராஜா |
| | — | செல்வி யூ. சூசைப்பிள்ளை |
| | — | திருமதி சா. தர்மராஜா |
| தலைவர் | — | செல்வி மெஜிந்தா புஸ்பராஜா |
| உப தலைவர் | — | செல்வி அலோஷியா பாலேந்திரா |
| செயலாளர் | — | செல்வி நர்மதா இராஜரட்ணம் |
| உப செயலாளர் | — | செல்வி தர்பி சண்முகநாதன் |
| பொருளாளர் | — | செல்வி ஜெனற் மேரி அமலினி அருளானந்தம் |
| இதழாசிரியர்கள் | — | செல்வி சஜி பேரின்பநாயகம் |
| | — | செல்வி சில்வேவியா சிங்கராயர் |
| விளம்பரப் பொறுப்பாளர்கள் | — | செல்வி சிந்தியா குரூஸ். |
| | — | செல்வி சஜினி குணநாயகம் |
| | — | செல்வி மரிய யசோதா இமானுவேல் |
| செயற்குழு உறுப்பினர்கள் | — | செல்வி மேரி றூபா எலியாஸ் |
| | — | செல்வி அமிர்தஜோதி யோசப் |
| | — | செல்வி சுனித்திரா அபயராஜா |
| | — | செல்வி சுகன்யா வைற்றஸ் |
| | — | செல்வி ஹேமலதா சரவணபவானந்தன் |

# செயற்குழு 1996-1997



இருப்பவர்கள் : (இடமிருந்து வலம்)
திருமதி நி. தெய்வேந்திரா, திருமதி ர. அச்சுதம்பிள்ளை, செல்வி கு. மெஜித்தா(தலைவர்)
அருட்சகோதரி யோலண்ட் (அதிபர்) திருமதி மே. தி. ஜெயப்பிரகாசம் (உப அதிபர்)
செல்வி. பே. சஜி (இதழாசிரியர்) திருமதி லெ. பரராஜசிங்கம் திருமதி சி. ராஜரட்ணம்

நிற்பவர்கள் : (இடமிருந்து வலம்)
செல்வி. அ. சுனித்திரா, செல்வி இ. யசோதா (வி.பொ.) செல்வி. பா.அலோசியா(உபதலைவர்)
செல்வி வை. சுகன்யா செல்வி. அ. அமலினி (பொருளாளர்)
செல்வி. சி. சில்வேனியா (இதழாசிரியர்) செல்வி. ச. தர்சி (உபசெயலாளர்)
செல்வி. கி. சிந்தியா [விளம்பரப்பொறுப்பாளர்] செல்வி. கு. சஜினி [விளம்பரப்பொறுப்பாளர்]

சமுகமளிக்காதோர் : செல்வி. இ. நர்மதா (செயலாளர்), செல்வி. எ. ரூபா, செல்வி. யோ. அமிர்தஜோதி
செல்வி. ச. கேமலதா

# 1994, 1995 ஆம் ஆண்டுகளில்

# பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்

## 1994

### வணிகத்துறை

1. சுனித்திரா நவரட்ணம்
2. நாமகள் குருநாதன்

### கலைத்துறை

1. அமோறின் ஜோசப்
2. பிரியம்வதா திலகநாயகம் போல்
3. ஜெனற் டிபோனி ஜெயராஜா
4. கிருஸ்ணவதனி போகரட்ணம்
5. ஜோஜிபி மீனா ஜோஜ்

## 1995

### முகாமைத்துவத் துறை I

1. வேளாயினி பத்மராஜா
2. அமலராணி ஞானப்பிரகாசம்
3. றொசிற்றா சிறினி றிஜ்வே
4. அன்ரனிற்றா அலெக்சாண்டர்

### வணிகத்துறை

1. ஜீவனி வில்லியம்
2. றொபினா றெனோல்ட் பிலிப்
3. சௌந்தரநாயகி யேசுதாசன்

### முகாமைத்துவத்துறை II

1. அனஸ்ற் நிலோஜினி சூசைப்பிள்ளை

### கலைத்துறை I

1. உமா பாலசிங்கம்
2. சசிகலா நித்திபானந்தன்
3. ஸ்ரெலா இமலியானஸ்

### கலைத்துறை II

1. றின்சி ஜீவரட்ணம்

# 1996 ஆம் ஆண்டு க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைப் புள்ளி பெற்றோர்

1. மெர்லின் சாமினி இமானுவேல்
2. சுதர்சினி பத்மராஜா
3. கௌரி பொன்னம்பலம்
4. மேரி ஆஷா பிரின்ஸ்
5. நிலா சைபிரியன்
6. ஜெயமலர் வில்பிறட்
7. கரொலின் அழகரெட்ணம்
8. ருஷிபா அன்ரனிப்பிள்ளை
9. பபிதா பாலேந்திரன்
10. ஜீன்மேரி பெமினஸ்
11. சாமினி ஜெயராஜா
12. அனிற்றா ஜீவரெட்ணம்
13. அஞ்சனா ஜெயசிங்கம்
14. சுபாஜினி யூடா
15. மிதிலா கனகசிங்கம்
16. செவ்வந்தி நாகராஜா
17. ஏமி றொபேட்
18. பேனீற்றா றொபின்சன்
19. சுபாஜினி சேவியர்
20. பேனடின் சேவியர்
21. நொய்லின் இமானுவேல்
22. ஜோதினி யேசுநாதன்
23. டிலானி லோறன்ஸ்
24. ஜெனிற்றா ராஜநாயகம்
25. விஜயவாணி சண்முகசுந்தரம்
26. நளாயினி தியாகராஜா
27. சாந்தி சின்னத்துரை
28. யுவனீற்றா செகராஜசிங்கம்
29. நிசாந்தி தங்கராஜா
30. கரோலீற்றா அலிஸ்
31. றொசிற்றா றெக்ஸ்
32. விஜித்தா கமலநாதன்
33. அமிர்தா அமிர்தநாயகம்
34. யாழினி சைமன்

# நேர் காணல்

நேர் கண்டவர்

**அமலினி அருளானந்தம்**
97 வர்த்தகப் பிரிவு

M. Nadarajasundaram
Head – Dept-of
Management Studies,
University of Jaffna,
Jaffna.

[ யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத் துறையின் தலைவரான திரு. மாணிக்கம் நடராசசுந்தரம் அவர்களை 23 ஆம் திகதி புரட்டாதித் திங்கள் அன்று காலை அவர்களின் அலுவலகத்தில் நேர் கண்டேன் அவர் மூலமாக நாம் அறிந்து கொண்ட விடயங்களைப் பகிர்ந்து கொள்கின்றேன். ]

* முகாமைத்துவத் துறையின் தலைவர் நடராசசுந்தரம் அவர்களே, நீங்கள் எவ்வளவு காலமாக முகாமைத்துவத் துறையில் கடமையாற்றுகிறீர்கள்?

முன்னர் வர்த்தகத்துறையுடனே முகாமைத்துறையும் ஒன்றாக இயங்கி வந்தது. பின்னர் வெவ்வேறாகப் பிரிக்கப் பட்ட காரணத்தினால் முகாமைத் துறையில் கடந்த 4 ஆண்டுகளாகப் பணியாற்றுகிறேன்.

* முகாமைத்துவத் துறையின் தலைவராக கடமையாற்றும் உங்களின் சிறப்புத் தகமைகள் எவை எனக் கூறுவீர்களா?

ஆரம்ப காலத்தில் வங்கியின் ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தராக 5 வருடங்கள் பணியாற்றினேன். பின்னர் 1978 ஆம் ஆண்டு பொருளியல் விரிவுரையாளராகவும், 1983 ஆம் ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கியில் கணக்காளராகவும் பதவி வகித்தேன். இக் காலத்தில் பொருளியல் முதுமாணிப் பட்டத்தினையும், C. I. M. A. இறுதியாண்டுப் பரீட்சை வரையிலும், முகாமைத்துவத்தில் "Diploma" பட்டத்தினையும் பெற்று மீண்டும் பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவத்தில் வந்து சேர்ந்தேன். சிறப்பாக கூறுவதாயின் 8, 9 வருடங்கள் வங்கியில் உயர்மட்ட முகாமையில் வேலை செய்தமையாலும், பலவகையான முகாமைத்துவப் பயிற்சிகளை வங்கியின் ஊடாகப் பெற்றமையாலும் இத்துறையில் இயங்குவது சுலபமாக உள்ளது.

* நீங்கள் இவ்வளவு தூரம் முன்னேற்றம் காண உதவிய விசேட காரணம் என்று எதையாவது கருதுகின்றீர்களா?

பல்கலைக் கழகத்தின் பொருளியல் துறையில் இருந்து வெளியேறிய பின்பும் தொடர்ந்து கல்வி சம்பந்தமான நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டியதுடன் தொழில் சார்ந்த நடவடிக்கைகளில் அனுபவம் பெற்றமையே முக்கிய காரணம் ஆகும். அத்துடன் பொருளியல், கணக்கியல், முகாமைத்துவம் இம் 3 துறைகளிலும் கல்வித் தகைமைகளைப் பெற்றமையால் இலகுவில் முன்னேற முடிந்தது. மேலும் விரிவுரையாளர் தொழிலை மட்டும் மேற்கொள்ளாது வங்கியில் கணக்காளர் நிர்வாகப் பதவிகளையும் பெறும் வாய்ப்பு கிட்டியமையால் அநுபவரீதியாக படித்தவற்றினைச் செயற் படுத்திக் கொள்வது இலகுவாக இருக்கின்றது.

* யாழ். பல்கலைக் கழகத்தில் 1995ஆம் ஆண்டு முகாமைத்துவத் துறைக்கென எத்தனை மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளனர்?

1995 ஆம் ஆண்டு முகாமைத்துவத் துறைக்கு 108 மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளனர்.

* தற்போது முகாமைத்துவத் துறையில் எத்தனை விரிவுரையாளர்கள் கடமையாற்றுகின்றனர்?

தற்போது நிரந்தர விரிவுரையாளராக 5 பேர் கடமையாற்றுகின்றனர். உதவி விரிவுரையாளராக 2 பேரும் இடைவரவு விரிவுரையாளராக 4 பேரும் கடமையாற்றுகின்றனர்

* தற்போது புதிய பாடத்திட்டத்தின் கீழ் உயர்தர மாணவர்களுக்கு முகாமைத்துவம் பற்றிய கல்வி அறிமுகப் படுத்தப் படக் காரணம் என்ன?

உலக ரீதியாக முன்னேறி வருகின்ற முதல் விஞ்ஞானம் முகாமைத்துவமாகும். இந்த வகையில் முகாமைத்துவம் என்றால் என்ன? இதன் பண்புகள், இதன் முக்கியத்துவம் என்பன பற்றி இளமையிலேயே மாணவர் மனதில் அறிமுகப் படுத்தவேண்டிய நிலை உள்ளது. பிற்காலத்தில் இது பற்றிய ஒரு விரிவான கல்விக்கு இது அத்திவாரமாகவும் ஆதாரமாகவும் அமையும்.

* வணிகத்துறைக்கு முகாமைத்துவத்தின் பங்களிப்புப் பற்றி யாது கூறுவீர்கள்?

இரு துறைகளும் இரு வேறுபட்ட துறைகளாகக் கருதப்பட்ட போதிலும் ஒன்றுடன் ஒன்று தங்கியுள்ளது. வணிகத்துறை பெரும்பாலும் வர்த்தக ரீதியான கோட்பாடுகள் செயற்பாடுகளுடனும் கணக்கியலுடனும் இருந்த போதிலும், முகாமைத்துவத் துறையானது எவ்வாறு நமது கற்கைநெறிகளை ஒழுங்கு படுத்தலாம் என்பதில் உதவக் கூடியதாக இருக்கும். ஒரே வகையான அம்சங்கள் இரு துறைகளிலும் காணப்பட்டாலும் (ஒரே வகையான பாட நெறி) ஒவ்வொன்றும் வித்தியாசமான நோக்கில் செல்ல வழிவகுக்கின்றது.

* முகாமைத்துவத்திற்குப் பல்வேறுபட்டவர்கள் வரைவிலக்கணங்களைக் கூறியுள்ளனர். இதில் அனுபவரீதியான வரைவிலக்கணம் என்று எதனைக் கூறுவீர்கள்?

முகாமைத்துவம் ஒரு வளர்ந்து வரும் விஞ்ஞானம் என்பதினால் பலரால் பல வரைவிலக்கணங்கள் கூறப்பட்டுக் கொண்டாலும் முகாமைத்துவம் என்பது "ஒரு செயற்பாட்டினை எவ்வாறு செய்வது என்பது" பற்றியதாகும். அதாவது "The Art of Doing Things" என்பதாகும். அத்துடன் 4Ms ஆகிய Man, Money, Machine Material என்பவற்றினைப் பயன்படுத்தி எவ்வாறு உச்சப் பயன் அடையலாம் என்பது பற்றியது என்றும் கூறலாம்.

* முகாமையாளர் என்பவருக்குப் பல பண்புகள் காணப்படவேண்டும் என்று வரைவிலக்கணப் படுத்தப்பட்டாலும் தற்கால முகாமையாளருக்கு இருக்கவேண்டிய பண்பு என்று நீங்கள் எவற்றைக் கூறுவீர்கள்?

முகாமையாளர் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது உறுதியாகவும் விரைவாகவும் சூழ்நிலைக்கு ஏற்ப தீர்மானிக்க வேண்டும். இன்றைய முகாமையாளர்கள் வலது மூளைசாலிகளாக (Right Brain Managers) தீர்மானங்களை எடுப்பர். மாறாக இடது மூளைசாலியாக தீர்மானங்களை எடுப்பவர் திறமையான முகாமையாளர் அல்ல.

சட்ட விதிகளைச் சரியாக நிர்வகிப்பதுடன் பொறுப்பு, தீர்மானங்களை மேற்கொள்ளும்போது வலது மூளை சாலியாக இருக்கவேண்டும். 'He Should not dodge Responsibilities'

* முகாமைத்துவம் சார்பான அறிவைப் பெறக்கூடிய நூல்கள் எவை என்று குறிப்பிடுவீர்களா?

முகாமைத்துவம் சார்பான நூல்கள் தமிழில் மிகவும் குறைவு. மொழி நடைகள், கலைச்சொற்கள் என்பனவே அருமை. சிறந்த நூல்கள் என்று இவ்வளவு காலமும் இங்கு வெளிவரவில்லை என்பதால் இந்தியாவில் உள்ள சிறந்த தமிழ் நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம். தற்போது இங்கு பல்கலைக் கழக ஆசிரியர்களால் வெளியிடப்படும் " முகாமை ". " முகாமை நோக்கு " போன்ற சஞ்சிகைகள் ஊடாகவும் அறிந்து கொள்ளலாம், ஆனால் ஆங்கில நூல்களே அதிகளவில் காணப்படுகின்றன. அவற்றுள் " Management Executive " என்ற சஞ்சிகை உலகப் பிரசித்தி பெற்ற புதிய முகாமைத்துவ எண்ணக் கருக்களைக் கொண்டதாகும்.

* பல்கலைக் கழக நூலகத்தினை ஏன் ஒரு திறந்த நூலகமாகப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது?

இந்தப் — பல்கலைக் கழகம் திறந்த பல்கலைக் கழகம் அல்ல. இங்கு பல்கலைக் கழகச் சட்ட ஒழுங்குகளை மீற முடியாது. காரணம் பல்கலைக் கழக மாணவர்களாக அனுமதிக்கப் பட்டவர்கள் மட்டுமே இதனைப் பயன்படுத்த முடியும்.

* எங்களுடைய முகாமைத்துவ மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் எவைஎன்று கூற முடியுமா?

முகாமைத்துவ மாணவர்கள் பலவிதமான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாகத் தமிழில் நூல்கள் இல்லாமை, ஆங்கிலம், Computer Information அதிகளவில் அவர்களுக்கு வழங்க முடியாத நிலைமை. அவை ஒருபுறமிருக்க முகாமைத்துவ மாணவர்கள் ஆங்கிலம், Computer இவை பற்றி அதிக அக்கறை செலுத்தவில்லை. இவ்வாறு மாணவர்களின் ஆங்கில, கணனி அறிவானது மழுங்கடிக்கப்படுவதற்கான அல்லது வளர்ச்சியடையாததிற்கான காரணமாகப் பின்வருவன முக்கிய இடம் பெறுகின்றது.

1 கணனி வசதியின்மை
2 ஆளணி வசதியின்மை

முகாமைத்துவத் துறையில்பயிற்றுவிப்பதாயின் குறிப்பிட்ட விடயத்தில் கூடிய அனுபவம் பெற்றுள்ளவர்களால்தான் சிறப்பாகக் கற்பிக்க முடியும். இதைவிட பயிற்றுவிக்கப் பட்டவர்களாலும் முடியும். இவ்வாறான ஆளணி மிக அருகியே காணப்படுகின்றது.

* பெண்களுக்கு முகாமைத்துவக் கல்வி எந்தளவுக்குப் பயன்படும் என்பது பற்றி என்ன கூறுவீர்கள்?

முகாமைத்துவ மட்டத்தில் ''மனித வளம், மூலவளம்'' என்ற வித்தியாசம் இல்லை. அத்துடன் முகாமைத்துவம் ஒரு அறிவு, சிந்தனா ரீதியான செயற்பாடேயாகும். உடல் ரீதியான கடின உழைப்பு இங்கு இல்லை என்பதினால் பெண்களுக்கும் முகாமைத்துவக் கல்வியானது சிறப்பாகவே அமைகின்றது எனலாம்.

* பல்கலைக்கழகப் பாடநெறி ஒன்றினை நாம் வெளிவாரியாகவும் படித்து ஒரே விதமான பட்டத்தினைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இவ்வாறான நிலையில் பல்கலைக் கழக கல்விக்கும் வெளிவாரிக் கல்விக்கும் இடையிலான வேறுபாடு என்று எதைக் கூறுவீர்கள்?

குறிப்பாக இரண்டும் நான்காண்டுப் படிப்பு ஆகும். வெளிவாரியாகப் பயிலுபவர்கள் பல்கலைக்கழக மாணவர்களைப் போலச் சிறப்பாகத் தேறுவது குறைவு. விதிவிலக்குகளும் அமையலாம். இதைவிட உள்வாரியாகப் பயிலுபவர்கள் பல்வேறு துறையை அணுகுவர். கல்வி, விளையாட்டு ஏனைய கலை நிகழ்வுகள் என்பனவற்றில் பங்குபற்றி ஒரு பல்கலைக் கழகச் சமூகமாக ஒன்று சேருவர். அதில் பல்வேறு வகையான மனித நடத்தை கொண்ட பிரிவினரைச் சந்தித்து தமது ஆளுமைகளைப் புதுப்பித்துக் கொள்ள உதவுகின்றது. (Personality Development) இவ்வாறான சந்தர்ப்பங்கள் வெளிவாரியாகப் பயில்பவர்களுக்கு இல்லை எனலாம். வெளிவாரிப் படிப்பு பெரும்பாலும் ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் படித்துப் பட்டம் பெற்று முன்னேற உகந்ததாகும்.

* தற்போது பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம் II என்றும் பிரிவு ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது அதைப் பற்றிய விளக்கம் தருவீர்களா?

வட பகுதியில் வவுனியா வளாகத்தில் 3 வருடக் கற்கைநெறி ஆகும், மரபு ரீதியாக முகாமை Iல் மாணவர்கள் சேர்க்கப்படுகின்றார்கள், மீதி மாணவர்கள் வணிகத் துறையில் சேர்க்கப் படுகின்றார்கள். இதற்கு அடுத்த படியாகவே முகாமை IIல் மாணவர்கள் சேர்கப்படுகின்றார்கள். 3 வருட அடிப்படையில் முகாமைத்துவம் சார்பான கற்கை நெறிகள் வழங்கப்படும். குறிப்பாகத் தொழில் சார்ந்த கற்கை நெறியாக அவை அமைய இருக்கின்றன. வங்கியியல் ( Banking ) கணக்கியல் ( Accounting ) போன்ற துறைகளுக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்படும். இங்கு படித்து வெளியேறுபவர்களுக்கு தற்போது B A F எனும் பட்டம் கொடுக்கப்படுகின்றது ( ஆனால் M. II படித்து வெளியேறுவர்களுக்கு வழங்கப்படும் பட்டம் பற்றி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை) இதன் மூலம் வேலை வாய்ப்புக்களைப் பெற முடி முடியும். சாதாரணமாக சில நிறுவனங்களில் நேரடியாகச் சேர வாய்ப்பு உண்டு.

* முகாமைத்துவம் I க்கான வெட்டுப் புள்ளியானது கடந்த ஆண்டு 286 இல் இருந்து 283க்கு குறைக்கப்பட்டுள்ளது இதற்கு என்ன காரணம்?

பல்கலைக்கழகத்துக்கு மாணவர் சேர்க்கப்படும் முறை தேசிய ரீதியில் அமைகின்றது. அண்மைக் காலத்தில் அதிகளவு மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு பிரதேசத்திலும் வெட்டுப்புள்ளிகள் தீர்மானிக்கப்பட்டு அதன்படியே மாணவர் அனுமதிக்கப் படுகின்றனர். இதன் பின்னர் எல்லாப் பல்கலைக் கழகத்திலும் மாணவர் பதிவு செய்த தொகை கணக்கில் எடுக்கப்படும். பற்றாக்குறை நிலவும் பட்சத்தில் தேசிய ரீதியாக வெட்டுப் புள்ளி குறைக்கப்பட்டு அனுமதி வழங்கப்படும்

* 1997ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் புதிய பாடத் திட்டம் பற்றி யாது கூற விரும்புகிறீர்கள்?

அண்மைக் கால நடைமுறையில் வேகமான வளர்ச்சி குறிப்பாக வர்த்தக வங்கிகள் அவற்றுடன் நெருங்கிய தொடர்பு உடைய பாட விதானங்கள் ஏற்கனவே மாணவருக்கு அறிமுகப் படுத்தப் பட்டு இருந்தால் அவர்களுடைய பிற்காலப் பல்கலைக் கழக கல்வி வளர்ச்சிக்கு இவை உறுதுணையாக

அமையும், பலவகையான புதிய பாட நுட்ப முறைகள், பாட விதானங்கள் பல்கலைக்கழக மட்டத்தில் பயில முயலும் போது இத்தகைய பாடங்களின் அறிமுகங்கள் உயர்தர மாணவர் மத்தியில் சேர்க்கப்படுவது சாலச் சிறப்பானதாகும்.

* முகாமைத்துவம் கற்றவர்களும், வணிக மாணி கற்றவர்களும் பெரும்பாலும் ஆசிரியர்களாகப் பணியாற்றுவதைக் காண்கின்றோம், இதற்கு என்ன காரணம்?

இதற்கான முக்கியகாரணம் படித்தவர்கள் ஆங்கிலத்தைப் புறக்கணித்தமை. அடுத்து இதற்கு மேலான உயர்கல்வியைப் பெற விருப்பம் இன்மை. அத்துடன் இந்தத் துறையில் படித்தவர்கள் London C. I. M. A. 6 பாடங்கள் பரீட்சை எடுப்பது சிரமம். ஏன் என்றால் ஆங்கில அறிவின்மை, பண நிலைமை என்பன தடையாக அமைகின்றது. குறிப்பாகத் தமிழ் மாணவர்கள் வசதியின்மை காரணமாகவே மேலும் முன்னேற முடிவதில்லை.

* பல்கலைக் கழகத்தில் பலரின் எதிர்ப்பின் மத்தியிலும் தொடரும் பகிடிவதை பற்றிய உங்கள் கருத்து என்ன?

இதற்கான முக்கிய காரணம் என்னவென்றால் 1ஆம் வருட மாணவரை 2ஆம் வருட மாணவர் இதில் ஈடுபட வைப்பர். இதனைத் தடுக்க விரும்பி 2ஆம் வருட மாணவர் ஒரு வருடம் இதனைக் கை விடுவார்களாயின் இது மாணவராலேயே தவிர்க்கப்படும். பல்கலைக் கழக வளாகத்தில் வெளியில் நடைபெறும் பகிடி வதைகளைச் சமூகம் தடுத்து நிறுத்த முடியும்.

* இறுதியாக நீங்கள் ஏதாவது பொதுவான கருத்து வழங்க விரும்புகிறீர்களா?

முகாமைத்துவம் என்பது நாட்டுக்கு நாடுமாறுபடும். இலங்கைக்கலாச்சாரம் இந்தியக் கலாச்சாரம், ஜப்பான் கலாச்சாரம் இவ்வாறு ஒவ்வொரு நாட்டின் கலாச்சாரத்திற்கு ஏற்பவும் முகாமைத்துவமானது உலகில்பரந்தளவில் காணப்படுகின்றது. இவ்வகையில் ஒவ்வொரு நாடும் தனது கலாச்சாரத்திற்கு ஏற்ப முகாமைத்துவப் பண்புகள், முகாமைத்துவப் பிரச்சினைகள், கலாச்சார ஊடுருவல் என்பனவற்றை எதிர் நோக்குகின்றது.

[இவ்வளவு நேரமும் பல சிரமங்களை நோக்காது, எமது நேர்காணலுக்கு ஒத்துழைப்பு வழங்கியும் எமது அறிவு வளர்ச்சிக்கு உங்கள் அரிய கருத்துக்களை வழங்கியும் எமக்கு ஆதரவு அளித்த முகாமைத்துவத்துறையின் தலைவரான திரு. மா. நடராஜசுந்தரம் அவர்களுக்கு எமது வணிகக் கழகத்தின் சார்பில் எனது நன்றிகளைத் தெரிவித்து இந் நேர்காணலை முடித்துக் கொள்கின்றேன்]


## யஸ்ரி - ஓய்வூதியக் காப்புறுதித் திட்டம்

இக்காப்புறுதியானது 18 — 55 வயது வரைக்கும் எடுக்கலாம், ஓய்வூதியம் 55 அல்லது 60 வயது. ஓய்வூதியப் பணம் ஒவ்வொரு காலாண்டுக்கும் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| மாதம் | 250/= | |
| காலாண்டு | 500/= | |
| அரையாண்டு | 1000/= | |
| ஆண்டு | 2000/= | தவணைக்கட்டணம் மேற்கூறிய வழிகளில் கட்டலாம். |

# இலங்கையில் மனிதவள அபிவிருத்தியும் வேலை வாய்ப்பும்

# Human Resource Development And EmPloyment of Sri Lanka

க. தேவராஜா
தலைவர் / வணிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

## 1.0 அறிமுகம்

வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் நோக்கம் கொண்ட முகாமைத்துவத்தின் பார்வையில் மனித வளம் பிரதான இடத்தைப் பெறுகின்றது. இலங்கையைப் பொறுத்த வரையில் பெருமளவாகவும், தட்டுப்பாடு இன்றியும் கிடைக்கின்ற ஒரு வளமாக மனிதவளம் அமைந்திருக்கின்ற காரணத்தால் வேலைவாய்ப்பு, வேலையில்லாத் திண்டாட்டம் என்பன மனிதவள அபிவிருத்தியுடன் தொடர்புடையனவாகவே உள்ளன. மனித வளத்தின் கேள்வியிலும் நிரம்பலிலும் சம நிலையைப் பேணுவது பெரும் சிரமமாக உள்ளது. 1978 இன் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதார தாராளமயமாக்கல் மற்றும் திறந்த பொருளாதாரக் கொள்கைகளினால் கணிசமான மாற்றம் மனித வள அபிவிருத்தியிலும் வேலைவாய்ப்பிலும் தோன்றியது. ஆனாலும் தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் கூட கல்வி கற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதில் நாடு பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளது. திறந்த பொருளாதாரக் கொள்கையின் மூலம் கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகளிலே வளர்ச்சி ஏற்பட்டாலும் அவை போதுமான வேலைவாய்ப்பை வழங்கவில்லையென்றே குறிப்பிடலாம்.

## 2.0 வேலை வாய்ப்பின் அபிவிருத்தி.

இலங்கையின் பொருளாதாரமானது பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியடைந்து வருவதனைக் காண முடிகின்றது. தொண்ணூறுகளின் ஆரம்பத்திலிருந்து எமது பொருளாதாரம் 4·3 சதவீத மெய்வளர்ச்சியையும் 3·5 சதவீதம் தலைக்கான மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பையும் கொண்டிருந்ததுடன் தலா மொத்த தேசிய உற்பத்தியாக 494 அமெரிக்க டொலரையும் கொண்டிருக்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 21·4 சதவீதத்தை விவசாயத் துறையும் 18·5 சதவீதத்தை உற்பத்தித் துறையும், 5·1 சதவீதத்தை சேவைகள் துறையும் கொண்டிருந்தன. சேவைகள் துறையைப் பொறுத்தவரை போக்குவரத்து, தொடர் பாடல்,வங்கி ஆகியனவற்றில் பெரு வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது.

மகாவலித் திட்டம், நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தால் நாட்டின் அபிவிருத்தி மிக வேகமாக அமைந்திருக்க முடிவதுடன், கிராமிய இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்பினையும் வழங்கியிருக்க முடியும், அரசினால் மிகவும் தீவிரமாகப் பின்பற்றப்பட்டு வந்த பொதுத் துறை நிறுவனங்களைத் தனியார் மயமாக்

கும் திட்டம் என்பது கூட வேலைவாய்ப்புக் களைப் பொறுத்த வரையில் அதிக நன்மை யைத் தரவில்லை. இவற்றின் அடிப்படையில் மனிதவள அபிவிருத்தியானது பெருமள வுக்குப் பொருளாதார அபிவிருத்திக்கு பொருத்தமான வகையில் பயன்படுத்தப்பட வில்லையென்றே கருதப்படமுடியும்.

## 3·0 ஊழியப்படையின் வளர்ச்சியும் வேலைவாய்ப்பும்

இலங்கையின் சனத்தொகையானது வேகமாக அதிகரித்து இன்று 1¾ கோடி மக்களைக் கொண்டிருக்கும் ஒரு நாடாக அதனை மாற்றிவிட்டது. ஆனால் சனத் தொகையின் வயதமைப்பினைப் பார்க்கும் பொழுது 1981ஆம் ஆண்டின் குடித்தொகை மதிப்பீட்டின் போது 46 சதவீதமாக இருந்த 19 வயதுக்குக் குறைந்தவர்கள் இலங்கையை ஒரு இளம் சந்ததியைக் கொண்ட நாடென் பதைக் காட்டியதுடன் ஊழியப்படையைப் பெருமளவில் கொண்டிருக்கும் நாடென்ப தையும் நிரூபித்தது. பொதுவாகவே ஊழி யப் படையென்பது வேலை செய்பவர்களை யும், வேலைக்குச் செல்ல ஆயத்தமாக இருப் பவர்களையும் அடக்குவதாகும். இந்த ஊழியப்படை 1946–81க்கு இடைப்பட்ட காலத்தில் இரண்டு மடங்காக அதிகரித்துள் ளமையைக் காணமுடியும்.

ஊழியப்படையின் அதிகரிப்பு வேகம் சனத்தொகை அதிகரிப்புடன் தொடர் புடையதாகும். இலங்கையின் ஊழியப்படை யின் வளர்ச்சியானது காலத்துக்குக் காலம் அதிகரித்து வந்தாலும் சனத்தொகையை வீழ்ச்சியடையச் செய்த குடும்பக் கட்டுப் பாட்டுத் திட்டங்கள், கல்வியறிவு, நகரமய மாக்கல், தொழில் புரியும் நிலை, கால தாமதமான திருமணங்கள் ஆகியவற்றால் எதிர்காலத்தில் ஊழியப்படையின் அதிகரிப்பு வேகம் குறைவடைய முடியும். இதனைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

### அட்டவணை 1

| குடித்தொகை மதிப்பீட்டு ஆண்டு | ஊழியப் படை ( ஆயிரத்தில்) |
|---|---|
| 1946 | 2,611 |
| 1953 | 2,993 |
| 1963 | 3,464 |
| 1968 | 4,150 |
| 1971 | 4,488 |
| 1981 | 5,105 |
| 1992 | 5,820 |

ஆதாரம்:- குடிசனமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்.

மேற்காட்டப்பட்ட அட்டவணையில் ஊழியப்படையானது காலத்துக்குக் காலம் அதிகரித்து வந்தமை யைக் காண முடிகின் றது. ஊழியப்படையின் அதிகரிப்புக்கு ஏற்ற வாறு இலங்கையில் வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கப்படவில்லை இதன் காரணமாகவே மனிதவளத்தில் ஏற்பட்ட அபிவிருத்தி வேலைவாய்ப்பில் ஏற்படவில்லையெனக் கூறப்படுகின்றது. இதனைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

## அட்டவணை 2

| குடித்தொகை மதிப்பீட்டு ஆண்டு | வேலைவாய்ப்பு (ஆயிரத்தில்) |
|---|---|
| 1946 | 2612 |
| 1953 | 2993 |
| 1963 | 3200 |
| 1968 | 3674 |
| 1971 | 3649 |
| 1981 | 4119 |
| 1992 | 4860 |

ஆதாரம்:- குடிசன மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்.

மேலே, காட்டப்பட்ட அட்டவணைப் படி வேலைவாய்ப்புக்கள் அதிகரித்து வருவதனைக் காண முடிகின்றது. இருந்த போதும் ஊழியப்படையின் அதிகரிப்புக் கேற்ப வேலைவாய்ப்பு அமையவில்லை. தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதில் இலங்கைஅரசுபெரிதும்பங்களிக்கவில்லைஎன் பதனைப் புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டு கின்றன. பொதுவாக ஊழியப்படையின் அதிகரிப்பு வேகம் இலங்கையில் சராசரியாக 2.3 சத வீதமாக இருக்கும்பொழுது வேலை வாய்ப்பின் அதிகரிப்பு 1.6 சதவீதமாக மட்டுமே இருந்தது. இதனால் வேலை யில்லாத் திண்டாட்டம் தோன்றும் நிலை உருவானது.

இலங்கையின் ஊழியப்படையானது பல்வேறு துறைகளிலும் வேலைக்கமர்த்தப் பட்டிருப்பதனைக் காண முடியும். இதில் பெரும் பங்கினர் விவசாயம், கால்நடை வளர்ப்பு காட்டுத்தொழில், மீன்பிடித் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டிருப்பதனைக் காணமுடியும். பின்வரும் அட்டவணை துறை. ரீதியான வேலைவாய்ப்பினைக் காட்டு கின்றது.

## அட்டவணை 3

| துறை | | வேலைவாய்ப்பு (ஆயிரங்களில்) |
|---|---|---|
| விவசாயம், காட்டுத்தொழில் | ... | 1905 |
| கடற்றொழில் | ... | |
| சுரங்கமும் கல்லுடைத்தலும் | ... | 118 |
| மின்சாரம், வாயு, தண்ணீர் | ... | 177 |
| பொருளுற்பத்தி | ... | 646 |
| நிர்மாணம் | ... | 262 |
| மொத்த சில்லறை வியாபாரம் | ... | 558 |
| போக்குவரத்தும் களஞ்சியப்படுத்தலும் | ... | |
| தொடர்பாடலும் | ... | 268 |
| நிதியும் காப்புறுதியும் | ... | 82 |
| தனிப்பட்ட சேவைகள் | ... | 816 |
| ஏனையவை | ... | 245 |
| மொத்தம் | | 4858 |

ஆதாரம்:- 1992 குடிசன மதிப்பு ஆய்வு.

மேற்காட்டிய அட்டவணையில் விவசாயம் காட்டுத்தொழில், மீன்பிடி ஆகிய வற்றிலேயே பெருந்தொகையான ஊழியர் பணியாற்றுகின்றனர். குறிப்பாக மொத்த ஊழியப்படையில் 30 சத வீதமானோர் இத்தொழிலில் ஈடுபட்டிருப்பதனைக்காண முடிகின்றது. இதேபோல் மொத்த சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டிருப்போர் 11.5 சத வீதத்தைப் பெற்று மூன்றாம் இடத்தைப் பெறுகின்றனர், அதே நேரம் பொருளுற்பத்தியில் ஈடுபட்டிருப்போர் 13சத வீதமான இடத்தைப்பெற்று வேலைவாய்ப்பில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருப்பதனைக் காணலாம். இவ்வாறு பல்வேறு துறைகளிலும் வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டு ஊழியப் படையின் பெரும் பங்கினரின் மனித வளம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

## 4·0 வேலையின்மை

இலங்கையில் அதிகரித்து வந்த மனித வளத்தைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் கடந்த இரு தசாப்தங்களாக வேலையின்மை என்பது இலங்கையில் ஒரு முக்கிய பிரச்சினையாக தலைதூக்கியுள்ளது. பொதுவாக ஊழியப்படையில் 18 சத வீதத்தினர் வேலையின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதனைக் காண முடிகின்றது. அத்துடன் கீழ் உழைப்பினாலும் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். வழமையில் ஊழியப் படையில் 20–25 சத வீதத்தினர் கீழ் உழைப்பில் உள்ளனர். இதனால் வேலையின்மையும் கீழ் உழைப்பும் பெருமளவில் அமைந்திருப்பதனைக் காணமுடிகின்றது. இதனைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

### அட்டவணை 4

இலங்கையின் வேலையற்றோர்

| ஆண்டுகள் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1963 | 199,400 | 65,480 | 264,970 |
| 1968 | 312,000 | 152,800 | 464,200 |
| 1971 | 474,065 | 197,917 | 671,982 |
| 1981 | 498,726 | 306,417 | 857,168 |
| 1991 | 455,605 | 510,296 | 965,901 |

ஆதாரம்:- குடிசன மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் வடகிழக்கு மாகாணங்கள் தவிர.

மேற்காட்டிய அட்டவணைப்படி வேலையற்றோர் தொகையானது காலத்துக்குக் காலம் அதிகரித்து வந்திருப்பதனைக் காணமுடிகிறது. அதுவும் பெண்களது வேலையின்மையே எண்பதுகளில் மிக உயர்நிலையில் இருப்பதனை எடுத்துக் காட்டுகின்றது. மனித மூலவளம் இலங்கையில் பெருமளவுக்குப் பயன்படுத்தப்படவில்லை என்பது இதனால் வெளிப்படுகின்றது.

## 5·0 மனித வலுவின் இடப்பெயர்வு.

இலங்கையில் வேலையற்றோர் தொகை அதிகரித்து வந்த காரணத்தால் தோன்றிய முக்கிய விளைவே இடப்பெயர்ச்சி ஆகும். உயர் தொழில் தகமைகளைக் கொண்ட உயர் மட்ட மனித வலுவினர் இலங்கையிலிருந்து ஐக்கிய இராட்சியம், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு முதலில் இடம்பெயர்ந்தனர். இது பற்றிய ஆய்விலே எழுபதுகளில் 1254 மருத்துவர்களும் 1974 பொறியியலாளர்களும் 499 கணக்காளர்களும் 141 பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் 160 சட்டத்தரணிகளும் 537 தொழில் நுட்பவியலாளர்களும் குடிபெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்ற உயர்மட்ட மனித வலுவாகும். இவர்களின் இடப்பெயர்வு முதலில் மேலைத்தேய நாடுகளாக இருந்தாலும்

எழுபதுகளின் இறுதிப் பகுதியில் அது பெருமளவில் மேற்காசிய நாடுகளை நோக்கியதாக இருந்தது.

தேர்ச்சி பெற்றிராத மனித வலுவினர் மேற்காசிய நாடுகளுக்கு குடிபெயர்ந்து சென்றமை வேலையில்லாப் பிரச்சினையைப் பெருமளவுக்குக் குறைத்திருந்தது. மறுபுறத்தில் அவர்களது கட்புலனாகா ஏற்றுமதியினால் இலங்கை பெருமளவு அன்னியச் செலாவணியையும் உழைத்துக்கொள்ள முடிந்தது. எண்பதுகளின் நடுப் பகுதிகளிலிருந்து தேர்ச்சி பெறாத மனித வலுவினர் மேலைத் தேய நாடுகளான பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ் போன்றவற்றுக்கு இடம்பெயரத் தொடங்கினர். வீட்டுப் பணிப்பெண்கள் என்ற நிலையில் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கி பெருமளவான பெண்கள் இடம் பெயர்ந்தனர். இவற்றின் அடிப்படையிலே குடிப்பெயர்ச்சியானது பெருமளவான வேலையில்லாப் பிரச்சினையைக் குறைக்க உதவியுள்ளது.

## 6·0 கல்வியும் மனித மூலவள அபிவிருத்தியும்

இலங்கையில் நாற்பதுகளின் நடுப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வியானது பொதுக் கல்வியிலும் உயர்கல்வியிலும் பெருமளவான மூலவளங்களை முதலிட வகை செய்துள்ளது. ஆனாலும் இக் கல்வி மாணவர்களிடையே தொழில் நுட்பத் திறன்களை விருத்திசெய்ய உதவவில்லை. இதனால் கல்வியில் மேற்கொள்ளப்பட்ட முதலீடானது நாட்டிற்கும் கல்வியைப் பெற்றுக்கொண்டவர்களுக்கும் ஒரு வகையில் மனித மூலவளத்தை விருத்தி செய்யத் தவறிவிட்டது. பெரும்பாலும் பாடசாலையில் சேருகின்றவர்களில் 40 சதவீதத்தினர் இடைத்தரக் கல்வியைப் பெறாமலும், இடைத் தரக் கல்வியைப் பெறுவோரில் 80 சதவீதத்தினர் உயர்கல்வியைப் பெறாமலும் விலகிச் செல்கின்றனர் என ஆய்வாளர் கருதுகின்றனர். வேலையற்ற இளைஞர்களுள் 48.7 சதவீதத்தினர் பத்தாம் தரத்தினை அடைவதற்கு முன்பாகவும், 39 சதவீதத்தினர் க. பொ. த. சாதாரண வகுப்பில் சித்தியடைந்த பின்னரும் தொழிற் படையில் சேர்ந்துள்ளனரென 1992ன் தொழிற் படை மதிப்பீடு காட்டுகின்றது.

தொழில் புரிவோர் கல்வித் தரத்தினை அவதானிக்கையில் கல்வி தொழிலாளர் மீது பெரிய விளைவைக் கொண்டுவரவில்லையென்றே குறிப்பிடலாம். தொழில் பெற்றவர்களில் 23 சதவீதத்தினர் 1 — 4 ம் தரக் கல்வியையும் 45 சதவீதத்தினர் 5 – 9 ம் தரக் கல்வியையும் பெற்றவர்களாகவே காணப்படுகின்றனர். கூடிய கல்வித்தரம் கொண்டோர் 23 சதவீத தொழிலாளர்களாகவே அமைந்துள்ளனர்.

## 6·1 உயர் மனிதவள அபிவிருத்தி

உயர்கல்வியைப் பொறுத்த வரையில் பட்டதாரிகளிடையேயும் வேலையில்லாப் பிரச்சினை நிலவிவருகின்றது. குறிப்பாக கலைப் பட்டதாரிகளே வேலை செய்வோரிலும் வேலையற்றிருப் போரிலும் முதலிடம் பெறுகின்றனர். கிராமப்புறப் பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்விக்கு போதுமான இடம் வழங்கப்படாமையினாலேயே கலைப் பட்டாதாரிப் படிப்பை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் கிராமப்புறப் பிள்ளைகளுக்கு ஏற்பட்டுள்ளது. தொழில் நுட்பக் கல்வி பற்றி போதிய அக்கறை எடுக்கப்படாமையே எமது கல்வி, நாட்டின் அபிவிருத்திக் கேற்ற வகையில் விருத்தி செய்யப்படாமைக்குக் காரணமாகும்.

உயர்மட்ட ரீதியிலான கல்வி வளர்ச்சியில் இலங்கை அதிக அக்கறை காட்டவில்லை. மொத்த தேசிய உற்பத்தியில் ஒரு சதவீதத்துக்கும் குறைவாகவே பல்கலைக் கழக செலவினங்கள் அமைந்திருப்பது இதனைச் சுட்டிக் காட்டுகின்றது. உயர் கல்வியில் தற்போது பல வரையறைகள் இருந்த போதும் பலதரப்பட்ட உயர் தொழிற்

துறைகளில் உயர்கல்விக்கான வசதிகளைப் பல்கலைக் கழகங்கள் வழங்கி வருகின்றன. எண்பதுகளின் பிற்பகுதியில் பல்கலைக் கழகங்களின் எல்லாக் கற்கை நெறிகளுக்கும் வருடாந்தம் 6000 பேர் சராசரியாக அனுமதிக்கப்பட்டு வந்தனர். இதில் சராசரியாக 5000 பேர் பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்து வருடாந்தம் வெளியேறினர். அதே நேரம் பல்கலைக் கழக அனுமதி கிடைக்காதோரில் ஒரு பகுதியினர் வெளிவாரிப் பட்டதாரிகளாகப் பயின்றுள்ளனர். கலை, விஞ்ஞானம், வர்த்தகம், சட்டம் என்ற துறைகளில் வெளிவாரி மாணவர்களாகப் பதிவுசெய்துகொள்ளும் மாணவர்களில் பெரும் பங்கினர் கலைத்துறையிலேயே உள்ளனர். குறிப்பாகக் கலைத்துறையில் வருடாந்தம் சராசரியாக 5000 பேர் வெளிவாரியில் பதிவு செய்தாலும் அதில் அரைப்பங்கினர் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றி இறுதியில் 20 சதவீதத்தினர் மட்டுமே பட்டம் பெற்று வெளியேறுவதனைக் காணமுடிந்துள்ளது. இது போன்றே சட்டத்துறையில் 1985/86 கல்வியாண்டில் 3263 வெளிவாரிக்கு பதிவு செய்து அதில் 337 பேர் மட்டுமே பரீட்சைக்கு தோற்றி இறுதியில் 71 பேர் மட்டுமே அப்பரீட்சையில் சித்திபெற்றனர் என்பதனால் பட்டதாரிகளை உருவாக்குவதில் வெளிவாரித்துறையில் கட்டுப்பாடுகள் இருப்பதனை உணரமுடிகின்றது.

இலங்கையிலுள்ள 8 பல்கலைக் கழகங்களைவிட திறந்த பல்கலைக் கழகம் என்பதும் உயர் மனிதவள அபிவிருத்தியில் முக்கிய பங்காற்றுகின்றது. இங்கு உயர் தொழிற் கல்வியையும், விஞ்ஞானம், புடைவைத் தொழில் நுட்பம், பொறியியல், சட்டம், முகாமைத்துவம், கல்வி, ஆங்கிலம் தொழிற் றுணிவு ஆகியவற்றில் பயிற்சியும், பட்டங்களும் டிப்புளோமாக்களும் வழங்கப்படுகின்றன. ஆசிரியர்களின் திறமையை அதிகரிக்க கல்வியில் பட்டப்பின் படிப்பு டிப்புளோமாவும் வழங்கப்படுகின்றன. இதேபோல் உயர் தொழில் தகைமைகளை வழங்குகின்ற நிறுவனங்களின் வரிசையிலே இணைந்த பல் கலைக்கழக கல்லூரிகளும், தொழில் நுட்பக் கல்லூரிகளும், காணப்படுகின்றன. அத்துடன் கணக்காளர் சான்றிதழை இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனமும், பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனமும் வழங்கி வருகின்றன. இலங்கைச் சட்டக் கல்லூரியினால் நடாத்தப்படுகின்ற சட்டத் தரணிகள் பரீட்சை, தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற டிப்புளோமாப் பரீட்சை என்பன உயர் தொழில்களுக்குரிய மனித வளத்தை விருத்தி செய்வனவாக அமைந்துள்ளன.

## 6.2 நடுத்தரமட்ட மனிதவள அபிவிருத்தி

நடுத்தர மட்டத்தைச் சார்ந்த மனித வள அபிவிருத்தித் திட்டங்கள் இலங்கையில் கணிசமான அளவில் இடம்பெற்று வருகின்றன. டிப்புளோமா அல்லது அதற்கு நிகரான மட்டத்தில் சான்றிதழ் வழங்கும் பல நிறுவனங்கள் நடுத்தர மட்டத்தவருக்கான மனிதவள அபிவிருத்தித் திட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. தொழில் நுட்பக் கல்லூரிகள், அரச பயிற்றும் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றன மனித வளத்தை விருத்திசெய்வனவாக உள்ளன. பெரும்பாலும் 1-3 வருடங்களுக்கிடையிலான பயிற்சிநெறியை அடக்கிய நடுத்தர மட்ட மனிதவள அபிவிருத்தி இலங்கைக்கு மிக வேண்டப்படுவதாக உள்ளது. இதற்கான பயிற்சிநெறிகள் தொழில் சார்ந்த கற்கை நெறிகளாக இருக்கின்றமையால் இலங்கையில் பெரிதும் விரும்பப்படுவதாக உள்ளன.

## 6.3 கீழ்மட்ட மனிதவள அபிவிருத்தி

இலங்கையிலே அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றால் முறை சார்ந்த வகையிலும் முறைசாராத வகை

யிலும் வழங்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் கீழ்மட்ட மனித வளத்தை விருத்திசெய்வன வாக உள்ளன. இளவயதில் பாடசாலையை விட்டு விலகும் மாணவர்களுக்கு 6—12 மாதங்களுக்கிடையே வழங்கப்படும் பயிற்சி நெறியாக இவை அமைந்திருக்கும். தொழில் நுட்பக் கல்லூரிகள், தேசிய பயிலுனர் சபை ஆகியவற்றால் வழங்கப்படும் கைவினைப் பயிற்சி கீழ்மட்ட மனித வளத்தை விருத்தி செய்யும் நடவடிக்கையில் முக்கியமான தாகும். இதேபோல் தொழிற் திணைக்களத் தினால் வழங்கப்படும் தொழில் முன் னிலைப் பயிற்சியானது மனிதவள அபிவிருத் தியின் முக்கிய நடவடிக்கையாகும், இவற் றின் மூலம் மேசன், தச்சுத்தொழில், மோட் டார் இயந்திரம் திருத்துதல், சுழாய் ஒட்டு தல் தரவேலைப்பயிற்சி போன்றன முக்கியம் பெறும். தொழில் முன்னிலைக்கல்வி ஆணைக் குழுவின் அறிக்கையின்படி ஏறக்குறைய 1200 பதிவுசெய்யப்பட்ட முகவர் நிலையங் களும் 1000க்கும் மேற்பட்ட பதிவு செய்யப் படாத முகவர் நிலையங்களும் கீழ்மட்ட மனிதவளத்தின் விருத்தியுடன் தொடர்பு பட்டுள்ளன.

## 7·0 முடிவுரை

இலங்கையிலுள்ள மனிதவள அபி விருத்தித் திட்டங்களைப் பொறுத்தவரையில் அரச, தனியார், அரச சார்பற்ற நிறுவனங் களின் நிகழ்ச்சித் திட்டங்களையே பெரிதும் அடக்கியுள்ளன. கல்வி முறையில் அடிப் படையான மாற்றம் ஏற்படாதவரை மனித வள அபிவிருத்திக்கான திட்டங்கள் பெரிதும் வெற்றியளிக்கப் போவதில்லை. இங்கு பரீட் சையை நடாத்தி சான்றிதழ் வழங்குவ தென்பதே பொதுவான குறைபாடாகும். எனவே தொழில்சார் கல்விநெறிகள் ஆரம் பிக்கப் படுவதன் மூலமாகவே மனிதவள அபிவிருத்தியை நாட்டின் தேவைக்கேற்ப விருத்தி செய்ய முடியும்.

தற்காலத்தில் மனிதவள அபிவிருத்திக் கென செலவிடப்படும் வளங்களின் தொகை தேவைப்படும் அளவைவிடக் குறைவாகவே உள்ளது. இதன் காரணமாகக் கிராமப்புற, நகரப்புற வறிய மக்களிடையேயும், வேலை யற்றிருப்போரிடையேயும் ஒரு குறிப்பிடத் தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் நிலையில் மனிதவள அபிவிருத்தித்திட்டங்கள் இல்லை சுயதொழில் வாய்ப்பினை அதிகரிப்பதற் கான பயிற்சித் திட்டங்கள் சிறந்தமுறையில் அமையாமையால் வேலையில்லாப் பிரச் சினையைக் குறைக்கும் மனிதவள அபி விருத்தி இலங்கையில் மிகக் குறைவென்றே கூறிவிடலாம். தற்போதைய மனிதவள அபிவிருத்தித் திட்டத்தின் உள்ளடக்கம், அவை வழங்கப்படும் முறைகள் என்பன நாட்டின் தேவைக்கேற்றவாறு இல்லை. அரச, தனியார், அரச சார்பற்ற நிறுவனங் களினால் வழங்கப்படுகின்ற மனிதவள அபி விருத்திக்கான பயிற்சி நெறிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நாட்டின் தேவைக்கேற்றவாறு அமைக்கப்படுமாயின் அது வேலைவாய்ப் பினை அதிகரித்து வேலையில்லாத் திண் டாட்டத்தினைக் குறைக்கக்கூடிய மனிதவள அபிவிருத்தித் திட்டங்களாக அமைய முடி யும் என்பதில் ஐயமில்லை.


### ஆரோக்கியா - காப்புறுதித் திட்டம்

வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் திவி திளின, விவாஹ தயா, யஸ இசுரு, மினிமுது, ஜனசெத மற்றும் களன மித்துரு, ஆகியஆயுள் காப்பீட்டுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்பவர்களுக்குத் தற்போது ஆரோக்கியா என்ற பெயரில் மற்றொரு அனுகூலம் கிடைக்கின்றது. காப்புறுதிக் காலத்திற்குள் பாதிப்பு நடந்தால் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

# முகாமைத்துவமும் அதன் செயற்பாடுகளும்
## Function Of Management

நாமகள் குருநாதன்
(பழையமாணவி)

## 1. முகாமைத்துவம் அதன் அறிமுகம்


முகாமைத்துவமானது இன்று எல்லாத் துறைகளிலும் வேண்டப்படுகின்ற ஓர் கருமமாகும். அதன் காரணமாகவே மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம், போல் வளர்ந்து வரும் துறையாக முகாமைத்துவத் துறையும் மாறியுள்ளது. மனிதனுக்கு முகாமைத்துறையின் வளர்ச்சி அவசியம் எனக் கருதப்படுவதால் முகாமைத்துறையினை வேகமாக வளர்க்க வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. முகாமைத்துறையின் வளர்ச்சி வேகம் உயர்வாகும். மேலைத்தேய முகாமைத்துவ கொள்கைகளும் யப்பானிய முகாமைத்துவ கொள்கைகளும் தனித்தனியாக வளர்ச்சியடைந்து வருகின்றன. இதன் காரணமாகவே முகாமைத்துவம் சம்பந்தமாக பல நூல்கள் வெளி வருவதுடன் அதற்கான பல வரை விலக்கணங்களும் வகுக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவம் பற்றி பல்வேறு வரைவிலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. முகாமைத்துவத்துக்கான வரைவிலக்கணத்தைப் பின்வருமாறு கூறலாம். ''எதிர் பார்க்கக் கூடிய நோக்கங்களை வினைத்திறனாகவும், வெற்றிகரமாகவும் அடைந்து கொள்வதற்கு நிறுவனத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட பௌதீக வளங்களையும் மனித வளங்களையும் ஒன்றிணைத்து தொடர்பு படுத்தி செயற்படுத்தக்கூடிய கருமங்கள்'' முகாமைத்துவமாகும்.

பீற்றர் டிறக்றர் (Peter Drecker) எனும் முகாமைத்துவ அறிஞன் முகாமைத்துவத்திற்கான வரைவிலக்கணத்தைப் பின்வருமாறு கூறுகிறார். ''நிறுவனத்தின் இலக்கினை அடைவதற்காக உதவும் ஒரு கருமமே முகாமைத்துவம்'' ஆகும் இதனடிப்படையில்

i) திட்டமிடல்
ii) ஒழுங்கமைத்தல் அல்லது நிறுவன அமைப்பு
iii) வழிநடத்தல்
iv) கட்டுப்படுத்தல்

ஆகிய 4 தொழிற்பாடுகளையும் எந்தக்கருமம் நிறைவேற்றுமேயானால் அது முகாமைத்துவமாக அமைய முடியும் எனக் கூறப்படுகிறது. இதற்கென Peter Drecker இனால் பின்வரும் வரைபடம் விதந்துரைக்கப்பட்டுள்ளது.




## 2. முயற்சிகள் சார்பாக ஆர்வம் காட்டக்கூடிய கட்சியினர்

நிறுவனத்தின் மீது தொடர்புகொண்டு ஆர்வம் அல்லது அக்கறை கொள்ளக்கூடிய பிரதான கட்சியினர் வருமாறு

i) உரிமையாளர்கள்
ii) வாடிக்கையாளர்கள்
iii) ஊழியர்
iv) சமூகம்

இதனைப் பாய்ச்சல் வரைபு மூலம் பின்வருமாறு காட்டலாம்.




## 3. முகாமைத்துவச் செயற்பாடுகள் அல்லது முகாமைத்துவக் கருமங்கள்

நிறுவன அமைப்பொன்றின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு உள்ளீடுகள் மிக இன்றியமையாதவை. உள்ளீடுகள் மூலம் வெளியீடு அதாவது பொருள்கள் அல்லது சேவைகள் பெறுவதற்கும் பயன்படுத்தப்படும் அனைத்துக் கருமங்களும் முகாமைத்துவம் எனப் புரிந்து கொள்ளமுடியும். முகாமைத்துவத்தின் பணிகளைப் பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

i) திட்டமிடல்
ii) ஒழுங்கமைத்தல்
iii) வழிநடத்தல் அல்லது நெறிப்படுத்தல்
vi) கட்டுப்படுத்தல்

## 4. திட்டமிடல்

முகாமைத்துவத் தொழிற்பாட்டில் திட்டமிடலானது மிக முக்கியமானதாகக் கருதப்படும். இது முகாமைத்துவத் தொழில்பாடுகளில் ஒரு முன்னோக்கல் ஆகும். ஒரு நிறுவனம் தான் அடைய வேண்டிய நோக்கத்தை நிர்ணயித்து அதனை எவ்வாறு அடைந்துகொள்ள முடியும் என்பதனை வரையறுத்துக் கொள்வதே திட்டமிடல் ஆகும். எனவேதான் "எதிர்காலத்துக்கான நடைமுறைகளை எடுத்துக்கூறும் முகாமைத்துவக் கருமமாகத் திட்டமிடல் அமைந்து இருக்கிறது."

தற்காலத்தில் முகாமையாளர்கள் அடிக்கடி மாறுகின்ற பொருளாதாரச் சூழலில் பணியாற்றுகின்றனர். இதனால் எந்தவொரு கருமத்தினையும் திட்டமிட்டால் மட்டுமே எத்தகைய சூழலிலும் அதனை அவர்கள் அடைந்து கொள்ள முடியும். எனவேதான் நிறுவனமொன்றின் வளர்ச்சிக்குத் திட்டமிடல் அடித்தளமாக அமைகின்றது. எனவேதான் ஏனைய முகாமைத்துவக் கருமங்கள் திட்டமிடலில் இருந்து ஆரம்பமாவதாகக் கொள்ள முடியும்.

எனவே திட்டமிடல் என்பது "நிறுவனங்கள் எதிர்பார்க்கக்கூடிய குறிக்கோள்களை உச்சளவில் அடைந்து கொள்வதற்கு அதனது எதிர்கால நிலைமைகளை ஒழுங்கமைத்துக் கொள்ளும் செயற்பாடுகள் திட்டமிடல்" எனப்படும். எனவே இத்திட்டமிடலில் நாங்கள் எங்கு இருக்கின்றோம்,

எங்கு செல்ல விரும்புகின்றோம் என்பதற்கான இடைவெளியை நிரப்பும் வேலைகள் இடம்பெறுகின்றன எனக் கூற முடியும்.

## 4:1 திட்டமிடலின் முக்கியத்துவம்

i) நிறுவனங்கள் எப்பொழுதும் மாற்றமடையக் கூடிய சூழ்நிலைகளில் செயற்படுவதால் நிச்சயமற்ற நிலைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படலாம். இந்த நிச்சயமற்ற நிலைமைகளினை வெற்றிகரமாக எதிர் நோக்குவதற்கு திட்டமிடல் மிகமிக இன்றியமையாத முகாமைத்துவக் கருமங்களில் ஒன்றாகும்.

ii) வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி உச்சப்பயன் பெறுவதற்கு திட்டமிடல் அவசியமாகும்,

iii) திட்டமிடல் நிறுவனங்களினது நிர்வாகத்தை எளிதாக்குகின்றது. அதாவது நிறுவனங்கள் எதிர்பார்க்கக் கூடிய குறிக்கோள்கள் நிறைவேறி விட்டனவா என நிச்சயிப்பதற்கு திட்டமிடல் அவசியமாகின்றது.

iv) சிக்கனமாகச் செயற்பாடுகளை மேற்கொள்ளவும், உற்பத்திச் செலவை குறைத்து இலாபத்தை உயர்த்திக் கொள்ளவும் திட்டமிடல் வழிவகுக்கின்றது.

v) போட்டியாளர்களின் அச்சுறுத்தலைச் சமாளித்து போட்டியில் வெற்றி பெறுவதற்கு திட்டமிடல் உதவுகின்றது.

## 5. ஒழுங்கமைத்தல்

முகாமைத்துவத்தில் ஒழுங்கமைத்தல் ஓர் பிரதான செயற்பாடாகும். ஓர் நிறுவனத்தில் தனியொருவரால் சகல செயற்பாட்டையும் மேற்கொள்ள முடியாது. இதனால் பலர் ஒன்று சேர்ந்து செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். எனவே ஒழுங்கமைத்தல் எனும் போது ''நிறுவனத்தினது நோக்கத்தினை அடையாளம் கண்டு அந் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகளை வரிசைப்படுத்தி ஒத்த செயற்பாடுகளை ஒன்றாக்கி அதாவது தொகுதியாக்கி அச்செயற்பாடுகளை மேற் கொள்ளும் பொருட்டு அதிகாரம் பொறுப்புக்களை ஒதுக்குதல் ஆகிய சகல நடவடிக்கைகளையும் ஒழுங்கமைத்தல்'' எனப்படும்.

பாரிய நிறுவனங்களிலேயே இவ் ஒழுங்கமைப்புக் காணப்படும், சிறிய நிறுவனங்களில் இவ்வாறான ஒழுங்கமைப்புக் காணப்படுவதுமில்லை, அவசியமுமில்லை.

உதாரணம்:-

வைத்தியசாலை, பல்கலைக்கழகம், கச்சேரி போன்ற பாரிய அமைப்புக்களில் இவ்வாறான ஒழுங்கமைப்பினைக் காணலாம்.

## 5:1 நிறுவனத்தின் ஒழுங்கமைத்தல் செயற்பாடுகள்

i) தேவையான வளங்களைத் திரட்டுதல்.

ii) அவதானிக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை இனங்காணல்.

iii) அவைகளை உப கருமங்களாக வகுத்தல்.

iv) அவற்றுக்கான பதவிகளை வகுத்தல்.

v) பல்வேறு பதவிகளுக்கான அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் ஒப்படைத்தல்.

vi) கருமங்களை ஒன்றிணைத்தல்.

## 5:2 முகாமைத்துவத்தின் அதிகாரங்களும் பொறுப்புக்களும்

ஒரு நிறுவனத்தின் அதிகாரம், பொறுப்பு எனும் இரு பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதிகாரம் எனப்படு

வது ''ஒன்றைச் செய்வதற்கான உரிமை'' ஆகும். அதாவது ''குறித்த பதவிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு பதவிவழி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டளைகள் அதிகாரங்கள்'' எனப்படும்.

ஓர் நிறுவனத்தைப் பொறுத்தவரை கூடுதலான அதிகாரம் காணப்படின் அது கூடுதலாகத் தீர்மானத்தைச்செய்கின்ற உரிமையாளரைக் குறிக்கின்றது. ஓர் நிறுவனத்தில் ஆகக்கூடுதலான அதிகாரத்தினைக் கொண்டிருப்பவர் தீர்மானம் எடுத்தல் தொடர்பாக கூடுதலான அறிவாற்றலைக் கொண்டிருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொறுப்பு என்பது ''ஒன்றை மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு ஆகும்''. அதாவது பதவி வழி அலுவலர்கள் குறித்த பணிகளை மேற்கொள்வதற்கு சில கட்டுப்பாடுகளைத் தாங்கிக்கொள்வது பொறுப்புக்கள் எனப்படும். இவ்வாறு பொறுப்புக்களை ஊழியர்களுக்கு வழங்கும்போது அப்பொறுப்புக்களுக்கேற்ப அதிகாரங்களையும் வழங்க வேண்டும். இதனையே ''கையளிப்பு'' என அழைப்பர். ஓர் நிறுவனத்தில் திறமையான கையளிப்பு இடம் பெறும்போது அந்நிறுவனம் திறமையாக இயங்க முடியும். கையளிப்பு எனப்படுவது தனிப்பட்டவர் அல்லது குழு இன்னொரு தனிப்பட்டவர் அல்லது குழுவிற்கு பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் வழங்குவதனைக் குறிக்கும். முகாமையாளர் ஊழியருக்குரிய கையளிப்பினை வழங்குகின்றனர்.

ஒரு நிறுவனத்தில் கையளிப்பினை ஏற்கும் போது நிறுவனத்தில் உள்ள அங்கத்தவர்கள் அதிகாரம், பொறுப்புக்களை ஏற்று செயற்பாடுகளை நிறைவேற்றுகின்றார். அப்போது அது தொடர்பான விளைவுகளுக்குப் பொறுப்புடையவர் ஆகின்றனர். இதனைப் ''பதிலளிக்க வேண்டிய பொறுப்பு (Accountability)'' என்பர்.

முகாமையாளரைப் பொறுத்து அவர் தமது செயற்பாடுகளுக்கும் மட்டுமன்றி தன்கீழ்ப் பணிபுரிபவர்களின் செயற்பாடுகளுக்கும் பதில் அளிக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளார்.

குறித்த பணிகளை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டு, அதிகாரங்கள் பெற்றுக் கொண்டதும் தமது பணிகள் பற்றி உயர் முகாமையுடன் ஏற்படக்கூடிய தொடர்பு நட்பாக அல்லது பொறுப்பாக அமைந்து விடுகின்றது. உத்தியோகத்தர்கள் அதிகாரங்களைப் பெற்றுக் கொண்டதும் பொறுப்புக்களுக்கு அவர் கட்டுப்பட்டவராக மாறிவிடுகின்றார். அதிகாரங்கள் ஒப்படைக்கக்கூடியது. ஆனால் பொறுப்புக்கள் ஒப்படைக்க முடியாதவை.

## 5:3 தலைமைத்துவமும் அதன் இயல்புகளும்


நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு விருப்பமும், நம்பிக்கையும், பொறுப்புணர்ச்சியும் கொண்டிருப்பதும் தனது உதவியாளர்களுக்கு சிறந்த வழிகாட்டல் வகுப்பதுமான கருமத்திறன்களே ''தலைமைத்துவம்'' எனப்படும். பிறரை வழிநடத்தும் எந்த ஒருவருக்கும் தலைமைத்துவம் அவசியம்.

உதாரணம்:

i வங்கியின் முகாமையாளர்
ii ஓர் பாடசாலையின் அதிபர்
iii விளையாட்டுக் குழுவின் தலைவர்.

தலைமைத்துவமானது ஓர் இயங்கும் செயற்பாடு ஆகும். அதாவது தலைமைத்துவமானது மக்களுடன் தொடர்புடையது. மக்களெனும்போது ஊழியராகவோ அல்லது தலைவரைப் பின்பற்றுபவராகவோ காணப்படலாம். தலைமைத்துவத்தை ஏற்பவர்கள் வலுவினைக் கொண்டிருக்க வேண்டும். வலு எனப்படுவது ஒன்றைச் செய்வதற்கான ஆற்றலைக் குறிப்பிடும். ஒருவர் வலு அல்

ல்து ஆற்றலை கொண்டிருப்பதன் மூலம் பிறர் மீது செல்வாக்குச் செலுத்தி அவர் களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.




ஒருவருக்கு தலைமைத்துவமானது பல முறைகளில் ஏற்படுகின்றது.

i மரபு ரீதியாக ஏற்படுகிறது
( Ti aditional Leadership )
அரசன் —> இளவரசன்

ii தெரிவின் மூலம் ஏற்படுகின்றது.
உ + ம் தேர்தல் மூலம் ஜனாதிபதி தெரிவு செய்யப்படுதல்

iii குறிப்பிட்ட பதவிக்கு நியமிக்கப்படுப வர் மூலம்.
உ + ம் முகாமையாளர்

iv ஆளுமை அடிப்படையிலான தலைவர்
உ + ம் நெப்போலியன், கிட்லர்.

## 5:4 ஓர் சிறந்த தலைமைத்துவத்தினைக் கொண்டிருப்பவர்பின்வரும் பண்புகளைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

i) மனித நடத்தையினைச் சரியாக விளங்கிக்கொள்ளக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும். அதாவது பிறருடன் இணைந்து வேலைசெய்தல் மற்றையோரை விளங்கிக் கொள்ளுதல், மற்றையோரை ஊக்கப்படுத்தல், என்கின்ற பண்புகளை ஓர் தலைமைத் துவத்தினை ஏற்பவர் கொண்டிருக்க வேண்டும். இதனையே "மற்றையோர் நிலைக்கு உள்ளாதல்" ( Empothy) என்னும் பண்பாகும்.

ii நடுநிலைமைத் தன்மையினை கொண்டிருக்க வேண்டும். அதாவது பக்கச் சார்பினை, தலைமைத்துவத்தினை ஏற்பவர் கொண்டிருக்கக் கூடாது.

iii தலைமைத்துவத்தினை ஏற்பவர் ஆளுமையினைக் கொண்டிருக்க வேண்டும். விமர்சனங்களை எதிர் கொள்ளக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

iv வளங்களைச் சிக்கனமாகப் பயன் படுத்தி உச்சப்பயன் பெறுதல் வேண்டும்.

v நிறுவனத்தின் இலக்கினை அதாவது நோக்கத்தினை அடையும் பொருட்டு உழைப்பவராகவும் விசுவாசமானவ ராகவும் இருத்தல் வேண்டும்.

iv பிறருக்கு முன்மாதிரியாக இருத்தல் வேண்டும். அதாவது பிறர் தன்னைக் கொண்டு நடக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். உதாரணமாக முகாமையாளர் கடினமாக உழைத்தால் ஊழியரும் கடினமாக உழைத்து நிறுவனத்தின் நோக்கத்தை அடைய முயற்சி செய்வார்.

vii தலைமைத்துவத்தினை ஏற்பவர் நேரத்தினைச் சரியாக முகாமை செய்பவராக இருத்தல் வேண்டும். அதாவது இன்று வரையறுக்கப்பட்ட வளங்களில் ஒன்றாக நேரமும் காணப்படுகின்றது. எனவே ஒவ்வொருவரும் தமது நேரத்தினைச் சரியாகமுகாமை செய்வதன் மூலமும் தமது இலக்கினை அடைந்து கொள்ள முடியும்.

viii தலைமைத்துவத்தினை ஏற்பவர் தீர்மானங்களை மேற்கொள்வதில் ஆற்றல், திறமையினைக் கொண்டிருத்தல் வேண்டும். பொருத்தமான நேரத்தில் பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.

ix தலைமைத்துவத்தினைக்கொண்டிருப்பவர் தனது பொறுப்புக்களையும் ஏனையோர் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் பண்புடன் இருத்தல் வேண்டும்.

x செய்தித் தொடர்பினை நியாயமான முறையில் ஏற்படுத்துபவராக இருத்தல் வேண்டும். மேலும் செய்திகளைத் தேவையான நேரத்தில் பரிமாற்றுபராகவும் இருத்தல் வேண்டும்-

## 6. ஊக்கப்படுத்தல்

ஓர் "ஊழியரின் செயல் திறன் நிறைவேற்றல்" அவரின் ஊக்கப்படுத்தலில் தங்கியுள்ளது. ஆற்றலிருந்தும் ஊக்கப்படுத்தல் இல்லாத போதும், ஊக்கப்படுத்தல் இருந்தும் ஆற்றல் இல்லாதபோதும் விளைவு பூச்சியமாகும்.

### 6:1 ஊக்கப்படுத்தல் குறைவாகக் கொண்ட ஊழியர்கள் மத்தியில் பின்வரும் குறைகள் காணப்படுகின்றன.

i) வேலையில் ஆற்றலின்மை

ii) சலிப்பு

iii) கவனக் குறைவு

iv) நேரத்தினை விரயம் செய்தல்

v) வரவு ஒழுங்கின்மை

vi) தேவைக்கு அதிகமாக மருத்துவ லீவு எடுத்தல்.

vii) நிறுவனத்தின் இலக்கினை அடைவதற்கான பங்களிப்புக் குறைவாகக் காணப்படும்.

### 6:2 ஊக்கப்படுத்தலின் அவசியம்

i) நிறுவனம் திறமையாக இயங்குவதற்கு ஊக்கப்படுத்தல் அவசியம்.

ii) ஊழியர்களிடமிருந்து வினைத்திறமையுள்ள செயற்திறனைப் பெற்றுக்கொள்வதற்கு ஊக்கப்படுத்தல் அவசியம்

எனவே எந்தவொரு செயற்பாட்டிற்கும் ஊக்கப்படுத்தல் அவசியமாகும். ஊக்கப்படுத்தலின்றி எந்தவொரு செயற்பாடும் திறனாக இயங்காது. எனவே ஊழியரிடமிருந்து தன்னிச்சையான ஒத்துழைப்பினைப் பெற்று நிறுவனத்தின் நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு ஊக்கப்படுத்தல் அவசியமாகும்.

### 6:3 சிறந்த ஊக்கப்டுபத்தல் முறையானது பின்வரும் பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

i) ஊழியர்களை வேலை செய்யும்படி தூண்டுதல் வேண்டும்.

ii) உற்பத்தி அதிகரிப்பினை ஏற்படுத்துவதாகக் காணப்பட வேண்டும்.

iii) சிறந்த ஊக்கப்படுத்தலானது ஊழியரின் சகல தேவைகளையும் திருப்திப்படுத்துவதாகக் காணப்பட வேண்டும்,

iv) ஊக்கப்படுத்தல் முறையானது பக்கச்சார்பின்றி நடுநிலைமைத்தன்மையினைக் கொண்டிருத்தல் வேண்டும்

v) காலத்திற்கு தக்கவாறு மாற்றியமைக்கக்கூடியவாறு நெகிழ்வுத்தன்மையினை கொண்டிருத்தல்வேண்டும்.

# 7. தொடர்பாடல்

ஓர் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் தொடர்பாடல் முக்கியமான தொன்றாகும். "நிறுவனமொன்றின் உள்வாரிக் கட்சியினர் களுக்கும் வெளிவாரிக்கட்சியினர்களுக்கும் இடையில் தகவல்களைப் பரிமாற்றம் செய்து கொள்வது தொடர்பாடல் ஆகும்."

செய்தித் தொடர்பானது ஓர் செய்முறை களுக்கு உட்பட்டது. செய்தித் தொடர்பை ஆரம்பிக்கும் போது ஓர் நோக்கம் காணப் படவேண்டும். அத்துடன் செய்தித் தொடர் பில் குறைந்தது இருவர் காணப்பட வேண் டும்.

## 7:1 தொடர்பாடலின் அடிப்படை அம்சங்களாவன

i) தகவல் அனுப்புபவர்

ii) தகவல்

iii) சாதனம்

iv) தகவல் பெறுபவர்

v) பின் ஊட்டல் (ஏற்றுக் கொள்ளல்)

## 7:2 தொடர்பாடலானது சில அடிப்படைத் தத்துவங்களுக் குட்பட்டது. தொடர்பாடல் ஓர் ஒழுக்கக் கட்டுப்பாட்டைக் கொண்டது அவையாவன

i) ஒரு தகவலை எப்போது, எங்கு, யாரோடு கதைப்பதென்று தீர்மா னித்துக் கொள்ளல் வேண்டும்.

ii) தொடர்பு கொள்வதற்கு முன் சிந் திக்கவேண்டும்.

iii) தொடர்பாடலின் நோக்கம் என்ன என்பதனைத் தீர்மானிக்க வேண்டும்.

iv) மென்மையாகவும் அதேவேளை வலி மையுடையதாகவும் தொடர்பாடல் காணப்படவேண்டும்.

v) பிறர் சொல்வதைப் பொறுமையாகக் கேட்டல்வேண்டும்.

vi) தொடர்பாடலின் போது உணர்ச்சி வசப்படக்கூடாது.

vii) தொடர்பாடலானது தெளிவாகவும், சுருக்கமாகவும் இருப்பதனை உறுதிப் படுத்த வேண்டும்.

viii) செய்தி தொடர்பின் விளைவுகளைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

ix) வழங்கப்பட்டுள்ள செய்தியினை மீளாய்வு செய்தல் வேண்டும்.

x) கதைக்கும்போது வாய்க்குள் எந்த வொரு பொருளையும் வைத்திருக்கக் கூடாது.

## 7.3 தொடர்பாடலின் தடைகள்

i) மொழிவேறுபாடு

சொற்கள் வேறுபட்ட அர்த்தத்தினை வழங்கலாம்.

ii) வேறுபட்ட பின்னணி

iii) குறைவாக கேட்டறியும் திறன்:-

தகவல் பெற்றுக் கொள்பவர் தகவ லைக் கேட்காதபோது தொடர்பாடல் ஏற் படாது.

iv) தகவல் சுமை:-

v) செய்தித்தொடர்பு வலைப்பின்னலில் ஏற்படும் தடை:-

vi) நம்பிக்கையின்மை:-

## 7.4 தொடர்பாடலின் தடைகளை நீக்கும் முறை

i) கேட்டறியும் திறனை விருத்தி செய் தல்:-

உதாரணமாக ஒருவர் உங்களுடன் உரையாடும் போது மனதை வேறு விட யங்களில் அலையவிடக்கூடாது.

ii) நேர்மையான தொடர்பாடலை மேற் கொள்ளுதல்:-

உதாரணம்:- No (இல்லை) என்று சொல்வதனை, மன்னிக்கவும், உதவி செய்ய முடியாது, இதைப்பற்றி சிந்திப்பது கடினம் எனக் கூறலாம்.

iii) வெவ்வேறு கருத்துக்களை வழங்குகின்ற சொற்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்

iv) வாய் மூலமான பேச்சுக்கும் வாய் மூலமற்ற பேச்சுக்குமான முரண்பாடுகளை நீக்கல்.

## 7.5 முறைசாராத செய்தித் தொடர்பு (Informal Communication

நிறுவனத்தின் உத்தியோகபூர்வமற்ற முறையில் பரிமாற்றப்படும் செய்தித் தொடர்பு முறைசாரா தொடர்பாடல் எனப்படும். ஊழியர்கள் அலுவலகத்தில் தேநீர் அருந்தும்போதும், மதிய உணவின்போதும், வேலை முடிந்து வீடு செல்லும் போதும் இது காணப்படுகின்றது.

ஓர் நிறுவனத்தில் முறைசாராச் செய்தித் தொடர்பானது எவ்வாறு பரப்பப்படுகின்றது என்பதை K. Dauis என்பவர் ஆய்வு மூலம் கண்டுள்ளார்.

(1) ஒருவர் இன்னொருவருக்குக் கூற அவர் அதை வேறொருவருக்குக் கூறல்.

(A) → (B) → (C) → (D)

2) ஒருவரே அனைவருக்கும் கூறல்

S C E
↑ ↑ ↑
L ← (A) → B

3) ஒருவர் தனக்கு நம்பிக்கையான ஒருவருக்குக் கூற அவர் தனக்கு நம்பிக்கையான வேறொருவருக்குக் கூறல்.

4) ஒருவர் தெரிந்த தகவலை எழுமாறாக சிலருக்கு கூறல், அதாவது ஒருவருக்குப் பலரைத் தெரிந்திருந்தும் சிலருக்கு மட்டும் கூறல்.

இவ்வாறான முறைசாரா தொடர்பை GRAPE VINE என அழைப்பர்.

## 7·6 செய்தித் தொடர்பு வலைப் பின்னல்.

நிறுவனங்களில் தகவலானது எவ்வாறு ஒவ்வொருவரிற்குமிடையில் பரிமாற்றப்படுகின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்ற செய்தித் தொடர்புக் கட்டமைப்பினை (Structure) செய்தித் தொடர்பு வலைப் பின்னல் என்பர். செய்தித் தொடர் வலைப் பின்னலை நிறுவனங்களே தீர்மானிக்கும்.

சிறிய நிறுவனங்களில் வெவ்வேறு ஊழியரும் வேறொருவருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம். ஆனால் பெரிய நிறுவனங்களில் இது சாத்தியமற்றது. எனவேதான் பெரிய நிறுவனங்களில் செய்தித் தொடர்பு வலைப்பின்னல் அவசியமாகின்றது. சில நிறுவனங்களில் ஊழியர் தனது நேரடியான பார்வையாளருடன் மட்டும் தொடர்பு கொள்ள முடியும். இதன் மூலம் மேம்பட்ட முகாமையின் சுமை குறைவதுடன் அந்தஸ்தும் பேணப்படும்.

நிறுவனங்களில் தொடர்பு கொள்வதை அடிப்படையாகக் கொண்டு 4 பிரதான வலைப் பின்னங்கள் காணப்படுகின்றது.

(i) வட்டம் (CIRCLE)
(ii) சங்கிலி (CHAIN)
(iii) வை (Y)

(iv) நட்சத்திரம் அல்லது வில்லு (STAR OR WEEL)


மேற்கூறிய தொடர்பு கொள்ளல் முறைகளில்

(i) மிகவும் வேகம் கூடிய தொடர் பாடல் நட்சத்திரம்.

(ii) இரண்டாவது வேகம் கூடிய தொடர் பாடல் Y.

(iii) மிகவும் வேகம் குறைவான (மெது வான) தொடர்பாடல் வட்டம்.

(iv) சில நிறுவனங்களில் சுவரும் ஆவலுடன் சகலருடனும் அதாவது சகல ஊழியரும் தொடர்பு கொள்ளக்கூடிய முறையில் வலைப்பின்னல் அமைக்கப்பட்டுள்ளது. இதனை "எல்லாவழி வலைப்பின்னல் முறை" (All Channel Communication) என்பர். இம்முறை ஊழியர் மத்தியில் திருப்தியை ஏற்படுத் தும். ஆராய்ச்சி, அபிவிருத்தியில் ஈடுபடும் நிறுவனங்கள் இத் தகைய தொடர்பாடல் முறைகளை மேற்கொள்ளுகின்றன.




## 8. ஊழியரிடல் (STAFFING)

நிறுவனங்களில் ஊழியரிடல் ஓர் முக்கியமான கருமமாகும். "நிறுவனத்திற்குத் தேவையான ஊழியர்களை ஆட்சேர்த்தல், தெரிவு செய்தல், பயிற்சியளித்தல், மதிப் பிடுதல், விருத்தி செய்தல், என்பவற்றைக் கொண்ட முகாமைச் செயற்பாடு ஊழியரி டல்ஆகும்."

நிறுவனங்கள் வேலைக்கு ஆட்களைச் சேர்க்கும் முறைகள்

(i) பத்திரிகையில் விளம்பரப்படுத்தல்.

(ii) அரச வர்த்தகமானியில் விளம்பரப் படுத்தல்.

(iii) சஞ்சிகையில் விளம்பரப்படுத்தல்.

(iv) பல்கலைக்கழகத்திலிருந்து வெளி யேறுவோரைத் தெரிவு செய்தல்

(v) தொழில் நுட்ப கல்லூரியில் இருந்து வெளியேறுவோரைத் தெரிவு செய் தல்.

## 8.1 பயிற்சியளித்தல்

வேலைக்குத் தெரிவு செய்யப்பட்டவர் களுக்குப் பொருத்தமான பயிற்சியை வழங்கி அவர்களை அபிவிருத்தி செய்யவேண்டிய பொறுப்பு நிறுவனத்திற்கு உண்டு. எனவே புதிதாக வேலைக்குச் சேர்ந்து கொள்ளப் பட்டவர்களுக்கு மட்டுமல்ல ஏற்கனவே நிறு வனத்தில் வேலை செய்பவர்களுக்கும் காலத் திற்கு காலம் பொருத்தமான பயிற்சியை வழங்குதல் வேண்டும்.

## 8·2 ஊழியர்க்குக் காலத்திற்குக் காலம் பயிற்சியளிப்பதால் பல நன்மைகள் ஏற்படும்.

(i) ஊழியர் பயிற்சி பெறுவதன் மூலம் அவர்கட்கு வேலையில் திருப்தி ஏற் படும்.

(ii) வேலையை மேற் கொள்ளத் தேவைப் படும் நேரம் குறைக்கப்படும். உற்பத்தி தொடர்பான வெளியீடு அதிகரிக்கும். இதனால் உற்பத்தித் தொடர்பான செலவுகள் குறைக்கப்பட்டு நிறுவ னத்தின் இலாப அளவு அதிகரிக்கும்.

(iii) ஊழியருக்குப் பயிற்சியளிப்பதன் மூலம் எதிர்காலத்தில் அவர்களை விருத்தி செய்ய முடியும்.

(vi) ஊழியருக்குப் பயிற்சியளிப்பதால் அவர்கள் பயிற்றப் பட்டவராகின் றார். இது நிறுவனத்திற்குப் பலத்தை அதிகரிக்கும்.

## 8·3 பயிற்சியைத் திட்டமிடும் போது பின்வரும் 5 விடயங் களைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

(1) நோக்கம் (AIM)

பயிற்சியின் நோக்கத்தினைத் தீர்மானிக் கும் பொருட்டு பயிற்சியின் தேவையைக்கண்டு கொள்ளல் வேண்டும். குறிப்பிட்ட வேலை

யினைச் செய்வதற்கான அறிவு, திறன் என்பனவற்றின் அளவுக்கும், ஊழியர்கள் கொண்டுள்ள அறிவு, திறன் என்பவற்றின் அளவுக்குமிடையிலான வித்தியாசம் பயிற்சியின் தேவையாகும்.

பயிற்சியின் தேவை = வேலையை மேற்கொள்ளத் தேவையான அறிவு, திறனின் அளவு—ஊழியர் கொண்டுள்ள அறிவு திறன்

பயிற்சியின் தேவையினைக் கண்டு கொண்டு பயிற்சியின் நோக்கத்தினை நிர்ணயித்துக் கொள்ளலாம்.

(2) பயிற்சியில் உள்ளடக்கப்பட வேண்டியவை (Contents)

பயிற்சியில் என்னென்ன விடயங்கள் உள்ளடக்கப்படவேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும்.

(3) பயிற்சியின் முறைகள் (Methods)


எம்முறையில் பயிற்சியானது வழங்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்

(4) பயிற்சியை நிறைவேற்றுதல்

யார் பயிற்சியை வழங்கவேண்டும், பயிற்சியாளர்கள் யார்? எங்கு பயிற்சி வழங்கவேண்டும். என்பவற்றைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

5) பயிற்சியை மதிப்பீடு செய்தல்.

இறுதியாகப் பயிற்சி அதன் நோக்கத்தைப் பூர்த்தி செய்துள்ளதா என்பதை அறியவேண்டும். இல்லையேல் அதற்கான காரணங்களை அறிந்து அதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்.




## 8:4 செயற்றிறனை மதிப்பீடு செய்தல்.

ஒரு நிறுவனத்தில் ஊழியர்கள் வெவ்வேறு செயல்திறன்களைக் கொண்டவர்கள். அவர்களின் வேலையின் தரத்தினைப் பல்வேறு மாற்றங்களுக்காக மதிப்பிடவேண்டும். இவ்வாறு செயல் திறனை மதிப்பீடு செய்வதினைச் ''செயல்திறன் மதிப்பீடு'' என்பர்.

## 8:5 செயல்திறன் மதிப்பீட்டில் பல முறைகள் பின்பற்றப்படும்.

1. வரிசைப்படுத்தல் (Ranking)
2. ஒருவரை இன்னொருவருடன் ஒப்பிடுதல்

உதாரணம் : A, B, C எனும் 3 ஊழியர்கள் காணப்படும்போது அவ் ஊழியர்களை ஒவ்வொருவருடன் ஒப்பிடுதல்.

A —> B, B —> C, C —> A.

வகைப்படுத்தல் Grading

இம்முறையில் ஒவ்வொரு தரத்திற்கும் என்ன பண்புகள் காணப்பட வேண்டும் என முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டிருக்கும். அதனடிப்படையில் ஊழியர் வகைப்படுத்தப்படுவர்.

## 8:6 செயல்திறனை மதிப்பீடு செய்யும் போது பின்வரும் தவறுகள் ஏற்பட வாய்ப்புண்டு

1. பக்கச்சார்பான கருத்துக்கள் சார்பாக செயல்திறன் மதிப்பீட்டில் தவறுகள் ஏற்படலாம்.

உதாரணம் : சமயம், பால், இனம், சாதி, பிரதேசம்

2. எல்லா உயிர்களையும் ஒரே மாதிரியாக மதிப்பீடு செய்தல்.

3. கடுமையாக மதிப்பீடு செய்தல்.

4. அந்தஸ்தை வைத்துக் கொண்டு மதிப்பிடுதல்.

5. ஒரு அம்சத்தில் திறமையாகக் காணப்படின் எல்லா அம்சங்களையும் திறமையாக மதிப்பீடு செய்தல் அல்லது ஓர் அம்சத்தில் திறனில்லை எனில் எல்லா அம்சத்திலும் திறனற்றவர் என மதிப்பீடு செய்தல்

## 9. கட்டுப்படுத்தல்

கட்டுப்படுத்தல் முகாமைத்துவத்தில் ஓர் முக்கிய செயற்பாடு ஆகும். செயற்படுத்தப்பட்ட திட்டமிடுதல் மூலம் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேறியுள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்வதும் அவை வேறுபடுமாயின் அதனைச் சீராக்கிக் கொள்வதும் கட்டுப்படுத்தல் ஆகும்''. அதாவது திட்டமிட்டபடி கருமங்கள் மேற்கொள்ளப்படுகின்றதா என உறுதிப்படுத்திக் கொள்ளும் ஓர் செயற்பாடு கட்டுப்படுத்தல் ஆகும்.

திட்டமிடுதல் சரியாக வெற்றி அளிக்க வேண்டுமாயின் கட்டுப்படுத்தலும் அவசியமாகும். திட்டமிடலும் கட்டுப்படுத்தலும் ஓர் நாணயத்தின் இரு பக்கங்கள் எனக் கூறப்படுமளவிற்கு முக்கியமானவை ஆகும். சரியான ஓர் கட்டுப்படுத்தலின்றி திட்டமிடுதல் வெற்றியளிக்காது.


கட்டுப்படுத்தல் செய்முறையின் 4 பிரதான படிமுறைகள்.

(1) நியமத்தை வரையறுத்தல்.

(2) செயல்திறனை அளவிடுதல்.

(3) செயல்திறனை நியமத்துடன் ஒப்பிடுதல்.

(4) செயல்திறனிற்கும் நியமத்திற்கும் இடையில் வேறுபாடு காணப்படின் அவற்றைத் திருத்துதல்.




### 9:1 இன்று எந்தவொரு நிறுவனமும் கட்டுப்படுத்தலில் கூடிய கவனத்தைச் செலுத்துகின்றன. பின்வரும் காரணங்களுக்காக ஓர் பயனுறுதி மிக்க கட்டுப்படுத்தல் அவசியமாகும்

(1) ஊழியர் விடும் தவறுகளைக் கண்டு கொள்வதற்குக் கட்டுப்படுத்தல் அவசியமாகும்.

(2) சூழல் மாற்றத்திற்கு ஏற்ப தேவையான நடவடிக்கைகளினை நிறுவனம் மேற்கொள்ள ஓர் பயனுறுதி மிக்க கட்டுப்படுத்தல் அவசியமாகும்.

(3) நிறுவனங்களில் முகாமையாளர்கள் தம்கீழ்ப்பணிபுரியும் ஊழியர்களுக்கு அதிகாரம் பொறுப்புக்களை கையளிக்கும் போது அப்பொறுப்புக்கள் சரியாக நிறைவேற்றப்படுகின்றதா என அவதானிக்கும் பொறுப்பு முகாமையாளருடையது. இதன் பொருட்டு முகாமையாளருக்குக் கட்டுப்படுத்தல் அவசியமாகும்.

(4) பாரிய நிறுவனங்களில் சகலசெயற்பாடு களையும் தனியொருவரினால் மேற் கொள்ள முடியாது. இதன்பொருட்டுச் செயற்பாடுகளைப் பன்முகப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. பன்முகப்படுத்தல் பயனுறுதிமிக்கதாக இருப்பதனை உறுதிப்படுத்தும் பொ ருட்டு கட்டுப்படுத்தல் அவசியமாகும்.

நிறுவனத்தின் குறிக்கோள்கள் யாவும் திட்டமிடலுக்கமைய நிறைவேறியுள்ள னவா என்பதைப் பரீட்சித்துப் பார்ப் பதற்கு நியமங்களின் அடிப்படையில் அள விடு செய்து அதற்கமைய விபரங்கள் (வேறுபாடுகள்) யாதேயினும் இருப்பின் அவற்றைச் சீராக்கி கொள்ள வேண்டும். செயற்பாட்டில் ஏதாவது குறைகள், விவ ரங்கள் காணப்படின் சீராக்கியமைப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவேண்டும்.

## 9:2 நிறுவனங்களில் நிர்வாகப் பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்குப் பல் வே -று கட்டுப்பாட்டு நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

1. தரக்கட்டுப்பாட்டு நுட்பம் Quality Control

தரக்கட்டுப்பாடு என்பது உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சேவைகள் ஏற் கனவே திட்டமிட்ட தரத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றதா என உறுதிப்படுத்த மேற்கொள்ளப்படும் ஓர் கருமமாகும். தரக் கட்டுப்பாட்டின் மூலம் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சேவை களின் தரங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

2. இருப்புக் கட்டுப்பாட்டு நுட்பம் Inventory Control

இருப்புக்கட்டுப்பாட்டு நுட்பம் என்பது ஒரு நிறுவனம் திட்டமிட்டபடி தேவையான இருப்பினை பேணுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்படும் கருமமாகும் இதன் மூலம் ஓர் நிறுவனம் இருப்பினை தேவைக்கு அதிகமாகவோ அல்லது குறை வாகவோ வைத்திருப்பதனை நிவர்த்தி செய்ய முடியும்.

3. பாதீட்டுக் கட்டுப்பாட்டு நுட்பம் Budgetory Control

பாதீட்டு கட்டுப்பாடு என்பது எதிர் காலத்தில் மேற்கொள்ளவுள்ள ஓர் செயற் பாடு அல்லது திட்டம் பற்றிய தொகை ரீதி யான மதிப்பீடாகும்.

உதாரணமாக ஓர் நிறுவனத்தின் 97-ம் ஆண்டிற்கான விளம்பரப் பாதீடு 500 000/= ஆகும் இவ்வாறாக ஓர் பாதீட்டை தயாரிப் பதன் மூலம் குறிப்பிட்ட நிறுவனம் எதிர் காலத்தில் விளம்பரம் தொடர்பான செலவு களைக் கட்டுப்படுத்தக்கூடியதாக உள்ளது. எனவே பாதீடு ஓர் கட்டுப்பாட்டு நுட்பம் ஆகும்.

4. விகிதாசாரப் பகுப்பாய்வு Ratioanaly-sis

விகிதாசாரப் பகுப்பாய்வு என்பது விகிதா சாரங்களை நிர்ணயித்து அதன் மூலம் செயற் பாடுகளைக் கட்டுப்படுத்தும் முறையாகும் சில செயற்பாடுகள் தொடர்பாக ஏற்கனவே விகிதாசாரம் நிர்ணயிக்கப் பட்டிருக்கும். உதாரணம் நடைமுறை வீதம் 2: 1

இதனடிப்படையில் செயற்பாடுகளை நிறுவனம் கட்டுப்படுத்த முடியும். எனவே விகிதாசாரப் பகுப்பாய்வும் ஓர் கட்டுப்பாட்டு நுட்பம் ஆகும். ஓர் சிறந்த கட்டுப்பாட்டு முறை பின்வரும் அம்சங்களைக்கொண்டிருத் தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் செயற்பாடுகளை கட் டுப்படுத்தும் கட்டுப்பாட்டுமுறை எளி மையானதாக இருத்தல் வேண்டும்.
2. தரக்கட்டுப்பாட்டு முறை சிக்கனமான தாக இருக்கவேண்டும். அதாவது குறைந்த செலவில் அமுல்படுத்தக் கூடியதாக இருக்கவேண்டும்

3. கட்டுப்பாட்டு முறை நிறுவனத்திற்கு ஏற்றதாயிருக்க வேண்டும்.
4. தவறுகள் ஏற்படும்போது தவறுகளை உடனுக்குடன் கண்டு பிடித்து நிவர்த்தி செய்யக்கூடியதாக இருத்தல்வேண்டும்.
5. காலத்திற்கு ஏற்றவாறு நெகிழ்வுத் தன்மையைக் கொண்டிருக்கவேண்டும்.

## (10) முடிவுரை Conclusion)

எனவே முகாமைத்துவமானது இன்று மிக வேகமாக வளர்ந்துவரும் துறையாக மாறியுள்ளது. நிறுவனத்தின் பணியாளர்களையும், வளங்களையும் கொண்டு தகுந்த திட்டங்கள் மூலமாகவும், உரிய ஊக்குவிப்பு மூலமாகவும், தகுந்த கட்டுப்பாட்டின் படியும் நிறுவனத்தின் நோக்கங்களை வரையறையிட்டு அதனை அடைய முற்படும் செய்முறையே முகாமையாகும்.

முகாமைத்துவம் பல கருமங்களை உள்ளடக்கியது. இக்கருமங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை ஆகும்.

ஓர் நிறுவனத்தில் திட்டம் தயாரிக்கப்பட்டு, நிறுவனம் ஒழுங்கமைக்கப்பட்டு ஊழியர்கள் சேர்க்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து நிறுவனத்தின் குறிக்கோளை அடையும் பொருட்டு ஊழியர்கள் ஊக்குவிக்கப்பட்டு, வழிநடத்தப்பட்டு, சகல செயற்பாடுகளும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய பல கருமங்களை உள்ளடக்கிய செயல்முறையேமுகாமைத்துவம் ஆகும்

## நிரந்தர இயலாமைக் காப்புறுதித் திட்டம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் சேர்ந்து செய்யப்படும் ஒரு சேமநலத் திட்டமாகும். ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் அங்கத்தவர் வேலை செய்யும்போது விபத்தோ அல்லது பாரிசவாதம் அல்லது தொழில் சார்ந்த நோயினால் பாதிக்கப்பட்டு நிரந்தரமாகத் தொழில்செய்ய முடியாத விடத்து அது சம்பந்தமாகக் கொடுக்கப்படும் ஒரு சேமநலனாகும். நிரந்தர இயலாமை ஏற்படுமாயின் அவருக்கு 24 மாதச் சம்பளம் அல்லது 150000/= க்கு மேற்படாமல் நலன்களாகக் கொடுக்கப்படும்.

# ஆசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கையும்
# The Asian Development Bank And Srilanka

மேரி யூலியா ரூசைப்பிள்ளை
99 வர்த்தகப் பிரிவு

## முகவுரை:-

உலக நாடுகளிற்கு உதவி புரியவும், அவற்றின் அபிவிருத்திக்கும், அந்நாடுகளில் காணப்படும் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் உதவி புரியவும் என உலக நாடுகளை அங்கத்துவமாகக் கொண்டு, ஐக்கிய நாடுகள்சபை, யுனிசெவ், உலக வங்கி, சர்வதேச அபிவிருத்திச் சங்கம் போன்ற பல சர்வதேச ஸ்தாபனங்கள் செயற்பட்டு வருகின்றன. நாடுகளுக்கிடையிலான நிதி உதவிகளுக்கு வங்கிகள் உதவி புரிகின்றன. இவற்றுள் ஆசிய அபிவிருத்தி வங்கியும் ஒன்றாகும்.

1966 இல் நிறுவப்பட்ட இவ்வங்கியின் தலைமை அலுவலகம் பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலா நகரத்திலுள்ளது. ஆசிய பசுபிக் வலயத்தின் அபிவிருத்திக்கு வேண்டிய நிதியை தனியார் துறை, அரசாங்கத்துறை ஆகிய இரு மூலங்களிலுமிருந்து பெற்றுக் கொள்ளுதல், பொருளாதாரக் கொள்கைகளை இணைப்பாக்கம் செய்யும்போது உறுப்பு நாடுகளுக்கு உதவி வழங்கல், அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தொழில் நுணுக்க உதவியைப் பெற்றுக் கொடுத்தல் என்பனவே இவ்வங்கியின் முக்கிய குறிக்கோளாகும். எனவே ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிகளையும், அவ்வங்கி இலங்கைக்கு ஆற்றிய பணிகளையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இவ்வங்கி ஆசிய பசுபிக் பிராந்தியத்திலுள்ள 31 நாடுகளையும் இப்பிராந்தியத்துக்கு வெளியிலுள்ள மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா போன்ற 14 நாடுகளையும் உறுப்பு நாடுகளாகக் கொண்டுள்ளது. உறுப்பு நாடுகளின் பங்களிப்பு மூலமே வங்கிக்கு நிதி கிடைக்கின்றது, இந்த வங்கிக்கும் பிராந்தியத்தின் வெளியே அமெரிக்காவின் தலைமையிலுள்ள உறுப்பு நாடுகளாலேயே, அதிக நிதி வழங்கப்படுகின்றது. இதனால் இந்த நாடுகளும் இவ்வங்கியின் நிதி நிலைமைகளின் நடவடிக்கைகளில் செல்வாக்குடையனவாக இருக்கின்றன. அத்தோடு இவ்வங்கி பிறமூலதன மூலகங்களில் இருந்தும் நிதியைக் கடனாகப் பெற்றுக் கொள்கின்றது. இந்த வங்கியினால் மிகவும் தாழ்ந்த அபிவிருத்தி மட்டத்திலிருக்கும் உறுப்பு நாடுகளுக்கு சகாயமான நிபந்தனைகளின்படி கடன்கள் வழங்கப்படுகின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கியானது ஏனைய சர்வதேச ஸ்தாபனங்களுடன் சேர்ந்தே செயற்பட்டு வருகின்றது. இது உலகவங்கி, ஐக்கியநாடுகளின் அபிவிருத்தித் திட்டம், இஸ்லாமிய அபிவிருத்திவங்கி, சர்வதேச அபிவிருத்திக்கான 'ஒபேக்' நம்பிக்கை நிதி ஆகியவற்றுடன் இணைந்து திட்டங்களுக்கு உதவிபுரிகின்றது. அத்துடன் இவ்வங்கியானது ஐரோப்பிய பொருளாதாரச் சமுகத்தின் பிராந்திய பிரதிநிதியாகவும் செயற்படுகின்றது.

உறுப்பு நாடுகளில் நடைபெறும் கைத்தொழில், மற்றும் வேறு துறைகள் சார்ந்த உற்பத்தி நடவடிக்கைகளுக்கு ஒரு குறிப்பிட்ட வீதத்தின் அடிப்படையில் கடன்களை வழங்குகின்றன. 1984 ல் 34% வீதமான கடன்கள் சக்தி சம்பந்தமான திட்டங்களுக்கு வழங்கப்பட்டது. தேசிய சக்தி பிறப்பாக்கிகளின் அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தியமையினாலேயே 34% கடன்கள் சக்தி சம்பந்தபட்ட திட்டங்களுக்கு வழங்கப்பட்டது. அத்துடன் மின் வலு உற்பத்திக்கும் இருக்கின்ற வலுச்சக்தி மூலங்களின் வினைத்திறனை அபிவிருத்தி செய்வதற்கும் நாடுகளுக்கு கடன்வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

1966 ல் இலங்கையில் இரண்டாவது கைத்தொழில் அபிவிருத்தித் திட்டம் கல்வித் துறை சார்ந்த இடைநிலைத் தொழிற்றுறைப் பயிற்சித் திட்டம், நகர அபிவிருத்தி சார்ந்த மாநகரத்திட்டம், முகாமைத் திட்டம், நீர்ப்பாசனம், சுகாதார முறைகள் ஆகியவற்றைப் புனரமைக்கும் திட்டம் ஆகிய நான்கு திட்டங்களுக்குக் கடன்வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

விவசாயம், விவசாயப் பொருட்கள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட கைத்தொழில்களுக்கும் 34% வீதக் கடன்கள் வழங்கப்பட்டன. இலங்கையின் காட்டு வளர்ப்புத் திட்டங்களுக்கும் கடன் வழங்கப்பட்டன. இலங்கையின் கிரிந்தி—ஓயா திட்டத்தின் முதலாம், இரண்டாம் கட்டங்கள் இரண்டிலும் மிருகவள அபிவிருத்தி, காட்டு வளர்ப்புத் திட்டம் போன்றவற்றைச் செயற்படுத்துவதற்கு ஆலோசகர்களின் சேவைகள் இத்தாபனத்தினால் ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டன.

இவ்வாறு ஆசிய அபிவிருத்தி வங்கியானது இதுவரை 109 திட்டங்களுக்கு தொழில்நுணுக்க உதவிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளது. இவற்றுள் 46% விவசாயத் துறையைச் சேர்ந்தனவாகும். வங்கியினால் கடன் வழங்கப்பட்ட திட்டங்களுள் 27 திட்டங்கள் 1984ல் பூர்த்தி அடைந்தன. இப்படியான நடவடிக்கைகளை விட அரசாங்கத்துறையைச் சார்ந்த முயற்சிகளை தனியார் துறைக்குக் கையளித்தல், கிராமிய அபிவிருத்தி நிதி மூலங்களின் வினைத்திறனை அபிவிருத்தி செய்தல் ஆகிய சம்பந்தமான சம்மேளனங்கள், கருத்தரங்குகள் ஆகியவற்றையும் ஆசிய அபிவிருத்தி வங்கி நடத்தியுள்ளது.

போக்குவரத்து, செய்திப்பரிமாற்ற நடவடிக்கைகளுக்கு 17% ஆகக் கடன்கள் வழங்கப்பட்டன. இந்தக் கடன்கள் இந்துனேசியா, பப்புவா நியூகினி, சொலமன் தீவுகள் ஆகியவற்றின் பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்வதற்கும், பங்களாதேஷின் புகையிரதப் பாதைகளின் அபிவிருத்திக்கும் இந்துனேசியா, மலேயா ஆகிய நாடுகளின் துறைமுக அபிவிருத்தி வேலைகளுக்கும், தாய்லாந்தின் தந்தித் தொடர்பு வேலைகளுக்கும் ஒதுக்கப்பட்டன.

இந்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி 10 மில்லியன் டொலர்களாகும். ஒப்பந்தத்தின் அடிப்படையில் இத்தொகை அங்கத்துவ நாடுகளிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாகக் கடன் பெறுவதன் மூலமும், வட்டி வருமானம் மூலமாகவும் தனக்குத் தேவையான நிதியை வங்கி பெற்றுக் கொள்கின்றது. பிராந்தியத்திற்கு வெளியே ஐக்கிய அமெரிக்கா போன்ற செல்வந்த நாடுகளில் இருந்தும், அரச தனியார் துறைகளில் இருந்தும் நிதியைச் சேமித்துக் கொள்கின்றது.

இவ் வங்கி அதிபதிகள் சபையினால் நிர்வாகிக்கப்படுகின்றது. இச் சபை வருடாந்தம் ஒரு முறை கூடும். இங்கு வாக்குப் பலம் அங்கத்துவ நாடுகளின் பங்களிப்பிற்கு ஏற்ப தீர்மானிக்கப்படும். அதிபதிகள் சபைக்கு மேலதிகமாக இயக்குனர் சபை ஒன்று உண்டு. அதில் 12 பேர் இடம்

பெறுகின்றனர். இவர்களுள் 8 பேர் பிராந்திய அங்கத்தவர்களிலிருந்தும் 4 பேர் பிராந்தியத்தைச் சேராத அங்கத்தவர்களிலிருந்தும் நியமிக்கப்படுவர். இயக்குனர்களின் பதவிக் காலம் 2 வருடங்களாகும். அதிபதிகள் சபையால் தெரிவு செய்யப்பட்ட தலைவர் ஒருவர் இருக்கின்றார். இவர் அதிபதிகள் சபையையோ, இயக்குனர் சபையையோ சேராதவர். இவரின் பதவிக் காலம் 5 வருடங்களாகும்.

அங்கத்துவ நாடுகளுக்கு நூற்றுக்கு ஒரு வீதம் (1%) வட்டியில் இலகுக்கடன்கள் வழங்குதல் இங்குள்ள முக்கிய இயல்பாகும். அங்கத்துவ நாடுகளின் பொருளாதாரப் பலத்தை மதிப்பிட்டு A, B, C என 3 குழுக்களாகப் பிரித்து அதன் அடிப்படையில் கடன் வசதிகளை வழங்குதல், வட்டி அறவிடுதல் என்பன தீர்மானிக்கப்படுகின்றன. அபிவிருத்தி குன்றிய அங்கத்துவ நாடுகளுக்கு இலகுவான நிபந்தனைகளின் அடிப்படையில் கடன் வழங்குவதற்கு 1974இல் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ''ஆசிய அபிவிருத்தி நிதி'' தாபிக்கப்பட்டது. அத்துடன் ''பலநோக்கு விசேட நிதியும்'', ''விவசாய விசேட நிதியும்'' ஆரம்பிக்கப்பட்டன.

ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் இலங்கை பெற்றுள்ள சில கடன்களும் உதவிகளும் பற்றி நோக்குவோம், இலங்கையின் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் பலவற்றுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி, வங்கிக் கடன் உதவிகளை வழங்கியுள்ளது. அவற்றுள் சில பின்வருமாறு.

* போவதன்ன நீர் மின்திட்டம்
* சப்புகஸ்கந்த யூரியா வளமாக்கி உற்பத்தித் திட்டம்.
* இலங்கையின் மேற்குக் கரையோர மீன்பிடிக் கைத்தொழில் அபிவிருத்தி
* நகர அபிவிருத்தி, மாநகரசபையின் முகாமைத்துவத் திட்டம்
* நீர் வழங்கல், சுகாதாரக் காப்புறுதி, புனருத்தாரணத் திட்டம்
* கொழும்புத் துறைமுக அபிவிருத்தித் திட்டம்.
* தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயமாக்கல்.
* பல்லாண்டுக்குப் பயிர் அபிவிருத்தித் திட்டம்,

## முடிவுரை :-

ஆசிய அபிவிருத்தி வங்கியானது இலங்கைக்கு மாத்திரமன்றி ஏனைய பொருளாதார ஒன்றியங்களுக்கும் பற்பல உதவிகளையும், செயற்திட்ட உதவிகளையும் நல்கியுள்ளது. எனினும் இவ்வங்கி இலங்கைக்கு ஆற்றிய பணியை அளவிட முடியாது. இனி வரும் காலங்களிலும் இவ்வங்கியானது பற்பல கடன் உதவித்திட்டங்களை இலங்கைக்கு நல்கும் என்பது திட்டவட்டமான முடிவாகும்.


## குரு அபிமானி காப்புறுதித் திட்டம்

பாடசாலை ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இக் காப்புறுதித் திட்டத்தில் சேரலாம்.

இழப்பு நேரிட்டால் 100000/=

பூரண இயலாமைக்கு 100000/=

ஒரு கை, ஒரு கால், ஒரு கண் இழந்தால் 50000/= பெற்றுக்கொள்ளலாம்.

# உள்நாட்டுக் கைத்தொழில் வர்த்தக நிறுவனங்களும் கைத்தொழில் ஆராய்ச்சி அபிவிருத்தி தொடர்பான நிறுவனங்களும் பற்றிய ஓர் அறிமுகம்

சஜி பேரின்பநாயகம்
97 வர்த்தகப் பிரிவு

## முகவுரை.-

இன்று இலங்கையில் கைத்தொழில் வர்த்தகமானது மிக வேகமாக முன்னேற்ற மடைந்து கொண்டு வருகின்றது. இலங்கையின் கைத்தொழில் வர்த்தகம் வளர்ச்சியடைந்து செல்வதற்கான காரணம் அரசின் தாராள மயமாக்கல் கொள்கையே ஆகும். இக் கொள்கையினால் வெளிநாட்டு முதலீடுகள் ஊக்குவிக்கப்பட்டு உள்நாட்டுக் கைத்தொழில், வர்த்தகம் வெளிநாட்டுத் தொழில்நுட்பத்துடன் வளர்ச்சியடைந்து செல்கின்றது. இவ்வளர்ச்சிக்குப் பல உள்நாட்டு நிறுவனங்கள் தமது பங்களிப்பைச் செலுத்தி உள்ளன. அதாவது உள்நாட்டுக் கைத்தொழில் வர்த்தக நிறுவனங்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குப் பல சலுகைகளை ஊக்குவிப்புக்களை வழங்கியும், உள்நாட்டுக் கைத்தொழிலாளர் வர்த்தகர்களுக்குப் பல ஊக்குவிப்புக்களை வழங்கியும் உள்நாட்டுக் கைத்தொழில் வர்த்தகத்தை வளர்ச்சியடையச் செய்துள்ளன. அத்துடன் நுகர்வோர்களையும் போட்டியின் மத்தியில் பாதுகாத்து வருகின்றது. மேலும் கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனங்கள் கைத்தொழில் பற்றியும் உள்ளீடுகள் தொழில்நுட்பம் என்பவை பற்றியும் ஆராய்ந்து கைத்தொழிலை வளர்ச்சியடையச் செய்கின்றன. இந்தவகையில் உள்நாட்டுக் கைத்தொழில் வர்த்தக நிறுவனங்களினதும் கைத்தொழில் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனங்களினதும் சேவை அளப்பரியது ஆகும். இக்கட்டுரையில் இந்நிறுவனங்களைப்பற்றி எடுத்து நோக்குவோம்.

## உள்நாட்டுக் கைத்தொழில் வர்த்தக நிறுவனங்கள்.

1. தேசிய வடிவமைப்புக் கழகம்:

இந்நிலையம் கைப்பணியாளர்களுக்குப் பொருள் வடிவமைப்பு சம்பந்தமான தகவல்களையும் ஆலோசனைகளையும் வழங்கும் பொருட்டு உருவாக்கப்பட்டது. அத்துடன் கடன் வசதிகளும் அளிக்கின்றது. மேலும் கைப்பணியாளர்களுக்கு உதவி செய்யும் நோக்குடன் இரண்டு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவையாவன

1. கைப்பணிப் பொருட்சபை
2. தேசிய கைவேலைக் கழகம்

2. தேசிய பொதியிடல் மத்திய நிலையம்

இது 1983 ஆம் ஆண்டில் பின்வரும் நிறுவனங்களின் ஆதரவுடன் அமைக்கப்பட்டது.

அ) ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
ஆ) இலங்கை கட்டளைகள் நிறுவனம்
இ) இலங்கை கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்
ஈ) தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்
உ) இலங்கை பொதியிடல் நிலையம்

இந்நிறுவனத்தின் தொழிற்பாடுகள்

1. நவீன பொதியிடல் முறைகளை அறிமுகம் செய்தல்.
2. பொதியிடலுக்கான தகவல்களை நேரடியாகவும் வெளியீடுகள் மூலமும் வெளிப்படுத்தல்.

3. பொதியிடல் தொடர்பான தொழில்நுட்பத் தகவல்களைப் பெற நூலக சேவைகளை நடாத்துதல்.

4. பொதியிடலுக்கான தொழில்நுட்பத் தகவல்களைச் சேகரித்துப் பராமரித்தல்

5. பொருட்கள் நீண்டகாலம் பழுதடையாமல் இருக்கக் கூடிய நவீன பொதியிடல் முறைகளை ஆராய்ந்து தெரியப்படுத்தல்.

## 3. இலங்கை வாணிப அபிவிருத்தி நிலையம்

இது அமெரிக்காவின் உதவியுடன் நிதி திட்டமிடல் அமைச்சால் உருவாக்கப்பட்டது. இதன் பிரதான நோக்கங்கள்.

1. இலங்கையில் தனியார் துறையின் வளர்ச்சிக்கான சூழலை ஏற்படுத்தல்.
2. தனியார் துறையின் திறனான முகாமையை அபிவிருத்தி செய்தல்
3. உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்.
4. முதலீட்டு ஆலோசனையினைத் தனியாருக்கு வழங்குதல்.
5. சந்தை வாய்ப்புப் பற்றிய தகவல்களை வழங்குதல்.

## 4. தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் :

1968 இல் உருவாக்கப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி நிலையம் 1972இல் தேசிய வியாபார முகாமைத்துவ நிலையம் எனப் பெயர் மாற்றப்பட்டது.

அரசினால் நியமிக்கப்பட்ட தலைவர் ஏழு பேரைக் கொண்ட சபையினாலும் சர்வதேச தொழிலாளர் நிறுவனப் பிராந்திய சபையினாலும் மேற்பார்வை செய்யப்படுகின்றது.

இந்நிறுவனத்தின் தொழிற்பாடுகள்.

1. பொதுத்துறை, தனியார் துறை முகாமை அபிவிருத்திக்குப் பயிற்சி அளித்தல்.
2. மேற்பார்வை அபிவிருத்திக்கான பயிற்சி அளித்தல்.
3. உற்பத்திப் பொருள் அபிவிருத்தி, நியமனங்கள் ஏற்படுத்துதல், கூலி, சம்பளம் நிர்ணயித்தல் முதலியன தொடர்பாக முகாமை ஆலோசனை வழங்கல்.
4. நிறுவனம் தொடர்பாகத் தரவுகள் சேகரித்தல், ஆய்வுகளை மேற்கொள்ளல்
5. கணனிப் பயிற்சிச் சேவையை அளித்தல்

## 5. உள்நாட்டு வியாபாரத் திணைக்களம்

இது 1979ல் உருவாக்கப்பட்ட ஒரு திணைக்களம் ஆகும். இதற்குப் பொறுப்பாக உள்நாட்டு வியாபார ஆணையாளரும், அவருக்கு உதவியாக பிரதி உள்நாட்டு வியாபார ஆணையாளரும் காணப்படுவர். இந் நிறுவனத்தின் தொழிற்பாடுகள்

1. வியாபாரம் தொடர்பான சட்டங்களை நிர்வகித்தல்.

   உதாரணம்: நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
2. நுகர்வோரைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்.
3. நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.

## 6. நியாய வியாபார ஆணைக்குழு

தேசிய விலைகள் ஆணைக்குழுவிற்குப் பதிலாக 1987ம் ஆண்டு 1ம் இலக்க நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய உருவாக்கப்பட்டது. கப்பற்துறை அமைச்சினால் நியமிக்கப்பட்ட வர்த்தகம், வியாபாரம், சட்டம், கைத்தொழில் என்பவற்றில் நிபுணத்துவம் வாய்ந்த ஏழு பேரை உறுப்பினராகக் கொண்ட சபையால் முகாமை செய்யப்படும்.

இந்நிறுவனத்தின் நோக்கங்கள்.

1. நுகர்வோரைப் பாதுகாத்தல்
2. பொருட் தட்டுப்பாடு ஏற்படுகையில் பொருளிற்கான விற்பனை விலையைத் தீர்மானித்தல்.

3. உற்பத்தியாளருக்குப் போதிய ஊக்கு விப்புக்களை வழங்குதல்.

4. பொருளாதாரத் துறைக்கு மூல வளங் களை ஒதுக்குதல்.

5. அரச கூட்டுத்தாபனங்களைத் திறமை யாக இயங்க வழிவகுத்தல்.

இந்நிறுவனத்தின் நுண்ணாய்வுப்பரப்புக்கள்:

1. தனியுரிமை அல்லது அதற்கான சாத் தியம் காணப்படுகின்றதா என நுண் ணாய்வு செய்தல்.

2. வியாபார இணைப்பு அல்லது அதற் கான சாத்தியம் காணப்படுகின்றதா என நுண்ணாய்வு செய்தல்

3. போட்டி எதிர்ப்பு ஒப்பந்தம் அல்லது அதற்கான சாத்தியம் காணப்படுகின் றதா என நுண்ணாய்வு செய்தல்.

இந்நிறுவனத்தின் தொழிற்பாடுகள் :

1. தனியுரிமை, ஒன்றிணைத்தல், போட்டி எதிர்ப்பு ஒப்பந்தம் என்பவை தொடர் பாகப் புலனாய்வு செய்து பணிப்புரை களை வழங்குதல்.

2. பொருட் தட்டுப்பாடு ஏற்படுகையில் விலைகளை நிர்ணயித்து உதவுதல்.

3. விலைகள் பற்றிய பரிசீலனை செய்தல்.

4. அமைச்சர்களின் கோரிக்கைகளுக்கு இணங்க விலையினைப் பரிசீலித்தல்.

5. தேவையான தகவல்களைச் சேகரித்தல்

## கைத்தொழில் தொடர்பான ஆராய்ச்சி அபிவிருத்தி நிறு வனங்கள்.

### 1. இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்

இந்நிறுவனம் 1964 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் பணியகச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு 1974ஆம் ஆண்டு 6ஆம் இலக்க இலங்கைக் கட்டளை கள் நிறுவனச் சட்டத்தின் கீழ் இலங்கை கட்டளைகள் நிறுவனம் என்ற பெயர் மாற் றத்துடன் செயற்படுகின்றது. இவ்வமைப்பு கைத்தொழில் விஞ்ஞான அமைச்சின் கீழ் இயங்குகின்றது.

இந்நிறுவனத்தில் தொழிற்பாடுகள்.

1. தரக் கட்டுப்பாட்டிற்கு உதவுதல்.

2. தரக்கட்டுப்பாட்டை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல்.

3. தரமான உற்பத்திப் பொருட்களிற்குச் S L S எனும் சின்னத்தைப் பொறிக்க சான்றிதழ் வழங்குதல்.

4. ஏற்றுமதிக்கென தயாரிக்கப்படும் சில கடலுணவின் தரத்தைப் பரிசோதித்து சான்றிதழ் வழங்குதல்,

5. ஏற்றுமதிக்கெனத் தயாரிக்கப்படும் சில விவசாயப் பொருட்களின் தரத்தைப் பரிசோதித்துச் சான்றிதழ் வழங்குதல்.

6. இறக்குமதி செய்யப்படும் சில பொருட் களின் தரத்தைப் பரிசோதித்து சான் றிதழ் வழங்குதல்.

7. ''நுகர்வோர் செய்தி'' எனும் சஞ்சிகை யை வெளியிடல்.

### 2. கைத்தொழில் தொடர்பான ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம்

இந்நிறுவனம் 1955-ம் ஆண்டு 15-ம் இலக்க இலங்கைக் கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிலையச் சட்டத்தின் கீழ் நிறுவப் பட்டது. அரசினால் நியமிக்கப்பட்ட தலை வரைக் கொண்ட பணிப்பாளர் சபையால் இது முகாமை செய்யப்படுகின்றது கைத்தொழி லை அபிவிருத்தி செய்வதற்குத் தேவை யான தொழிநுட்ப அறிவை வழங்கவும், மூலப்பொருட்கள், முடிவுப் பொருள்களைப் பரிசோதிக்கவும் ஆராய்ச்சிகளை நடத்தும் பொருட்டும் இந்நிலையம் உருவாக்கப் பட்டது.

இந்நிறுவனம் கைத்தொழில் அபிவிருத் திக்கு உதவும் வழிகள்.

1. மூலப் பொருட்களினதும், முடிவுப் பொருட்களினதும் தரப் பரிசோதனை களை மேற்கொள்ளல்

2. புதிய உற்பத்தி முறைகளையும் தொழில் நுட்பங்களையும் அபிவிருத்தி செய்தல்

3. தொழில்நுட்ப அபிவிருத்தி, சிக்கனம், விரயங்களைத் தடுக்க ஆலோசனை வழங்குதல்.

4. புதிய மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.

5. உற்பத்திப் பொருட்களின் நியமத்தினை நிர்ணயித்தலும் உறுதிப்படுத்தலும்.

6. தகவல்களை சேகரித்து வழங்குதல்.

## 3. வர்த்தகத் திணைக்களம்

வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள் தொடர்பான ஆலோசனைகள் கூறக் கூடிய அதிகாரமிக்க வியாபார வர்த்தக அமைப்பிற்கு ஒத்துழைப்பு வழங்கும் வர்த்தகத் திணைக்களம் வெளிநாடுகளில் வர்த்தகத்தை அபிவிருத்தி செய்வதிலும் பொறுப்பு வகிக்கின்றது. சந்தைக்குத் தேவையான தகவல்களைக்கொடுப்பதோடு வெளிநாட்டுத் தேவைகள் தொடர்பாகச்சேவைகளை வழங்குவதனூடாகவும் ஏற்றுமதிப் பொருட்களுக்குகந்த சந்தைகளை தேடிக்கொடுப்பதோடு ஏல விற்பனைச்சந்தைகள் பொருட்காட்சிகளில் பங்குபற்றுவதோடு பயன்மிக்க வெளிநாட்டுச் சந்தைகளுக்கு வர்த்தகத் தூதுக் குழுக்களை அனுப்புவதிலும் ஒத்துழைப்பு வழங்குதல் போன்ற பல நடவடிக்கைகள் மூலம் ஏற்றுமதியாளர்களுக்குப் பெருமளவு சேவைகளை இத்திணைக்களம் வழங்குகின்றது.

திணைக்களத்தின் அதிகாரிகள் வெளிநாட்டுத் தூதுவர் நிறுவனங்களில் சேவையாற்றுவதோடு வர்த்தக விடயங்களிலும் சேவையாற்றுவதோடு, அவர்களின் பதவிகளுக்கேற்ப வர்த்தகப் பொருளாதார விடயங்களிலும் பொறுப்பாக உள்ளனர்.

இத்திணைக்களத்தின் வர்த்தக அபிவிருத்திப் பிரிவு ஏற்றுமதியாளர்களுக்கு வெளிநாட்டுச் சந்தையில் வெளிநாட்டுக் கொள்வனவுகாரர்களோடு போட்டியிடத் தேவையான ஆலோசனைகளையும் மற்றும் வசதிகளையும் பெற்றுக் கொடுக்கின்றது. இத்திணைக்களத்தின் நூல்நிலையத்தின் மூலம் ஏற்றுமதியாளர்களுக்குச் சந்தைகள் தொடர்பான பெறுமதிமிக்க பல தகவல்கள் அடங்கிய வர்த்தக வெளியீடுகள், விலைகள் என்பனவற்றையும் வழங்குகின்றது.

## 4. ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

இதன் முக்கிய நோக்கம் 1969-ம் ஆண்டு 1-ம் இலக்க ஏற்றுமதி இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டத்தை அமுலாக்குவதாகும். சுதந்திர இறக்குமதி, ஏற்றுமதிகளுக்குத் தேவையான அரசின் கொள்கைகளை சிறந்த முறையில் நடைமுறைக்குக் கொண்டுவர இத்திணைக்களம் காலத்துக்கு காலம் புதுப்பிக்கப்படுகின்றது.

பெருமளவிலான பலவகைப் பொருட்களின் இறக்குமதியைத் தளர்த்தியுள்ளது. இப்போதைக்கு 11 வகைப் பொருட்களை மாத்திரம் ஏற்றுமதி செய்ய இத்திணைக்களத்தின் அனுமதிப்பத்திரம் தேவைப்படுகின்றது.

## 5. விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களம்

1988 டிசம்பர் 31-ம் திகதி வரை இப்பெயரால் இத்திணைக்களம் அழைக்கப்பட்டாலும் அதன் பின்னர் உள்நாட்டு வர்த்தக ஆணையாளரின் திணைக்களம் என்றே அழைக்கப் படுகின்றது. 1988-ம் ஆண்டு இலங்கையில் காணப்பட்ட விலைக்கட்டுப்பாட்டு முறை கைவிடப்பட்டது. இப்போதைக்கு இத்திணைக்களத்தின் கடமைகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

★ ஒழுங்கற்ற முறையில் இலாபமீட்டல், கூடுதலாகப் பொருட்களைச் சேமித்து வைத்தல் போன்ற வியாபாரத்தில் நடைபெறும் ஒழுங்கீனங்களைத் தீர்த்து வைப்பதோடு திடீர் பரிசோதனைகளின் மூலம் விலைகளைச் செயற்பட வைப்பதும் விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் என்பன தொடர்பான அதிகாரம்மிக்கவராகவும் சட்டரீதியில் செயலாற்றல்.

● இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவீடுகளை நடைமுறைப்படுத்திச் செல்லவும் நாட்டின் ஏனைய நிறுவனங்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவீடுகளையும் உரித்தாக்குதல்.

● இலங்கையில் நடைமுறையில் இருக்கும் படிகள், அளவீடுகள், நிறையை அளக்கும் உபகரணங்கள் பற்றி வருடாந்தம் ஆய்வுகளை நடாத்தல், முத்திரை வைத்தல் மூலம் பணத்தைச் சேர்த்தல்.

● இலங்கையின் உள்நாட்டு வியாபாரம், பாவனையாளரைப் பாதுகாத்தல், பாவனையாளரை உற்சாக மூட்டுதல், பாவனையாளரின் கல்வியை அபிவிருத்தி செய்தல் என்பவற்றிற்றுக்குத் தேவையான சட்டங்களைப் பிறப்பித்தல்.

இன்று இத்திணைக்களம் மேற்கூறிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகச் செயற்படுகின்றன.

## 6. வர்த்தகப் பொருட்கள் கொள்வனவுத் திணைக்களம்.

இத்திணைக்களத்தின் முக்கிய குறிக்கோள்கள்.

● சர்வதேசச் சந்தையில் விலைகளுக்கேற்ப ஆர். எஸ். எஸ். இறப்பருக்காக விசேடமாக சிறியளவிலான இறப்பர் உற்பத்தியாளர்களின் இறப்பருக்காக சாதாரண ஒரு விலையை உறுதிப்படுத்தல்.

● சிறிதளவான இறப்பர் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் ஆர். எஸ். எஸ். இறப்பர் உற்பத்திகளின் இயல்புகளை விருத்தி செய்தல்.

● நாட்டுக்கு, வெளிநாட்டு செலாவாணியைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் ஆர். எஸ். எஸ். இறப்பரின் ஏற்றுமதியை விருத்தி செய்தல்.

● ஆர். எஸ். எஸ். இறப்பரை உற்பத்தி செய்யும் போது பயன்படுத்தப்படும் போர்மிக் அசிட் திரவத்தை சிறிதளவில் உற்பத்தி செய்வோருக்கு ஒருமானிய விலையில் விநியோகித்தல்.

மேற்கூறிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளுமுகமாகத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் வழிவகைகள்,

● நாட்டின் ஏனைய பிரதேசங்களில் விலைக்கு வாங்கும் நிலையங்களில் இருந்து இச்சிறு உற்பத்தியாளர்களுக்கு ஆர். எஸ். எஸ். இறப்பருக்குக் கொடுக்க வேண்டிய நாளாந்த விலையின் அளவை வெளியிடல்,

● பிரதானமாக இறப்பரை உற்பத்தி செய்யும் பிரதேசங்களில் காணப்படும் இறப்பரை விலைக்கு வாங்கும் 14 நிலையங்களினால் சிறு உற்பத்தியாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் ஷீட் இறப்பரை விலைக்கு வாங்குதல் விற்றல், என்பவற்றுக்காக மத்திய களஞ்சியத்துக்கு அனுப்புதல், தெரிவு செய்தல், வகைப்படுத்தல் அடைத்தல்.

● வெளிநாட்டுக் கொள்வனவாளர்களைப் போலவே உள்நாட்டுச் சந்தைக்கு இறப்பரை விற்றல்.

● போர்மிக் அசிட்டை சாதாரண விலைக்கு வழங்குதலும் விநியோகித்தலும்

## 7. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

1979 இன் 40ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சபை சட்டப்படி 1979 ஆகஸ்ட் 1 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இச்சபைக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ள முக்கிய கடமைகள் பின்வருமாறு.

● ஏற்றுமதிப் பொருட்களின் பண்புகளைச் சிறந்த சூழ்நிலைக்கேற்ப விருத்தி செய்யக்கூடிய ஆலோசனைகளை முன்வைத்தல்.

● ஏற்றுமதி தொடர்பான உற்பத்திகளையும் சேவைகளையும் விரிவடையச் செய்ய உற்சாக மூட்டல்.

● வியாபார விடயங்களைப் பரவச் செய்தல். ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்த்தல் போன்றவை மூலம் சந்தையை விருத்தி செய்வதற்கான விஷேட ஏற்றுமதிச் சேவைகளை வழங்கல்.

மேற்கூறிய கடமைகளை நிறைவேற்றுவதில் பங்குகொள்ளும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது வர்த்தகக் கப்பற்றுறை அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. இதன் பணிப்பாளர்கள் சபையில் ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சுக்குரிய 9 அமைச்சுக்களின் நிரந்தர செயலாளர்களும் தனியார் பிரிவின் பிரதிநிதிகளும் (பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின்) முதலீட்டுச்சபையின் பிரதிநிதிகளும் அடங்குவர். ஏற்றுமதி அபிவிருத்திச்சபையின் மூலம் ஏற்றுமதியை அபிவிருத்தி செய்ய பல சேவைகளை ஆற்றியுள்ளது. ஏற்றுமதியில் காணப்பட்ட கட்டுப்பாடுகளை நீக்குவதை உறுதிப்படுத்தும் வரிச்சலுகைகளைப் பெற்றுக் கொடுத்தல், ஏற்றுமதிக்கிராமங்களை உருவாக்கல், தேசிய ஏற்றுமதிவேலைத் திட்டத்தை அமைத்தல் போன்றவை இச் சேவைகளிற் சிலவாகும்.

## தேசிய தொடர்புச் சபை

இச்சபை ஆரம்பிக்கப்பட்டது ஏற்றுமதித் தொடர்பாளர்களின் தொடர்புகள் பற்றிய பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கும் நோக்குடனாகும். பின்னர் உற்பத்தியாளர்களினதும் தொழிற்சாலை உரிமையாளர்களினதும் தொடர்புகளின் தேவைகளுக்கான ஆலோசனைகளை வழங்கலும் உற்பத்தியை விருத்தி செய்தலும் அதனிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்நிறுவனத்தின் நோக்கங்கள் பின்வருமாறு.

● தொழிலாளர்களுக்குத் தொடர்பாடல்கள் பற்றிய விபரங்களைப் பெற்றுக் கொடுக்கும் நிறுவனமாகச் செயற்படல்.

● உற்பத்தியாளர்களுக்கும் அவற்றைப் பயன்படுத்துவோருக்கும் பயிற்சி வகுப்புக்களை நடாத்துதல்.

● இத்துறையின் தொழில்பற்றி விசேடமான பிரச்சனைகளை அரசுக்கும் அரசின் நிறுவனங்களின் கவனத்துக்கும் கொண்டு வரல்.

● வெளிநாடுகளின் விருத்தியடைந்த தொழில் நுட்பமானது இந்நாட்டுக்கும் பெற்றுக் கொடுக்கும் திட்டத்துக்கும் வேண்டிய தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதன் மூலமும் தொடர்புகளை விருத்தி செய்து கொள்வதன் மூலமும் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுத்தல்.

தேசிய தொடர்பாடல் நிலையத்துக்கு அதற்குரிய ஒரு நூல்நிலையம் காணப்படுகின்றது. அங்கு பல வகைப்பட்ட தொடர்பாடல் ஊடகங்கள், தொடர்பாடல் செயல்முறைகள், இயந்திரங்கள் பற்றிய விபரங்கள், நூல்கள் சஞ்சிகைகள் என்பனவும் சில வகை தொடர்பாடல் மாதிரிகளும் காணப்படுகின்றன. அதேபோல் சர்வதேசச் சந்தையிலிருந்து கிடைக்கும் வகைப்படுத்தப்பட்ட தகவல்களும் சேர்த்து வைக்கப்பட்டுள்ளது. ஆனால் தொடர்பாடல் பொருட்கள் அதற்கான ஆய்வு காட்சிப்பத்திரமொன்றை வழங்கும் வசதி இங்கில்லை. இந் நிறுவனமும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் மிக நெருங்கிய விதத்தில் தொடர்பு கொண்டு செயற்படும் இருநிறுவனங்களாகும்.

## முடிவுரை -

இலங்கையில் கைத்தொழில் வர்த்தகம் வளர்ச்சியடைந்து வருவதற்கு மேலே கூறப்பட்டுள்ள நிறுவனங்கள், அமைப்புக்கள் தமது பணிகளையும் சேவைகளையும் ஆற்றி வருகின்றன என்பதை மேற்கூறிய கட்டுரையின் மூலம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

# இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தியில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பங்கு

## (Function Of Industrial Development Board)


ஆன் அனோஜா பிரியந்தி பாலேந்திரன்
99 வர்த்தகப்பிரிவு


## முகவுரை :

இலங்கையில் கைத்தொழில் துறையானது முதன்மையாக வளர்ச்சியடைந்து வருவதினைக் காணக்கூடியதாக உள்ளது, நவீன கைத்தொழில் நாடாக இலங்கையினை முன்னேற்றுவிக்கும் பொருட்டு பல கைத்தொழில் ஊக்குவிப்புக்களை அரசு வழங்கி வருகின்றது. அவற்றில் முக்கியமான ஒரு நடவடிக்கையாக அரசு சிறிய நடுத்தரக் கைத்தொழில்களை மேம்படுத்தவென உருவாக்கிய கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணிகளை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையில் அண்மைக் காலத்தில் கைத்தொழில் நடவடிக்கைகளை முன்னேற்றுவிப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருவதைக் காணலாம் கைத்தொழில்களைப் பிரதேச ரீதியாக நிறுவுவதில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. இவ்வகையில் நாட்டின் பல இடங்களில் கைத்தொழிற் பேட்டைகள் நிறுவப்படுவதைக் காணலாம். நாட்டின் பயன்படுத்தப்படாத மூலவளத்தைப் பயன்படுத்தவும் வேலை வாய்ப்புக்களைப் பெருக்கவும், பிரதேச ரீதியாக அபிவிருத்தியை ஏற்படுத்தக் கூடிய வகையில் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க அரசு பல்வேறு வழிகளிலும் உதவி வருகின்றது. இவ்வகையில் கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு உதவும் வகையில் அரசினால் நிறுவப்பட்ட அமைப்புக்களில் ஒன்றாகக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை காணப்படுகின்றது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையானது 1969ஆம் ஆண்டு 36ம் இலக்க இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை சட்ட மூலத்தின் கீழ் நிறுவப்பட்ட ஓர் அரச அமைப்பு ஆகும். இதன் நிர்வாகம் இயக்குனர் சபையால் மேற்கொள்ளப்படும். இலங்கையின் சிறிய நடுத்தரக் கைத்தொழிலாளர்களுக்கு இவ் அமைப்பு பெருமளவு உதவி வருகின்றது. இங்கு சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் எனப்படுவது யாது? இவ் அமைப்பு, நிலம், கட்டிடம் தவிர்ந்த 4 மில்லியன் ரூபாவுக்கு மேற்படாத நிலையான சொத்துக்களையும் நிலையான தொழிற்படு மூலதனத்தையும் கொண்டமைந்த நிறுவனம் சிறிய நடுத்தர நிறுவனமாக இனம் கண்டு, அறிவுரைகள், ஆய்வுகள், தொழில் நுட்ப வசதி போன்ற பல சேவைகள் அளிக்கப்படுகின்றன.

### கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் குறிக்கோள்கள்

- கைத்தொழிலை ஊக்குவித்தலும், மேம்படுத்தலும்.
- கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல்,
- உள்நாட்டுக் கைத்தொழிலாளர்களுக்கு அவசியமான தகவல்களை வழங்கல்.

- கைத்தொழில் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தக்கூடிய நுட்ப முறைகளை விருத்தி செய்தல்.
- கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தும் பொருள் உற்பத்தி தொடர்பான ஆர்வத்தை விருத்தி செய்தல்.
- கைத்தொழில் அபிவிருத்திக்கு அவசியமான சர்வதேச ஒத்துழைப்பைப் பெறுதல்.

## கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தொழிற்பாடுகள்

கைத்தொழில் அபிவிருத்திச் சபை மேற்கூறப்பட்ட குறிக்கோள்களை அடைவதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் பொருட்டு பல்வேறு பங்களிப்புக்களை மேற்கொண்டு வருகின்றது. அவ்வகைப் பங்களிப்புக்களை அவதானிப்போம்.

### 1. கைத்தொழிலாளர்களுக்குத் தொழில்நுட்ப சேவையாற்றல்

நிறுவனத்தின் தொழிற்பாடுகளுடன் இசைந்த அறிவும், அனுபவமும், திறன்களுமே தொழில் நுட்பம். இவ் அமைப்பு பின்வரும் வழிகளில் இச்சேவையை ஆற்றுகின்றது.

- பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கல்.
- உற்பத்தி அபிவிருத்திக்கு ஆலோசனை வழங்கல்.
- செயற்திட்டங்கள் பற்றிய ஆலோசனை வழங்கல்.
- தரக்கட்டுப்பாடுபற்றிய ஆலோசனை வழங்கல்.
- உற்பத்தியுடன் சம்பந்தப்பட்ட விதிகள் பற்றிய தகவல்களை வழங்கல்.

### 2. பொறியியல் சேவை வழங்கல்

இயந்திர சாதனங்களின் தெரிவும் அதன் பயன்பாடும் கைத்தொழில் வளர்ச்சிக்கு அவசியமானவை. இவ்வமைப்பு பின் வரும் வழிகளில் பொறியியல் சேவைகளை அளிக்கின்றது.

- இயந்திரங்களை நவீனமயப்படுத்தல்.
- இயந்திரங்களைத் தெரிவு செய்தல், பொருத்துதல் என்பவற்றிற்கு ஆலோசனை வழங்கல்.
- இயந்திரங்கள் உபகரணங்களை உற்பத்திக்குத் தயாராக்குவதற்கான வசதிகளைச் செய்தல்.
- தொழில் நுட்ப அபிவிருத்தி ஆராய்ச்சி வசதிகளைச் செய்தல்.

### 3 கைத்தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல்

பொதுவான கொள்கைக்கு அமைய வணிக முயற்சிகளுக்குத் தேவைப்படும் ஆரம்ப வசதிகள், அடிப்படை வசதிகள் ஆகும். இச்சபையானது கைத்தொழிற் பேட்டையில் உள்ள முயற்சியாளர்களுக்குக் கீழ்க் காணும் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கின்றது. அவையாவன,

- பொருத்தமான அமைப்பில் கட்டிடங்களை அமைப்பதற்குக் குத்தகை முறையில் நிலம் வழங்கல்.
- கட்டிடங்களை அமைத்துக் கொடுத்தல்.
- நீர் வசதி, மின்சார வசதி, செய்தல்.
- போக்குவரத்து, தொட்டர்பூட்டல் வசதி,
- கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்கான பாதை வசதி

(கைத் தொழில், பேட்டைகள், ஏக்கல, அவிசாவெல, பூஷா, அச்சுவேலி என்னும் இடங்களில் உள்ளன.)

### 4. கைத்தொழிலாளர்களுக்கான தகவல்களை வழங்கல்

ஒரு நிறுவனத்தின் வெற்றிக்குத் தகவல்கள் பெரிதும் உதவுகின்றன. இச் சபையானது கீழ்க்காணும் வழிகளில் தகவல் சேவையாற்றுகின்றது.

- தலைமை அலுவலகம் அல்லது பிரதேச அலுவலகம் மூலம் நேரடியாகத் தகவல் சேவை ஆற்றல்.
- சுருக்க வெளியீடுகள் அல்லது பிரசுரங்கள் மூலம் தகவல் அளித்தல்.
- கறுமாந்த சஞ்சிகை வெளியிடல்.
- நூலக சேவை மூலம் தகவல் அளித்தல்.
- கடிதத் தொடர்பு, கருத்தரங்கு மூலம் ஆலோசனைச் சேவையாற்றல்.

### 5. முகாமைத்துவப் பயிற்சியும் ஆலோசனைச் சேவையும்

எந்தவொரு நிறுவனத்தின் வெற்றிக்கும் முகாமைத்துவ ஆலோசனை அவசியமாகும். சிறந்த திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்த அது உதவும். இவ் அமைப்பு பின்வரும் வழிகளில் இச்சேவையை ஆற்றுகின்றது.

- புதிய முதலீட்டாளர்களுக்கான ஆலோசனை வழங்கலுக்கான திட்டங்களை உருவாக்குதல்.
- செயற்திட்ட நோக்குடனான பயிற்சித் திட்டங்களை உருவாக்குதல்.
- பாடசாலையில் இருந்து விலகுவோரை கைத்தொழிலில் ஊக்குவிப்பதற்கான பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல்

### 6. சந்தைப்படுத்தல் சேவையாற்றல்

சந்தையை இனம் கண்டு சந்தை நிலைமைகளை அறிந்து விற்பனையைப் பெருக்க பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இதற்காக இவ்வமைப்பு பின்வரும் சேவைகளை ஆற்றுகின்றது.

- எதிர்கால சந்தை வாய்ப்புள்ள உற்பத்திகள் பற்றி அறிக்கைகளும், புள்ளி விபரங்களும் தயாரித்தல்.
- உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தைகளின் போக்குக்களுக்கு அமைய தரம், பாணி, விலையிடல், பொதியிடல், விநியோகம், மேம்படுத்தல் போன்றவை பற்றி அறிக்கைகள் வழங்கல்.
- சந்தை அறிக்கைகளைத் தயாரித்தலும் தேவையான சந்தர்ப்பங்களில் சந்தை ஆய்வுகளை மேற்கொள்ளலும்.
- உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்களைக் காட்சிக்கு வைத்தலும் அவற்றை விற்பனை செய்வதற்கான நிலைகளை நெறிப்படுத்தலும்.

### முடிவுரை :-

மேற் காட்டப்பட்ட வழிவகைகள் மூலமாக இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையானது கைத்தொழிலின் அபிவிருத்தியில் முக்கிய பங்காற்றி வருவதைக் காணலாம். இந் நிறுவனத்தின் பணியானது கைத்தொழிற் துறையின் முன்னேற்றத்துக்கு இன்றியமையாத ஒன்றாகும்.

அக்கிரகாரம்-அரச ஊழியருக்கான காப்புறுதித் திட்டம்

இக்காப்புறுதித் திட்டத்தை அரச நிறுவனமும் காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் இணைந்துமேற்கொள்கின்றது.

# கையிருப்புக் கட்டுப்பாடு
## (Inventory Control)

Mr. T. Velnampy
Lecturer
Dept of Commerce
University of Jaffna.

## 1·0 அறிமுகம்

கையிருப்பு என்பது நிறுவனத்தில் காணப்படும் மூலப்பொருள், குறைவேலை, முடிவுப்பொருள் என்பவற்றைக் குறிக்கும் என இலங்கைக் கணக்கீட்டு நியமம் SLAS—5 (Sri Lanka Accounting Standard) குறிப்பிடுகின்றது. இதனைப் பின்வருமாறு விளக்கமாகக் குறிப்பிடலாம்.

1. விற்பனை செய்வதற்காக வியாபாரத்தில் வழமையாக வைத்திருக்கப்படும் பொருள் — முடிவுப்பொருள்
2. விற்பனை செய்வதற்கென உற்பத்திச் செயன்முறையில் வைத்திருக்கப்படும் சொத்து — நடைமுறைவேலை.
3. விற்பனை செய்யப்படுவதற்காகப் பொருட்கள், சேவைகளது உற்பத்தியில் நுகரப்படும் பொருட்கள் — மூலப் பொருள்.

இருப்புக்கள் பொதுவாக வரலாற்றுக் கிரயத்தில் (Historical Cost) மதிப்பீடு செய்யப்படும். ஆனால் தேறிய நிகரப் பெறுமதி கருத்திற் கொள்ளப்படவேண்டின் வரலாற்றுக் கிரயம்,தேறிய நிகரப் பெறுமதி என்பவற்றின் எது குறைவோ அதுவே கருத்தில் கொள்ளப்படும்.

Note:- மேலதிக விளக்கங்களுக்கு SLAS—05 யைப் பார்க்கவும்.

### கையிருப்புக் கட்டுப்பாடு (Stock Control)

1·1 நிறுவனங்கள் தேவைகளுக்குக் கூடாமலும், குறையாமலும் தொடர்ச்சியாக மூலப்பொருட்களையும், முடிவுப் பொருட்களையும் குறைந்தளவில் வைத்திருப்பதற்கு மேற்கொள்ளப்படும் திட்டவட்டமான நடவடிக்கையே சரக்கிருப்புக் கட்டுப்பாடு எனப்படும். அல்லது எந்த நேரத்திலும் தேவையான அளவு களஞ்சிய இருப்புச் சுழற்சியை ஏற்படுத்தத் தேவையான இருப்பைப் பராமரிக்கும் செயற்பாடு எனவும் குறிப்பிடலாம்.

இருப்புத் தொடர்பான நிறுவனத்தில் எழுகின்ற பிரதான பிரச்சினைகள்.

(1) எந்தளவு பொருட்களைக் கொள்வனவு செய்து இருப்பில் வைத்திருத்தல்.

(2) எவ்வளவு காலத்துக்கொரு முறை பொருட்களைக் கொள்வனவு செய்தல்.

எனவே இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையே சரக்கிருப்புக் கட்டுப்பாடு எனப்படும்.

### 1·2 இருப்புக் கட்டுப்பாட்டின் நோக்கங்கள் (Purposes of stock control)

(1) உற்பத்தியானது தொடர்ச்சியாக நடைபெறுவதற்குத் தேவையான பொருட்களைத் தடையின்றி வழங்குதல்.

(2) உற்பத்தியின் பண்புகளைப் பாதுகாக்கும் வகையில் பொருட்கள் கிடைப்பதற்கு வழிசெய்தல்.

(3) இருப்புடன் தொடர்புடைய மொத்தச் செலவைக் குறைப்பது அல்லது கட்டுப்படுத்துவது.

(4) இருப்புப் பரிமாற்றத்தின் போது ஏற்படக் கூடிய இழப்புக்களையும், விரயங்களையும் தவிர்த்தல் அல்லது குறைத்தல்.

(5) நிதி முடங்கல் அல்லது மூலதன முடங்கல்களைத் தடுத்தல்.

(6) முகாமைக்கு இருப்புத்தொடர்புடைய செலவுகளையும், தகவல்களையும் வழங்குதல்.

## 1.3 கையிருப்பு மிகையினால் ஏற்படக் கூடிய தீமைகள்

(i) நிதி முடங்கல் அல்லது மூலதன முடங்கல் ஏற்படும்.

(ii) பண்டகசாலைச் செலவுகள் அதிகரிக்கும்.

(iii) அழிவடைதல், பழமையாதல், களவாடப்படுதல், போன்றவற்றால் நட்டமேற்படும்.

(iv) பாதுகாப்புப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும்.

(v) மேலதிக முதலீட்டுக்கான வட்டிச் செலவு ஏற்படலாம்.

(vi) ஊழியர்கள் தகாதமுறையில் பொருட்களைத் தமது சொந்தத் தேவைக்கு எடுத்துச் செல்வதைத் தடுக்கமுடியாது.

## 1.4. கையிருப்புக் குறைவாக இருப்பதனால் ஏற்படும் பாதிப்புக்கள்

(1) உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்கள்கிடைக்காவிடின் உற்பத்தி தடைப்படும். இதனால் வாடிக்கையாளர் மத்தியில் நன்மதிப்பு இழப்பு ஏற்படும்.

(2) நிறுவனத்தின் விற்பனை, இலாபம் என்பவற்றில் வீழ்ச்சி ஏற்படும்.

(3) கட்டளையிடல் செலவுகள் அதிகரிக்கும்

(4) ஏனைய நிறுவனங்களுக்குத் தகுந்த போட்டியை வழங்க முடியாது.

(5) உற்பத்தி தடைப்படுமாயின் ஊழியர்கள் மத்தியில் சோர்வு, விரக்தி என்பன ஏற்படலாம்.

(6) உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது அதற்கான விலை உயர்வாக இருக்கலாம்.

(7) இயந்திரங்களது உச்சப்பயன்பாட்டைப்பெறமுடியாது.

## 1.5 பொருட்கள் கொள்வனவு செய்யப்படும் போது பின்பற்றப்படும் நடைமுறைகள் / செய்முறைகள்

(1) களஞ்சியப்பகுதியிலிருந்து, கொள்வனவுப் பகுதி பொருட்கொள்வனவுக்கான வேண்டுகோளைப் பெற்றுக் கொள்ளுதல்.

(2) பொருத்தமான பொருள் வழங்குநரைத் தெரிவு செய்தல். இதன் பொருட்டு கேள்வி முறையோ அல்லது பதிவு செய்யப்பட்ட வழங்குநர் முறையோ பின்பற்றப்படலாம்.

(3) தெரிவு செய்யப்பட்ட வழங்குநருக்கு கொள்வனவுக் கட்டளையை அனுப்புதல்.

(4) பொருட்களைப் பெற்றுக்கொள்ளுதல்

(5) பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்கள் கட்டளையுடன் ஒத்திருக்கின்றனவா எனப் பரிசோதித்தல்.

(6) பொருட்களைக் களஞ்சியத்துக்கு அல்லது உற்பத்திப் பிரிவுக்கு அல்லது விற்பனைப் பிரிவுக்கு அனுப்புதல்.

(7) கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்.

## 1.6 வேண்டுகோள் பத்திரம்

பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கென களஞ்சியப் பகுதியால் கொள்வனவுப் பகுதிக்கு அனுப்பப்படும் பத்திரம் பொருட் கொள்வனவுக்கான வேண்டுகோள் பத்திரம் எனப்படும். இவ் வேண்டுகோளில் பின்வரும் அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

(1) வேண்டப்படும் பொருட்களின் வகையும் அடையாளங்களும்.

(2) தேவைப்படும் அளவு.

(3) தேவையான கால எல்லை.

(4) அனுமதி வழங்குநரின் கையொப்பம்.

## 1.7 கொள்வனவுக் கட்டளை

பொருத்தமான பொருள் வழங்குநரைத் தெரிவு செய்ததும், அவருக்குக் கொள்வனவுப் பகுதியால் கட்டளை அனுப்பப்படும். இதுவே கொள்வனவுக்கட்டளை எனப்படும். இதில் உள்ளடக்கப்படும் விடயங்கள்.

(1) வழங்குநரின் பெயரும் விலாசமும்.

(2) பொருட்களின் வகையும் அளவும்.

(3) தேவைப்படும் திகதியும், கால எல்லையும்.

(4) வழங்கல் தொடர்பான நிபந்தனைகள்.

(5) உரிய பொறுப்பதிகாரியின் கையொப்பம்.

## 1.8 பொருள் ஒப்படைப்புப் பத்திரம்

பொருட்களுக்கான கட்டளையைப் பெற்றதும் வழங்குநர் தம்மால் அனுப்பப்படும் பொருட்களுடன் பொருள் ஒப்படைப்புப் பத்திரத்தையும் சேர்த்து அனுப்புவர்.

இதில் உள்ளடக்கப்படும் விடயங்கள்.

(1) கட்டளை இலக்கமும், திகதியும்.

(2) தொகையும், பொருள் விபரமும்.

(3) பொறுப்பதிகாரியின் கையொப்பம்.

## 1.9 பெட்டி அட்டை / பந்தைய அட்டை

இருப்புத் தொடர்பான விபரங்களைப் பதிவு, செய்து வைத்திருப்பதற்குப் பயன்படுத்தப்படும் பத்திரம் பெட்டி அட்டை எனப்படும். இதில் இருப்புக்களின் பெறுவனவுகள், வழங்கல், மீதியாகவுள்ள தொகை என்பன காட்டப்பட்டிருக்கும். பொருட்கள் கொள்வனவு செய்யப்படும் போதும் வழங்கப்படும் போதும் அவை இவ்வட்டையில் பதிவு செய்யப்படும். இதனால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் களஞ்சியத்தில் இருக்கும் இருப்பின் அளவினைப் பெற்றுக் கொள்ள முடியும். ஒவ்வொரு வகையான பொருட்களும் தனித்தனியான பெட்டியட்டை எனப்படும். பந்தாய அட்டை ஒன்றின் அமைப்பினைப் பின்வரும் மாதிரி மூலம் விளக்கிக் காட்டலாம்.

### பெட்டியட்டை

பொருளின் பெயர்:- ........................ குறியீட்டெண்:- ........................

கட்டளைத் தொகை:- ........................ உயர் இருப்பு மட்டம்:. ........................

களஞ்சியப் பேரேட்டு இல:- ........................ இழிந்த இருப்பு மட்டம்:- ........................

பெட்டியட்டை இல:- ........................ மறுகட்டளையிடும் மட்டம்:- ........................

| திகதி | பெறுவனவு | | வழங்கியது | | மீதி | குறிப்புக்கள் கட்டளையிடும் பொருட்களும் கணக்காய்வுக்குறிப்புக்களும் |
|---|---|---|---|---|---|---|
| | திகதி | அளவு | திகதி | அளவு | அளவு | |
| | | | | | | |

## 1.10 இருப்புடன் தொடர்புடைய செலவுகள்

இருப்புடன் தொடர்புடைய செலவுகளைப் பொதுவாகப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. கட்டளையிடல் செலவுகள் ( Ordering Cost )
2. இருப்பு வைப்புச் செலவு ( Stock holding cost )

கட்டளையிடல் செலவானது பின்வருவனவற்றை உள்ளடக்கியதாயிருக்கும்.

1. பொருட்களின் கட்டளையுடன் தொடர்புடைய செலவு.
2. போக்குவரத்து.
3. கொள்வனவுச் செலவும், கணக்குப்பதிவேடுகளைப் பேணும் செலவும்.
4. உள்ளகக் கட்டளைகளுடன் தொடர்புடைய திட்டமிடல் கட்டுப்பாட்டுச் செலவுகள்.

இருப்புவைப்புச் செலவானது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

1. வாடகை, மின்சாரம், பாதுகாப்பு முதலான களஞ்சியச் செலவுகள்.
2. கணக்காய்வு இருப்பெடுத்தல்செலவுகள்
3. மூலப்பொருள் கையாளல் செலவுகள்.
4. அழிவு, பழமையாதல், களவு போதல் என்பவற்றால் ஏற்படும் செலவுகள்.

இருப்பு வைப்புச் செலவு கட்டளைச் செலவு எற்பவற்றின் கூட்டுத்தொகை, இருப்புடன் தொடர்புடைய மொத்தச் செலவாக அமையும்.

$$T C = SHC + OC$$

## 1.11 இருப்பு மட்டங்கள் ( Stock Levels )

இருப்புக் கட்டுப்பாட்டு முறைமையின் பிரதானநோக்கங்களில் ஒன்று இருப்பினைத் தேவைக்குக் கூடாமலும், குறையாமலும் தகுந்தளவில் வைத்திருப்பதே. இதன் பொருட்டு நிறுவனங்கள் பல்வேறு இருப்பு மட்டங்களைப் பேணுவதே வழக்கம்.

அவையாவன.

1. மறுகட்டளையிடும் மட்டம்.
2. ஆகக்குறைந்த மட்டம்.
3. ஆகக் கூடிய மட்டம்.
4. சராசரி இருப்பு மட்டம்.

### 1.11.1. மறுகட்டளையிடும் மட்டம் Re - Order Level

நிறுவனமொன்று தனது களஞ்சியத்தில் எவ்வளவு பொருட்கள் இருப்பாக உள்ள போது கொள்வனவுக் கட்டளைகளைப் பிறப்பிக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் அளவே மறுகட்டளையிடும் மட்டமாகும். அதாவது நிறுவனமொன்று பொருட்களுக்குக் கட்டளையிட்டால் அப்பொருட்கள் வந்து சேர்வதற்குச் சிலகாலம் எடுக்கும். அக் காலம் மறுகட்டளையிடும்காலம் எனப்படும். எனவே இக்காலத்துக்கான கேள்வியானது இருப்பில் இருக்கின்ற பொழுதே பொருட்களுக்குக் கட்டளையிடுதல் வேண்டும். இதுவே மறுதரம் கட்டளையிடும் மட்டம் எனப்படும். இது ஆகக் குறைந்த சரக்கிருப்பு மட்டத்திலும் பார்க்க கூடுதலாகவும், ஆகக் கூடிய மட்டத்திலும் பார்க்கக் குறைவாகவும் இருக்கும்.

அசாதாரண பாவனை காரணமாகவோ அன்றேல் புதிய பொருட்கள் வந்து சேர்வதில் எதிர்பாராதவிதமாக ஏற்படும் காலதாமதம் காரணமாகவோ ஏற்படக் கூடிய பாதிப்புக்களைச் சமாளிப்பதற்கு இம்மட்டம் உதவுகின்றது.

இதனைப் பின்வருமாறு கணிப்பீடு செய்யலாம்.

மறுகட்டளைமட்டம் = ஆகக்கூடிய பாவனை $\times$ ஆகக்கூடிய பாவனைக் காலம்.

### 1.11.2. ஆகக் குறைந்த சரக்கிருப்பு மட்டம் / இழிவு இருப்புமட்டம்

ஒரு நிறுவனம் வைத்திருக்கவேண்டிய ஆகக் குறைந்த சரக்கிருப்பின் அளவைக் காட்டும் மட்டம் ஆகக் குறைந்த இருப்பு மட்டம் எனப்படும். இம்மட்டத்தை விட இருப்பானது குறைவடையும் ஆயின் அது நிறுவனத்துக்குப் பல பாதிப்புக்களை ஏற்படுத்தும். இம்மட்டம் பின்வருமாறு கணிப்பீடு செய்யப்படும்.

மறுகட்டளையிடும் மட்டம் — ( சாதாரண பாவனை × சாதாரண கட்டளைக் காலம் )

### 1.11.3. ஆகக் கூடிய சரக்கிருப்புமட்டம்

நிறுவனமொன்று வைத்திருக்கக் கூடிய ஆகக்கூடிய சரக்கிருப்பினையே இது குறிக்கும். இம்மட்டத்துக்கு மேல் சரக்கிருப்பினை வைத்திருப்பின் அது மிகையான கையிருப்பின் விளைவை எதிர்நோக்க வேண்டியேற்படும். இம்மட்டம் பின்வருமாறு கணிப்பீடு செய்யப்படும்.

மறுகட்டளையிடும் மட்டம் + மறுகட்டளையிடும் அளவு — ( இழிவுப் பயன்பாடு × இழிவுக் கட்டளைக் காலம்.)

### 1.11.4. சராசரி இருப்பு மட்டம்

நிறுவனம் சராசரியாக ( சாதாரணமாக ) வைத்திருக்கக் கூடிய சரக்கிருப்பு மட்டம் இதுவாகும். இதனைப் பின்வருமாறு கணிப்பீடு செய்யலாம்.

1. $\dfrac{\text{ஆகக்கூடிய மட்டம் + ஆகக் குறைந்த மட்டம்}}{2}$

2. $\dfrac{\text{ஆகக் குறைந்தமட்டம் + மறு கட்டளையிடும் தொகை}}{2}$

உதாரணம்

RH என்ற மூலப் பொருள் தொடர்பான விபரங்கள் வருமாறு

| | |
|---|---|
| மறு கட்டளையிடும் அளவு | 3600 அலகுகள் |
| மறு கட்டளையிடும் காலம் | 6 — 10 வாரங்கள் |
| ஆகக் கூடிய நுகர்வு | 900 அலகுகள் வாரத்துக்கு |
| சாதாரண நுகர்வு | 600 அலகுகள் வாரத்துக்கு |
| ஆகக் குறைந்த நுகர்வு | 300 அலகுகள் வாரத்துக்கு |

தீர்வு

இருப்பு மட்டங்கள் பின்வருமாறு கணிப்பீடு செய்யப்படும்.

(1) மறுகட்டளையிடும் மட்டம் = ஆகக்கூடிய பாவனை × ஆகக் கூடிய கட்டளைக்காலம்
= 900 × 10 = 9000 அலகுகள்.

(2) ஆகக்குறைந்த இருப்புமட்டம் = மறு கட்டளையிடும் மட்டம் — ( சாதாரண பாவனை × சாதாரண கட்டளைக்காலம் )
= 9000 — ( 600 × 8 )
= 9000 — 4800
= 4200 அலகுகள்

(3) ஆகக் கூடிய இருப்பு மட்டம் =
மறுகட்டளைமட்டம் + மறுகட்டளையிடும் அளவு — ( இழிவுப்பயன்பாடு × இழிவுக் கட்டளைக்காலம் )

= 9000 + 3600 — ( 300 × 6 )
= 9000 + 3600 — 1800
= 10800 அலகுகள்.


(4) சராசரிச் சரக்கிருப்பு மட்டம் $= \dfrac{\text{ஆகக் கூடிய மட்டம் + ஆகக்குறைந்தமட்டம்}}{2}$

$$= \frac{10800 + 4200}{2}$$

$$= \frac{15000}{2}$$

$= 7500$ அலகுகள்

இருப்பு மட்டங்களைப் பின்வரும் வரைபடத்தின் மூலம் விளங்கிக்கொள்ளலாம்.





## 1.12. மறுகட்டளையிடும் தொகை சிக்கனக் கட்டளைத் தொகை

Re — Order Quantity Economic Order Quantity ( ROQ, EOQ )

நிறுவன மொன்று எவ்வளவு தொகையான பொருட்களுக்குக் கட்டளையிடும் போது மொத்தச் செலவானது இழிவுபடுத்தப்படுகின்றதோ அத்தொகையே சிக்கனக் கட்டளைத் தொகை எனப்படும். சுருக்கமாகக் கூறின் எக்கட்டளையில் இருப்புவைப்புச் செலவும் கட்டளைச் செலவும் குறைவடைகின்றதோ அக்கட்டளைத் தொகையே சிக்கனக் கட்டளைத் தொகை எனப்படும்.

இருப்பு வைப்புச் செலவும், கட்டளைச் செலவும் ஒன்றுக்கொன்று எதிர்க்கணியமாக இருப்பதனால் இவ்விரு செலவுகளும் சமனாக இருக்கும் நிலையில் மொத்தச் செலவானது இழிவுபடுத்தப்படும். இதனைப் பின்வரும் வரைபடத்தின் மூலம் காட்டலாம்.




வரைபடத்தின்படி 300 அலகுகளுக்குக் கட்டளையிடும் பொழுது இருப்பு வைப்புச் செலவாக 180 ரூபாவும், கட்டளைச் செலவாக 600 ரூபாவும் ஏற்படுகின்றது. எனவே மொத்தச் செலவு ரூ. 780 ஆகும். மாறாக 900 அலகுகளுக்குக் கட்டளையிடும் பொழுது இருப்பு வைப்புச் செலவாக ரூபா 220–ம் கட்டளைச் செலவாக ரூ. 580–ம் ஏற்படுகின்றது. எனவே மொத்தச் செலவு ரூபா 800 ஆகும். ஆனால் 600 அலகுகளுக்குக் கட்டளையிடும் போது இரண்டு செலவுகளும் ரூபா 350 ஆக அமைவதால் மொத்தச் செலவு ரூபா 700 ஆக அமைகின்றது. எனவே சிக்கனக் கட்டளைத் தொகை 600 அலகுகளாகும்.

சிக்கனக் கட்டளைத் தொகையைப் பின்வரும் சமன்பாட்டின் மூலமும் கணிப்பீடு செய்யலாம்.

$$EOQ = \sqrt{\frac{2DOC}{HC}}$$

D — வருடாந்தம் தேவைப்படும் அளவு

OC — ஒரு கட்டளைக்கான செலவு

HC — ஒரு அலகு பொருளை வைத்திருப்பதால் ஏற்படும் செலவு

உதாரணம் 1

RH என்ற மூலப்பொருளுக்கான வருடாந்த தேவை 12000 அலகுகள். களஞ்சியச் செலவு வருடாந்தம் 24%

கட்டளைச் செலவு ரூ 2–00

அலகு விற்பனை விலை ரூபா 5–00

சிக்கனக் கட்டளைத் தொகை வருமாறு.

$$EOQ = \sqrt{\frac{2DOC}{HC}}$$

$$Q = \sqrt{\frac{2 \times 12000 \times 2}{0 \cdot 24 \times 5}}$$

$$Q = \sqrt{40000}$$

$Q = 200$ அலகுகள்

உதாரணம் 2

RH என்ற மூலப்பொருளின் வருடாந்த வேண்டுதல் 100000

அலகுகள் கட்டளைச் செலவு ரூபா 20-00

இருப்பு வைப்புச் செலவு அலகுக்கு ரூபா 1-00

செய்கை:-

$$EOQ = \sqrt{\frac{2\ DOC}{HC}}$$

$$Q = \sqrt{\frac{2 \times 100000 \times 20}{1}}$$

$$Q = \sqrt{4000000}$$

$Q = 2000$ அலகுகள்

## Reference

(1) Cost Accounting Methods And Problems.
By B. K. BHAR (5th Edition) 1982

(2) Costing
By T. LUCEY (5th Edition)

(3) Wheldons Cost Accounting
By L. W. J. OWLER J. L. BROWN 15th Edition

(4) Sri Lanka Accounting Standards
By Chartered Institute

# அறவிடமுடியாக் கடன், ஐயக்கடன் ஏற்பாடு கடன்பட்டோர் கழிவுவற்பாடு சம்பந்தமான சீராக்கங்கள்

மெஹித்தா புஸ்பராஜா
97 வர்த்தகப் பிரிவு

## அறிமுகம்

அறவிட முடியாக் கடன், ஐயக்கடன் ஏற்பாடு, கடன்பட்டோர் கழிவேற்பாடு சம்பந்தமான சீராக்கங்கள் கடன்பட்டோர் சம்பந்தமான சீராக்கங்கள் ஆகும். எனவே நிறுவனத்தின் வியாபாரக்கடன்பட்டோர் எனப்படுபவர் குறித்த நிறுவனம் இன்னோர் நிறுவனத்துக்கு அல்லது தனிப்பட்ட ஒருவருக்குக் கடனுக்குப் பொருட்களை விற்பனை செய்யும்போது பொருட்களை கொள்வனவு செய்த நிறுவனம் குறித்த நிறுவனத்திற்குக் கடன்பட்டோர் ஆவார். எனவே கடன்பட்டோர் தொடர்பான மேற்கூறிய சீராக்கங்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அறவிடமுடியாக்கடன் சம்பந்தமான சீராக்கங்கள்

கடனுக்கு விற்பனவு செய்யப்பட்ட பொருட்களுக்கான பணமானது கடன் வாடிக்கையாளரிடமிருந்து நிச்சயமாகப் பெறமுடியாது எனத் தீர்மானிக்கப்படும் கடன்களே அறவிடமுடியாக் கடன் ஆகும். இதனை மீளாக் கடன், வராக் கடன் எனவும் அழைப்பர். குறித்த கடன்பட்டோர் நிதியின் அடிப்படையில் முறிந்தவராகக் காணப்படும் போதே அவரிடமிருந்து பெறவேண்டிய பணம் பெறமுடியாது. இதற்கான நாட்குறிப்பு.

அறவிடமுடியாக் கடன் கணக்கு வரவு
கடன்பட்டோர் கணக்கு செலவு

**உதாரணம்:**

1. ஷீலா கம்பனியின் ஏட்டில் 50,000/- கடன்பட்டோர் மீதியாகக்காணப்பட்டது. இத்தொகையில் 4000/- அறவிடமுடியாக் கடனாகப்பதிவழிக்கப்பட வேண்டும்.

அறவிடமுடியாக் கடன் கணக்கு வரவு 4000
கடன்பட்டோர் கணக்கு செலவு 4000

இதன்படி அறவிடமுடியாக் கடன் இலாப நட்டக் கணக்கின் நட்டமாக விற்பனை விநியோகச் செலவில் காட்டுதல் வேண்டும்.

## மீளப் பெற்ற அறவிடமுடியாக் கடன்

ஒரு குறிப்பிட்ட நிதியாண்டிற்கு முற்பட்ட காலத்தில் கெட்ட கடனாகப் பதிவழிக்கப்பட்ட கடன்கள் குறிப்பிடப்பட்ட நிதியாண்டில் திரும்பப் பெறப்பட்டால் அக்கடன்கள் மீளப் பெற்ற அறவிடமுடியாக் கடன் ஆகும். இதற்கான நாட்குறிப்பு.

அ. காசு பெறப்படும்போது,

காசுக் கணக்கு வரவு
கடன்பட்டோர் கணக்கு செலவு

ஆ. இலாபமாகக் காட்டும்போது

கடன்பட்டோர் கணக்கு வரவு

மீளப்பெற்ற அறவிடமுடியாக் கடன் கணக்கு செலவு

இதன்படி மீளப் பெற்ற அறவிடமுடியாக் கடன் இலாப நட்டக் கணக்கில் இயக்கா வருமானமாகக் காட்டப்படும்.

உதாரணம்:

2. 31.03.95ல் உள்ளவாறான பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கடன்பட்டோர் | 42000 | |
| அறவிடமுடியாக் கடன் | 2000 | |

நிறுவனத்தின் அறவிடமுடியாக் கடனில் 1000/- மீளப் பெறப்பட்டுள்ளது.

அ. காசு பெறப்படும் போது

காசுக் கணக்கு வரவு 1000

கடன்பட்டோர் க / கு செலவு. 1000

ஆ. இலாபமாகக் காட்டும்போது

கடன்பட்டோர் கணக்கு 1000

மீளப்பெற்ற அறவிடமுடியாக் கடன் கணக்கு 1000

## ஐயக்கடன் ஏற்பாடு சம்பந்தமான சிராக்கங்கள்

ஐயக்கடன் ஏற்பாடு என்பது கடனுக்கு விற்பனவு செய்யப்பட்ட பொருட்களுக்கான பணமானது வாடிக்கையாளரிடமிருந்து நிச்சயமாகக் கிடைக்கும் என்றோ நிச்சயமாகக் கிடைக்காது என்றோ தீர்மானிக்க முடியாத கடன்களுக்காக (ஐயக்கடன்) குறித்த நிதியாண்டில் ஏற்பாடு செய்கின்ற நடவடிக்கை ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு என அழைக்கப்படும். இதற்கான நாட்குறிப்பு

இலாப நட்டக் கணக்கு வரவு

ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு செலவு

ஐயக்கடன் ஏற்பாட்டினை மேற்கொள்வதற்கு நிறுவனத்திற்கு இரண்டு நோக்கங்களுண்டு.

1. எதிர்காலத்தில் அறவிடமுடியாக் கடன் ஆகிய தொகையை முன்கூட்டியே நட்டமாகக் காட்டுதல். இதனை முன் எச்சரிக்கைக் கருதுகோள் வலியுறுத்துகின்றது.
2. வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து பெறவேண்டிய நிதியைச் சரியாகக்காட்டுதல்.

## ஐயக்கடன் ஏற்பாட்டை அதிகரித்தல் அல்லது உயர்த்துதல்

ஐயக்கடன் ஏற்பாட்டின் ஆரம்ப மீதியிலும் பார்க்க அவ்வருட இறுதியிலுள்ள மீதி அதிகமாயின் அவ்வித்தியாசத்தால் ஐயக்கடன் ஏற்பாடு உயர்த்தப்படல் வேண்டும். இதற்கான நாட்குறிப்பு

இலாப நட்டக் கணக்கு வரவு

ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு செலவு

உதாரணம்:

31.12.94 ல் உள்ளவாறான பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கடன்பட்டோர் | 50000 | |
| ஐயக்கடன் ஏற்பாடு (01.01.94) | | 2000 |

* ஐயக்கடன் ஏற்பாட்டைக் கடன்படுநரில் 5 சதவீதத்திற்குச் சீராக்குக.

இலாப நட்டக் கணக்கு 500

ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு 500

## ஐயக்கடன் ஏற்பாட்டைக் குறைத்தல்

ஐயக்கடன் ஏற்பாட்டின் ஆரம்ப மீதியிலும் பார்க்க அவ்வருட இறுதியிலுள்ள மீதி குறைவாக இருப்பின் அவ்வித்தியாசத்தால் ஐயக்கடன் ஏற்பாட்டைக் குறைக்க வேண்டும். இதற்கான நாட்குறிப்பு.

ஐயக்கடன் ஏற்பாடு கணக்கு வரவு

இலாப நட்டக் கணக்கு செலவு

உதாரணம்:

30-06-95 ல் உள்ளவாறான பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கடன்பட்டோர் | 80000 | |
| ஐயக்கடன் ஏற்பாடு (01.07.94) | | 4500 |

* ஐயக்கடன் ஏற்பாட்டை கடன்பட்டோரில் 5 சதவீதத்திற்குச் சீராக்குக.

ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு 500

இலாப நட்டக் கணக்கு 500

## ஐயக்கடன் ஏற்பாட்டிலிருந்து அறவிடமுடியாக் கடனைப் பதிவழித்தல்.

ஐயக்கடன் ஏற்பாடாகக் கருதப்பட்டு வந்த கடன்பட்டோன் முறிந்தவன் என நிச்சயிக்கப்படுமானால் அத்தொகையே அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கப்படும். இதற்கான நாட்குறிப்பு

ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு வரவு

கடன்பட்டோர் கணக்கு செலவு

உதாரணம்:

31.12.92 ல் உள்ளவாறான பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கடன்பட்டோர் | 50000 | |
| ஐயக்கடன் ஏற்பாடு (01.01.92) | | 3000 |

* ஐயக்கடன் ஏற்பாடாகக் கருதப்பட்டு வந்த ஈதா முறிந்தவனாக நிச்சயிக்கப் பட்டதால் அவனது தொகையான 500/- அறவிடமுடியாக் கடனாகப் பதியப் பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு | 500 | |
| கடன்பட்டோர் கணக்கு | | 500 |

## கடன்பட்டோர் கழிவுக்கான ஏற்பாடு

ஒரு குறிப்பிடப்பட்ட நிதியாண்டுக் காலத்தில் கடனுக்கு விற்பனை செய்யப் பட்ட பொருட்களுக்கான பணமானது கடன் வாடிக்கையாளரிடம் இருந்து அந்நிதி யாண்டைத் தொடர்ந்துவரும் காலத்தில் பெறுவனவு செய்யப்படும் போது அவ் வாடிக்கையாளருக்கு அனுமதிக்கப்பட இருக்கின்ற கழிவுக்காக குறிப்பிட்ட நிதியாண்டு காலத்திலேயே ஏற்பாடு செய்கின்ற தொகையே கடன்பட்டோர் கழிவுக்கான ஏற்பாடு ஆகும்.

கடன்பட்டோர் கழிவு ஏற்பாடு ஐயக்கடன் ஏற்பாட்டை ஒத்ததாகும். கடன் பட்டோர் கழிவு ஏற்பாடு அறவிடமுடியாக் கடனுக்கு வழங்குவதில்லை என்பதைத் தெளிவாக அறிந்து கொள்வதற்காகவே தேறிய கடன்பட்டோரிடமிருந்து ஐயக்கடன் ஏற்பாட்டைக் கழித்து வரும் தொகைக்கே கழிவு ஏற்பாடு மதிப்பிடப்படும். இதற்கான நாட்குறிப்பு.

இலாப நட்டக் கணக்கு வரவு
கடன்பட்டோர் கழிவு ஏற்பாட்டுக் கணக்கு செலவு

உதாரணம்:

31-12-90 ல் உள்ளவாறான பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கடன்பட்டோர் | 48000 | |
| ஐயக்கடன் ஏற்பாடு | | 6000 |

* 2000/- வினை அறவிடமுடியாக் கடனாகப் பதிவழித்து கடன்படுநரில் 2% திற்கு கழிவு ஏற்பாட்டைச் செய்க.

| | | |
|---|---|---|
| இலாப நட்டக் கணக்கு | 800 | |
| கடன்பட்டோர் கழிவு | | 800 |

செய்கை வழி:

| | |
|---|---|
| கடன்பட்டோர் | 48000 |
| (–) அறவிடமுடியாக் கடன் | 2000 |
| தேறிய கடன்பட்டோர் | 46000 |
| (–) ஐயக்கடன் ஏற்பாடு | 6000 |
| | 40000 |

கடன்பட்டோர் கழிவு ஏற்பாடு $\frac{2}{100} \times 40000$

800/-



— 7

நிறுவனங்கள் அறவிடமுடியா ஐயக்கடன்களுக்கு எனத் தனியான கணக்கைப் பேணி வரின் அதற்கான பதிவுகள் பின்வருமாறு அமையும்.

உ+ம்

| | | |
|---|---|---|
| 31.12.96 ல் பரீட்சை மீதி | | |
| அ.முடியா ஐயக்கடன் | 4000 | |
| க/பட்டோர் | 100000 | |
| அ.முடியா ஐயக்கடன் ஏற்பாடு | | 5000 |

சீராக்கம்:

அ.முடியாகடன் 2000/- பதிவழிப்பதுடன் ஐ.க ஏற்பாட்டைக் கடன்பட்டோரில் 10% மாக சீராக்கவேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவு

| | | |
|---|---|---|
| அ.முடியா ஐயக்கடன் க/கு வரவு | 2000 | |
| க/பட்டோர் க/கு | | 2000 |
| அ.முடியா ஐயக்கடன் க/கு | 4800 | |
| அ.முடியா ஐயக்கடன் ஏற்பாட்டு க/கு | | 4800 |

அ.முடியா ஐயக்கடன் க/கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 4000 | இ/ந | 10800 |
| க.படுநர் | 2000 | | |
| அ.மு.ஐ.ஏ | 4800 | | |
| | 10800 | | 10800 |

அ.மு.ஐய.கடன்ஏற்பாட்டுக்க/கு

| | | | |
|---|---|---|---|
| மீ/செ | 9800 | மீதி | 5000 |
| | | அ.மு.ஐ.கட | 4800 |
| | 9800 | | 9800 |
| | | மீ/வ | 9800 |

கடன்படுநர் க/கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 100000 | அ.மு.ஐ.கடன் | 2000 |
| | | மீ/செ | 98000 |
| | 100000 | | 100000 |
| மீ/வ | 98000 | | |

## முடிவுரை:-

ஒரு நிறுவனத்திலே, கடன்பட்டோர் தொடர்பான அறவிடமுடியாக் கடன், ஐயக்கடன் ஏற்பாடு, கடன்பட்டோர் கழிவேற்பாடு என்பன முக்கியமான கணக்கீட்டு நிகழ்வுகளாக இடம்பெறுகின்றன. எனவே அவை தொடர்பான முறையான கணக்குவைப்பு முறைகளையும் வருமானக் கூற்றில் அச்சீராக்கங்கள் எவ்வாறு இடம் பெறுகின்றன என்பதையும் அறிந்து இருக்க வேண்டியது அவசியமாகின்றது.

# இலாப நோக்கமற்ற நிறுவனங்களின் கணக்குகள்
## Accounts Of Non — Trading Institution

றொபினா ஜோர்ஜ் றொபின்சன்
98 வர்த்தகப்பிரிவு

முகவுரை :-

இலாப நோக்கின்றிச் செயற்பட்டு அங்கத்தவர்களினதும் சமூகத்தினதும் பொதுவான தேவைகளை நிறைவு செய்யும் முகமாகச் சேவை ஆற்றும் நோக்குடன் உருவாக்கப்படும் நிறுவனங்களே இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் என அழைக்கப்படும். சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், பொழுதுபோக்குக்களரிகள், கல்விக்கூடங்கள், நூல்நிலையங்கள், சமய நிறுவனங்கள், தருமஸ்தாபனங்கள், சுகாதார நிலையங்கள் போன்ற அமைப்புக்களானவை வியாபார நோக்கின்றிச் செயற்படும் அமைப்புகளுக்கு எடுத்துக் காட்டுகளாகும். இந்நிறுவனங்களானவை கலைகள், சமயம், அறிவியல், பொழுதுபோக்கு, ஆராய்ச்சி போன்ற சமூகத்தின் ( அங்கத்தவர்களின் ) தேவைகளை நிறைவேற்றுவதனை நோக்கமாகக் கொண்டே ஆரம்பிக்கப்படுகின்றன.

எனவே இந்நிறுவனங்களின் கணக்கு வைப்பு முறையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலாப நோக்கமற்ற நிறுவனங்களின் வளங்கள் ( Resources )

இத்தகைய நிறுவனங்களானவை இலாப நோக்கின்றிச் செயற்படுவதனால், அவற்றின் செயற்பாட்டிற்கான நிதியினை, இலாப நோக்குடைய நிறுவனங்கள் நிதியினைப் பெற்றுக்கொள்வது போன்றல்லாது வேறுபட்ட வழிகளில் திரட்டிக் கொள்கின்றன. அவையாவன :

1. அங்கத்தவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் சந்தா ( Subscription )
2. நன்கொடைகள்
3. களியாட்டு விழா நுழைவுக் கட்டணங்கள்
4. அரச, உள்ளூராட்சி நிறுவனங்களின் உதவு தொகைகள்
5. அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்பனை மிகைகள்
6. கச்சேரிகள், கண்காட்சிகள் நடாத்துதல்
7. சிற்றுண்டிச்சாலை, மதுபானச் சாலைகள் நடாத்துதல்.

மேற்கூறிய வழிமுறைகள் மூலம் திரட்டிய நிதியினைக் குறித்த நிறுவனம் எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அந் நோக்கத்தை ஈட்டும் வழிவகைகளில் செலவு செய்கின்றது.

கணக்கு வைப்பு **Accoanting**

இலாப நோக்கற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளில் அங்கத்தவர்கள், பொது மக்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆகியோர் அக்கறை கொள்வதனால் பல்வேறுபட்ட தகவல்களையும் இந்நிறுவனங்களில் இருந்து வேண்டி நிற்கின்றனர். இதனால் தகவல்கள் வேண்டுவோருக்கு வேண்டிய தகவல்களை வழங்குவதற்காகக் கணக்கேடுகளை இந்நிறுவனங்கள் பராமரிக்க வேண்டியது அவசியமாகின்றது. பாரியளவில் செயற்படும் இலாப நோக்குடைய நிறுவனங்கள் நாட் குறிப்புக்கள், காசேடு, பேரேடு போன்ற கணக்குப் புத்தகங்களை முறையாகப் பேணி வருகின்றன. ஆனால் சிறிய அளவில் செயற்படும் வியாபார நோக்கற்ற நிறுவனங்கள் முறையான கணக்கேடுகளைப் பேணிவராத போதும் தமது தேவைக்கு ஏற்ப ஆகக் குறைந்த தகவல்களைப் பெறத்தக்க வகையில் கணக்கு வைப்பு முறையினை மேற் கொண்டு வருகின்றன.

இவ்வாறாக பராமரிக்கப்படும் கணக்குப் பதிவுகளில் இருந்து முடிவுக் கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன. இத்தகைய நிறுவனங்களின் முடிவுக் கணக்குகள் பின் வருவனவற்றை உள்ளடக்கும்.

1. கொள்ளல் கொடுத்தல் கணக்கு
Receipts and Payments Acuntco

2. வருமானச் செலவுக் கணக்கு
Income and Expenditure Account

3. ஐந்தொகை / நிலவரக் கூற்று
Balance Sheet or Statement of affairs

கொள்ளல் கொடுத்தல் கணக்கு
**Receipts And Payments Account**

குறித்தஓர் காலப்பகுதியில் வியாபார நோக்கமற்ற நிறுவனங்களில் இடம் பெற்ற காசுக் கொடுக்கல் வாங்கலின் ( Cash transactions ) சுருக்கத்தினை எடுத்துக் காட்டும் கணக்கு இதுவாகும். இலாப நோக்குடைய நிறுவனங்களின் காசுக்கணக்கினை ஒத்ததாகவே இக்கணக்குத்தயாரிக்கப் படுகின்றது. அனைத்து காசுப் பெறுவனவுகளும் இக்கணக்கில் வரவில் பதியப் படும். அதேபோல் அனைத்துக்காசுக்கொடுப்பனவுகளும் இக்கணக்கில் செலவில் பதியப் படும். இக்கணக்கானது அனேக சந்தர்ப்பங்களில் ஆரம்ப மீதியுடன் ஆரம்பித்து இறுதி மீதியுடன் முடிவடைகின்றது. கொள்ளல் கொடுத்தல் கணக்கொன்று பின்வரும் தகவல்களினை வெளிக்காட்டும்.

1. வருட ஆரம்பத்தில் நிறுவனத்தில் இருந்த காசு இருப்பு.

2. குறித்த காலத்தில் நிறுவனம் பல்வேறு பட்ட வளங்களில் இருந்து திரட்டிய காசு.

3. குறித்த காலத்தில் நிறுவனம் பல்வேறு பட்ட வழிகளிலும் செலவழித்த காசு.

4. வருட இறுதியில் உள்ள காசு இருப்பு.

வருமானச் செலவுக் கணக்கு
**In Come And Expenditure Account**

இலாப நோக்குடைய நிறுவனங்களின் இலாப நட்டக் கணக்கினை ஒத்த கணக்கு இதுவாகும். ஆனால் இலாப நட்டக் கணக்கானது மொத்தலாபத்தில் இருந்து ஆரம்பிக்கின்றது. வருமானச் செலவுக் கணக்கானது வருமானத்தில் இருந்து (Revenue with In Comes) ஆரம்பிக்கின்றது. வருமானச் செலவுக் கணக்கில் குறித்த நிறுவனத்தால் குறித்த காலப் பகுதியில் பெற்றுக்கொண்ட வருமானங்களும் குறித்த காலப்பகுதியில் ஏற்பட்ட செலவினங்களும் (வருமான செலவினங்கள்) இடம்பெறும். செலவுகள் யாவும் வருமானச் செலவுக்கணக்கில் வரவிலும், வருமானங்கள் யாவும் வருமானச் செலவுக் கணக்கில் செலவிலும் இடம்பெறும்.

இக்கணக்குத் தயாரிக்கப்படும் நோக்கம் யாதெனில் குறித்த காலப்பகுதிக்குரிய செலவிலும் கூடிய வருமானத்தினை அல்லது வருமானத்திலும் கூடிய செலவினை அறிந்து கொள்வதாகும்.

## கொள்ளல் கொடுத்தல் கணக்கிற்கும் வருமானச் செலவுக் கணக்கிற்கும் இடையிலான வேறுபாடுகள்

| கொள்ளல் கொடுத்தல் கணக்கு | வருமானச் செலவுக் கணக்கு |
|---|---|
| (1) ஆரம்ப மீதியுடன் தொடங்கும். | (1) ஆரம்ப மீதியுடன் ஆரம்பிக்காது. |
| (2) காசுப் பெறுவனவுகளையும் காசுக் கொள்வனவுகளையும் மாத்திரம் உள்ளடக்கும். | (2) ஒரு வருடத்துக்கான அனைத்து வருமான வருமானங்களையும், வருமானச் செலவுகளையும் உள்ளடக்கும். |
| (3) காசுக் கணக்குப் போன்றது. | (3) இலாப நட்டக் கணக்குப்போன்றது. |
| (4) மூலதனச் செலவுகளை உள்ளடக்கும். | (4) மூலதனச் செலவுகளை உள்ளடக்காது. |
| (5) காசு மீதியினைக் காட்டும். | (5) வருமானத்திலும் கூடிய செலவினை அல்லது செலவிலும் கூடிய வருமானத்தினைக் காட்டும். |

## ஐந்தொகை Balance Sheet

வியாபார நோக்கமற்ற நிறுவனங்களின் ஐந்தொகையானது வியாபார நோக்க முடைய நிறுவனங்களின் ஐந்தொகையினை ஒத்ததாகும். குறிப்பிட்ட திகதியில் உள்ள சொத்துக்களையும், பொறுப்புக்களையும் உள்ளடக்கியதாக இது தயாரிக்கப்படும். பொறுப்புக்களிலும் பார்க்கச் சொத்து அதிக மாக இருந்தால் அவ் அதிகரித்த தொகை திரண்ட நிதி அல்லது பொது நிதி அல்லது மூலதன நிதி (Capital fund or General fund) என அழைக்கப்படும். பொது நிதி யானது செலவிலும் கூடிய வருமானங்கள், ஏனைய வருமானங்களினால் உருவாக்கப் படும்.

### அங்கத்தவர் சந்தா

(அங்கத்துவப் பணம் / Subscriptions)

இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் தமது செயற்பாட்டிற்கான வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் பிரதான மார்க்கமே அங்கத்தவர் சந்தாவாகும். அத்தகைய நிறு வனங்களின் அங்கத்தவர்கள் மாதம் மாத மோ அன்றேல் வருடாந்தமோ ஒரு தொகைப்பணத்தை அங்கத்துவப் பணமாகச் செலுத்தல் வேண்டும். இந்நிதியினை அடிப் படையாகக் கொண்டே இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் அவற்றின் நோக்கத்தினை அடைவதற்கான செலவுகளை மேற்கொள் கின்றன.

அங்கத்தவர்களால் காசாகச் செலுத்தப் படும் சந்தா கொள்ளல் கொடுத்தல் கணக் கில் வரவில் தாக்கல் செய்யப்படும். ஆனால் வருமானச் செலவுக் கணக்கில் ஓராண்டுக் குரிய முழுமையான சந்தா தாக்கல் செய்யப் படும்.

அட்டுறு அடிப்படையிலான சந்தா மதிப் பீடும் காசு அடிப்படையிலான சந்தா மதிப் பீடும்.

வருமதியான சந்தாவினை உள்ளடக்கிய சந்தா மதிப்பீடே அட்டுறு அடிப்படையி லான சந்தா மதிப்பீடாகும். ஆனால் சந்தா வினைத் தரவேண்டி உள்ள அங்கத்தவர்கள் எதிர்காலத்தில் தமது சந்தாவினை நிச்சய மாகத்தருவார்கள் எனக்கூற முடியாது. சில சந்தர்ப்பங்களில் அங்கத்தவர்கள் இறந்து விடலாம், அல்லது உறுப்பினர் உரிமையில் இருந்து விலகிவிடலாம். எனவே வருமதி யான சந்தாவினை சந்தா மதிப்பீட்டில் உள்ளடக்குவது தவறானதாக அமைந்து விடலாம். வருமதிச் சந்தாவை சந்தா மதிப் பீட்டில் உள்ளடக்காது காசாகப் பெற்ற சந்தாவின் அடிப்படையில் சந்தாவினை மதிப்பிடுவது பொருத்தமானதாகக் கொள் ளப்படுகிறது. இதுவே காசு அடிப்படையி லான சந்தா மதிப்பீடு என அழைக்கப் படும்.

## ஆயுள் சந்தா Life Membership fees

வியாபார நோக்கமற்ற நிறுவனங்களில் சில அங்கத்தவர்கள் ஒரே தடவையில் தமது அங்கத்துவப் பணத்தினைச் செலுத்தி விட லாம். இத்தகைய அங்கத்தவர்களே ஆயுட் கால அங்கத்தவர்கள் என அழைக்கப்படு வார்கள். ஆயுட்கால அங்கத்தவர்களால் ஒரே தடவையில் செலுத்தப்படும் அங் கத்துவப் பணம் ஆயுள் சந்தாஎனப்படும்.

ஆயுள் சந்தாவானது ஆயுள் சந்தாக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு வருடா வருடம் குறிப்பிட்ட தொகை இக்கணக்கி லிருந்து சந்தாக் கணக்கிற்கு மாற்றப்படும் (ஆயுள் சந்தாக் கணக்கு ஐந்தொகையில் காட்டப்படும்.)

ஆயுள் சந்தா உறுப்பினர் இறக்க நேரின் அவரது ஆயுள் சந்தா (சந்தா கணக் குக்கு மாற்றியது தவிர எஞ்சியது) திரண்ட நிதிக்கு மாற்றப்படும்.

## நன்கொடைகள் Donations

வியாபார நோக்கமற்ற நிறுவனங்கள் காலத்துக்குக் காலம் நன்கொடைகள் மூலம் நிதியினைப் பெறலாம். நன்கொடையானது

வருமானமாகக் கருதி வருமானச் செலவுக் கணக்கில் காட்டப்படலாம். அல்லது ஐந் தொகையில் காட்டப்படலாம். எவ்வாறெனினும் இக்கணக்கு வைப்பு முறையானது நன்கொடையானது சிறப்பான நோக்கம் ஒன்றுக்காகப் பெறப்பட்டதா? அல்லது பொதுவான நோக்கத்துக்காகப் பெறப்பட்டதா? என்பதைப் பொறுத்தே அமையும்.

குறித்த நோக்கம் ஒன்றுக்காகப் பெறப்பட்ட நன்கொடை **Specific donations**

குறித்த நோக்கம் ஒன்று கருதி நன்கொடை பெறப்படுமாயின் அதனை வருமானமாகக் கருதி வருமானச் செலவுக் கணக்கில் காட்டமுடியாது.

உதாரணம் :

* கட்டடம் கட்டுவதற்காகத் திரட்டிய நன்கொடை
* புலமைப் பரிசில் வழங்குவதற்கான நன்கொடை

இத்தகைய நன்கொடைகள் ஐந் தொகையில் பொறுப்புப் பக்கத்தில் காட்டப் படவேண்டும்.

பொது நோக்கம் ஒன்றுக்காகப் பெறப்பட்ட நன்கொடை **General Donation**

குறித்த நோக்கம் ஒன்றுக்காக அன்றிப் பெறப்படும் நன்கொடை இவ்வாறு அழைக்கப்படும். இத்தகைய நன்கொடையானது பெரிய அளவில் இருப்பின் அது ஐந்தொகையில் காட்டப்படும். சிறிய அளவில் இருந்தால் அது வருமானச் செலவுக் கணக்கில் காட்டப்படும்.

( The size and nature of insitution will to great extent decide about the amount of donation being small or big நிறுவனங்களின் அளவினையும் தன்மையையும் பொறுத்து நன்கொடையின் அளவுசிறியதா, பெரியதா எனத் தீர்மானிக்கப்படும்.

உதாரணம் :

யாழ்ப்பாணம் விளையாட்டுக் கழகத்தின் பொருளாளரால் பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றது.

1. கழகத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும் கீழ்வருமாறு

| | 01-01-95 | 31-12-95 |
|---|---|---|
| கழக மனை | 100000 | 100000 |
| விளையாட்டு உபகரணம் | 62000 | 75000 |
| வருமதிச் சந்தா | 1400 | 2500 |
| முற்பணச் சந்தா | 2100 | 1600 |
| மதுபான சாலை கடன் கொடுநர் | 27000 | 33000 |
| மதுபானச் சாலைக் கையிருப்பு | 16000 | 20000 |

2. இக் சழகத்தில் 3000 அங்கத்தவர்கள் உள்ளனர். சென்ற ஆண்டு வருமதியாகவுள்ள சந்தாப் பணத்தில் 110 அங்கத்தவர்கள் மட்டும் செலுத்தினர். ஒரு அங்கத்தவருக்கு ஆண்டுக் கட்டணம் 10/= ஆகும்.

3. சழகத்தின் பொருளாளரால் கீழ்வரும் கொள்ளல் கொடுத்தல் கணக்குச் சமர்ப்பிக்க படுகிறது.

## கொள்ளல் கொடுத்தல் க/கு.

| கொள்ளல் | தொகை | கொடுத்தல் | தொகை |
|---|---|---|---|
| மீ/கீ/கொ/வ | 25200 | மதுபானச்சாலைக் கொள்வனவு | 53400 |
| மதுபானசாலை விற்பனை | 68900 | மதுபானச்சாலை உதவியாளர்சம்பளம் | 1800 |
| சந்தா | 28100 | மதுபானச்சாலை வாடகை | 600 |
| பிரவேசக் கட்டணம் | 250 | புதினப் பத்திரிகை | 930 |
| பழைய பத்திரிகை விற்பனை | 125 | அச்சிடல் | 650 |
| நன்கொடைகள் | 175 | விளையாட்டுப் போட்டிச் செலவு | 1200 |
| | | விளையாட்டு உபகரணம் | 15000 |
| | | விருந்து உபசரணை | 360 |
| | | மீ/கீ/கொ/செ. | 48810 |
| | 122750 | | 122750 |
| மீ/கீ கொ/வ | 48810 | | |

தயாரிக்குக.

1. 31-12-95 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மதுபானச்சாலை வியாபார இலாப நட்டக் கணக்கு
2. 31-12-95 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானச் செலவுக் கணக்கு
3. அத்திகதியிலுள்ளவாறான ஐந்தொகை

தீர்வு

சந்தாக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ/வ 95ல் | 1400 | மீ/வ 95ல் | 2100 |
| வ/செ மாற்றல் | 30000 | கொள் கொடுத்தல் | 28100 |
| மீ/செ 95ல் | 1600 | மீ/செ | 2800 |
| | 33000 | | 33000 |
| மீ. கீ. கொ. வ | 2800 | மீ. கீ. கொ. வ | 1600 |

மது. சா' கடன் கொடுநர் க/கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 53400 | மீ/வ | 27000 |
| மீ/செ | 33000 | கொ/வு | 59400 |
| | 86400 | | 86400 |

## ஆரம்ப நிலவரக் கூற்று

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| திரண்ட நிதி | 175500 | கழக மனை | 100000 |
| கடன் கொடுநர் | 27000 | விளையாட்டு உபகரணம் | 62000 |
| முற்பணச் சந்தா | 2100 | வருமதிச் சந்தா | 1400 |
| | | மதுபானச்சாலைக் கையிருப்பு | 16000 |
| | | வங்கி | 25200 |
| | 204600 | | 204600 |

யாழ்ப்பாண விளையாட்டுக் கழகத்தின்

31-12-95 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மதுபானச்சாலை

வியாபார இலாப நட்டக் கணக்கு

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 16000 | விற்பனை | 68900 |
| கொள்வனவு | 59400 | | |
| விற்க இருந்த சரக்கு | 75400 | | |
| இறுதியிருப்பு | (20000) | | |
| விற்பனை கிரயம் | 55400 | | |
| மொத்த இலாபம் | 13500 | | |
| | 68900 | | 68900 |
| மது. உதவியாளர் சம்பளம் | 1800 | மொத்த இலாபம் | 13500 |
| மதுபானச்சாலை வாடகை | 600 | | |
| தேறிய இலாபம் | 11100 | | |
| | 13500 | | 13500 |

யாழ்ப்பாண விளையாட்டுக் கழகத்தின்

31-12-95 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானச் செலவுக் கணக்கு

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| விளையாட்டு உபகரணத்தேய்வு | 2000 | சந்தா | 30000 |
| புதினப் பத்திரிகை | 930 | பிரவேசக் கட்டணம் | 250 |
| அச்சிடல் | 650 | பழைய பத்திரிகை விற்பனை | 125 |
| விளையாட்டுப் போட்டிச் செலவு | 1200 | நன்கொடை | 175 |
| விருந்து உபசரணை | 360 | மதுபானசாலை இலாபம் | 11100 |
| செலவிலும் கூடிய வருமானம் | 36510 | | |
| | 41650 | | 41650 |

யாழ்ப்பாண விளையாட்டுக் கழகத்தின்
31-12-95 இல் உள்ளவாறான ஐந்தொகை

| பொறுப்புக்கள் | தொகை | சொத்துக்கள் | தொகை |
|---|---|---|---|
| திரண்ட நிதி | 175500 | கழக மனை | 100000 |
| செலவிலும் கூடிய வருமானம் | 36510 | விளையாட்டு உபகரணம் | 75000 |
| கடன் கொடுநர் | 33000 | இருப்பு | 20000 |
| முற்பணச் சந்தா | 1600 | பெறவேண்டிய சந்தா | 2800 |
| | | வங்கி | 48810 |
| | 246610 | | 246610 |

இலங்கை வங்கி நேபாளத்தின் என். பி. குறூப்பின் ஒத்துழைப்புடன் வரையறுக்கப்பட்ட நேபாள இலங்கை வங்கி என்ற பெயரில் கூட்டுத் தொழில் முயற்சிக் கம்பனியொன்றினை நிறுவியதன் மூலம் அதன் கடல் கடந்த நடவடிக்கைகளை விரிவாக்கி உள்ளது.



— 8

# ஏற்பாடுகளும் ஒதுக்கங்களும்
# (Provision and Reserves)

ஜெனற் சிறாணி ஜெயராஜா
99 வர்த்தகப்பிரிவு

## அறிமுகம் :

கணக்கீட்டில் ஏற்பாடுகளும் ஒதுங்கங்களும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. எந்த ஒரு நிறுவனத்திலும் எதிர்காலத்தில் நிகழக்கூடியதும் அதன் அளவைத் திட்டவட்டமாகக்கூற முடியாததுமான இழப்புக்கள், நட்டங்கள் ஏற்படுவது இயல்பு. இதேபோல் நிறுவனங்கள் பல்வேறு நோக்கங்கள் கருதி ஒதுக்கங்களைப் பேணி வருகின்றன. எனவே நிறுவனங்கள் பொறுப் பொதுக்கங்களாகக் கருதும் ஏற்பாடுகள் பற்றியும் ஒதுக்கங்களில் வருமான ஒதுக்கம் மூலதன ஒதுக்கம் என்பவற்றில் உள்ளடக்கப்படும் பல்வேறு வகையான ஒதுக்கங்கள் பற்றி ஓரளவு விளக்கமளிப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

## ஒதுக்கம் (RESERVES)

எதிர் காலத்தில் முயற்சியை விரிவாக்குவதற்கும் நிதி உறுதிப்பாட்டைப் பேணுவதற்கும் ஒதுக்கங்கள் பேணப்படுகின்றன. நிறுவனம் பல்வேறு வழிகளில் ஈட்டப்படும் இலாபம் உரிமையாளர்களுக்கு உரியதாகும், எனினும் இவ்விலாபம் உரிமையாளர்களுக்கு இலாபமாகப் பகிர்ந்தளிக்காது முயற்சியின் உள்ளேயே தேக்கி வைக்கப்படுகின்றது. அதுவே ஒதுக்கம் என அழைக்கப்படுகின்றது. எவ்வாறெனினும் இப்பொழுது ஒதுக்கத்தைப் பேணுவதற்கான பொதுவான குறிக்கோள் முயற்சிகளில் ஈட்டப்பட்ட இலாபத்தை அதிலிருந்து வேறாக்கி எதிர் காலத்தில் முயற்சியின் முன்னேற்றத்துக்குப் பாதகமாய் அமையக்கூடும் என எதிர்பார்க்கும் தடைகளை அகற்றுவதாகும். ஒதுக்கங்கள் மூலதன, வருமான ஒதுக்கங்கள் என வேறு படுத்தப்படும்.

## ஏற்பாடுகள் (Provision]

நிறுவனமொன்றினால் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் நட்டங்களை ஈடு செய்யும் முகமாக இலாபங்களில் இருந்து ஏற்படுத்தப்படுபவையாக ஏற்பாடுகள் காணப்படும். அதாவது பதிவழிக்கப்பட்ட தொகைகள், தேய்மானமாக ஏற்படுத்தப்படும் தொகைகள், சொத்துக்களின் பெறுமதியிலான குறைவு, புதுப்பித்தல்களும் அல்லது உறுதியான முறையில் சரியாகப் பெறுமதியைத் தீர்மானிக்க முடியாத ஏதாவது அறிவிக்கப்பட்ட பொறுப்புக்கள் மீது ஏற்படுத்திவைக்கப்படுவது போன்றவை ஏற்பாடுகள் (Provision) எனப்படும் உதாரணமாக தேய்மான ஏற்பாடு, ஐயக்கடன் ஏற்பாடு.

## ஏற்பாடுகள் – பொறுப்புக்கள்

## (Provisions and Liabilities)

ஏற்பாடுகளும் பொறுப்புகளும் வேறு பட்டவைகளாகும். உறுதியான முறையில் சரியாகப் பெறுமதியைத் தீர்மானிக்க முடியாதவற்றுக்காக ஏற்பாடுகள் ஏற்படுத்தப்படும். ஆனால் பொறுப்புக்கள் உறுதியான முறையில் சரியாகப் பெறுமதியைக் கணிப்பிடக்கூடியதான தொகைகளைக் குறிப்பதாக இருக்கும்.

உதாரணமாக ; நீதிமன்ற வழக்குகள் தொடர்பான சட்டச் செலவுகளாற் (Legal Charges) கிட்டையை முற்கூட்டியே

வழக்கறிஞர் வழங்குவதில்லை என்பதனால் அச்சட்டச் செலவுகள், ஏற்பாடுகள் ஆகும். ஆனால் ஓர் நிதியாண்டு முடிவில் சாதாரணமாகக் கணிப்பிடக்கூடிய அட்டுறு வாடகையானது ஒரு பொறுப்பாகும்.

### வருமான ஒதுக்கங்கள் (Revenue Reserves)

காசுப்பங்குலாப நோக்கங்களிற்குப் பயன்படுத்தத்தக்க வகையில் இலாப நட்டப் பகிர்வுக் கணக்கில் வரவு வைக்கப்படுவதன் மூலம் இலாபத்தில் இருந்து குறைக்கப்பட்டு ஒதுக்கக்கணக்கில் (Reserve Account) செலவிடப்படுகின்ற தொகைகள் வருமான ஒதுக்கங்களாகும். இவ் ஒதுக்கமானது குறித்த வேறு சில நோக்கங்களுக்காகவும் பயன்படுத்த முடியும். குறிப்பாக அந்நிய செலவாணியில் பெறுமதிக் குறைவுகள் (Devaluation) ஏற்படுவதால் நட்டங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் அந்நிய நாணய மாற்று ஒதுக்குக் கணக்குகளையும் (Foreign Exchange Reserve Account) அல்லது பொது ஒதுக்கக் கணக்கையும் (General Reserve Account) ஏற்படுத்துவதற்காகவும் பயன்படலாம்.

மேற்குறிப்பிட்ட விடயங்களைப் பங்குதாரரும் அறிந்திருப்பார்கள் என்பதனால் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கிடைக்கக்கூடிய இலாபங்கள் முழுவதையும் பங்கிலாபமாக பங்குதாரர்களுக்குப் பகிர்ந்தளிப்பது சாதுரியமான செயல் அல்ல. குறித்த சில காலப் பிரிவுகளுக்காவது இவை இலாபம் தரக்கூடிய முறையில் புத்தி சாதுரியமாக முதலிடப்படும் வளங்களாகப் பிரதிபலிக்கப்பட வேண்டும். இது எதிர்காலத்தில் இலாப நட்டப் பகிர் கணக்கில் இலாபங்களை அதிகரித்துக் காட்ட உதவுவதுடன் காசுப் பங்குலாபங்களுக்குப் பயன் படுத்தக்கூடியது எனவும் காட்டப்படும். இது சாதாரணமாக குறித்த ஒதுக்கக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, இலாப நட்டப் பகிர்வுக் கணக்கில் செலவு வைக்கப்படுவதன் மூலம் செய்யப்படும்.

### பொது ஒதுக்கம் (General Reserves)

பணவீக்க விளைவுகளின் காரணமாகவே (Effect of Inflation) பொது ஒதுக்கம் முக்கியமாகத் தேவைப்படுகின்றது. உதாரணமாக 1990இல் நிறுவன மொன்றினது தொழிற்படு முதலாக 40000/- காணப்படுகின்றது. இத்தொகை அடுத்து வரும் மூன்று வருடங்களிற்கும் பேணப்படும். 1991இல் விலைமட்டம் (Price Level) 25% ஆல் அதிகரிக்கின்றது எனக் கொண்டால் 1991இல் தொழிற்படு முதல் 50,000/ தேவைப்படுகின்றது. இந்நிலையில் பொது ஒதுக்கம் இருந்திருப்பின் 10,000/- மேலதிக தொகையை ஈடு செய்திருக்க முடியும். ஆனால் இலாபம் முழுநும் பங்கீடு செய்யப்பட்டிருப்பின் 40,000/- தொழிற்படு முதலைக் கொண்டே நிறுவனம் தொழிற்பட வேண்டியிருக்கும். எனவேதான் வருத்தப்படுவதை விட முன்னரே பாதுகாத்துக் கொள்வது மேலானது என்ற தத்துவப்படி (Philosophy of it's better to be safe than sorry) நிறுவனங்கள் முன் கூட்டியே இலாபங்களில் இருந்து பொது ஒதுக்கத்தை உருவாக்குவதன் மூலம் பணவீக்கம் போன்றவை காரணமாக ஏற்படும் நெருக்கடிகளை எளிதாகச் சமாளித்துக்கொள்ள முடிகின்றது. ஆனால் நிறுவனங்கள் தேவைக்கதிகமாகப் பொது ஒதுக்கீட்டை உருவாக்குவது விரும்பத்தக்கதன்று.

ஏனெனில் அதனால் மிகையான திரவ நிதி ஏற்பட்டு அது தவறாகப் பயன்படுத்தப்படக்கூடும். அதனை விட அவற்றை பங்குதாரருக்கு வழங்கீடு செய்திருப்பின் அவர்கள் அதனைப் பயன்தரு விதமாகப் பயன்படுத்திக்கொள்ள முடிந்திருக்கும்.

### பங்குலாபம் சமப்படுத்தும் நிதியம் (Dividend Equalisation Reserves)

கம்பனிகளால் வருடாந்தம் வழங்கப்படும் பங்குலாபங்களில் தளம்பல் நிலை

காணப்படுதல் விரும்பத்தக்கதல்ல. ஏனெனில் அந்நிலை பங்குதாரர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துவடன் கம்பனிகளின் உறுதியற்ற நிலையையும் வெளிப்படுத்தும் என்பதால் அந்நிலைமைகள் கம்பனிகளின் நன்மதிப்பைப் பாதிப்பதாக அமையும். எனவே, கம்பனிகள் பங்கிலாபத் தளம்பல்களைக் கட்டுப்படுத்தப் பெருந்தொகையான இலாபம் உழைக்கப்படும் காலங்களில் இலாபங்களில் இருந்து ஒரு ஒதுக்கினை உருவாக்கி இலாபம் குறைவடையும் காலங்களில் பங்குலாபக் குறைவுகள் அவ் ஒதுக்கிலிருந்து ஈடு செய்யப்படும். அவ்வாறான ஒதுக்கமே பங்குலாபம் சமப்படுத்தும் நிதியமாகும்.

## மூலதன ஒதுக்கங்கள் (Capital Reserves)

இலாப நட்டப் பகிர் கணக்கிற்கு மாற்றி காசுப் பங்குலாப நோக்கங்களுக்காக, மாற்றீடு செய்யப்பட முடியாத ஒதுக்கங்களே மூலதன ஒதுக்கங்களாகும். இங்கு காசுப் பங்கிலாபங்கள் எனக் குறிப்பிடப்படுவதன் நோக்கம் யாதெனில் மூலதன ஒதுக்கங்கள் பின்னர் காசு அல்லாப் பங்குலாபங்களுக்காக (Non Cash dividend) உபகாரப் பங்குகளாக வழங்கப்படக் கூடியதாக இருப்பதே ஆகும்.

மூலதன ஒதுக்கங்களிற்கான உதாரணம்

- மூலதன மீட்பு ஒதுக்கு நிதி.
- பங்கு வட்டக் கணக்கு.
- மீள் மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கு.
- உருவாக்கலுக்கு முன்பான இலாபங்கள்.
- நிலையான சொத்து விற்பனை இலாபம்.

## மூலதன மீட்பு ஒதுக்கு நிதி (Capital Redemption Reserve fund)

கம்பனிகள் மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளின் மீட்பு நிதிக்காக அதனது இலாபங்களைப் பயன்படுத்துகின்ற போது மீட்கப்படும் பங்குகளின் பெயரளவுப் பெறுமதிக்குச் சமனாக ''மூலதன மீட்பு ஒதுக்கு நிதியம்'' ஒன்றை உருவாக்கப்பட வேண்டும் எனவும் இதுவோர் இறுத்த பங்கு முதலிற்கு ஒப்பானதென்றும் 1982ஆம் ஆண்டு கம்பனிகள் சட்டம் குறிப்பிடுகின்றது. அதனால் இதுவோர் சட்டத்தின் படைப்பாகக் கருதப்படுகின்றது. இவ்வாறு உருவாக்கப்படும் மூலதன ஒதுக்க நிதி பின்னர் உபகாரப் பங்கு வழங்கலுக்கும் மூலதனக் குறைப்புக்கும் பயன்படுத்தப்படக் கூடியதாக இருக்கும். இவ்வொதுக்கம் 1981க்குப் பின் இங்கிலாந்தில் மூலதன மீட்பு ஒதுக்கு (C. R. R.) என்றே அழைக்கப்படுகின்றது.

## பங்கு வட்டக் கணக்கு (Share Premium Account)

கம்பனிகள் பங்குகளை முகவிலையை விடக் கூடுதலான விலைக்கு விற்பனை செய்யும்போது மேலதிகமாகப் பெறப்படும் விலை, பங்குவட்டமாகும். இது ஓர் மூலதன ஒதுக்கமாகும். உதாரணம் 10/– முகவிலை உடைய பங்கொன்று 13/– விற்கு விற்கப்படின் 3/– பங்கு வட்டமாகும்.

கம்பனிகள் சட்டத்தின்படி பங்கு வட்டக் கணக்கு மீதியானது பின்வரும் தேவைகளிற்குப் பயன்படுத்தப்பட முடியும்.

அ) தொடக்கச் செலவுகள் போன்ற கற்பனைச் சொத்துக்களின் பதிவழிப்புக்கும் பயன்படுத்தப்படும்.

ஆ) உபகாரப் பங்கு வழங்கலிற்குப் பயன்படுத்தப்படும்.

இ) மூலதனக் குறைப்புக்குப் பயன் படுத்தப்படும்.

ஈ) மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளின் போது ஏற்படும் மிகை விலையினைப் பதிவழிப்பதற்குப் பயன்படுத்தப்படும்.

பங்குவட்டமானது பிரதானமாகப் பின்வரும் தேவைகளுக்குப் பயன்படுத்தப் படக்கூடாது.

* நன் மதிப்பை பதிவழிப்பதற்குப் பயன்படுத்தக் கூடாது.
* பங்கிலாபமாகப் பகிர்வதற்குப் பயன்படுத்தக்கூடாது.

உருவாக்கலுக்கு முன்னான இலாபங்கள்,

(Profits Prior to Incorporation)

கம்பனி ஒன்று சட்டரீதியாகக் கூட்டிணைக்கப்படுவதற்கு முன் ஏற்படும் செயற்பாடுகளினால் எழும் இலாபங்களே உருவாக்கலுக்கு முன்னான இலாபங்களாகும். இதுவும் ஒரு மூலதன ஒதுக்கம் என்பதனால் இவை உபகாரப் பங்கு வழங்கலிற்கும் நன்மதிப்பைப் பதிவழிப்பதற்கும் பகுதியாக இறுக்கப்பட்ட பங்குகளை முற்றும் இறுத்தவையாக மாற்றுவதற்கும் பயன்படுத்தப்படலாம்.

இரகசிய ஒதுக்கம் அல்லது மறைவொதுக்கம்

(Secret Reserve)

ஒரு ஐந்தொகையின் மூலம் வெளிப்படுத்தப்படாத மீதிகள், தொகைகள், ஏற்பாடுகள் என்பனவெல்லாம் மறைவொதுக்கங்கள் எனப்படும். மறைவொதுக்குகள் பின்வரும் வழிகளிலே உருவாகின்றன.

அ) இருப்புகள், நன்மதிப்புகள் போன்றவற்றில் பெறுமானங்களை உண்மைப் பெறுமானத்திலும் பார்க்கக் குறைத்து மதிப்பிடல்.

ஆ) மூலதனச் செலவுகளை வருமானச் செலவுகளாகக் காட்டல்.

இ) நிலையான சொத்துக்களிற்கு தேவையானதை விட மிகையாகத் தேய்மானம் செய்தல்.

ஈ) கடன் பட்டோரிற்கான ஐயக் கடன் ஏற்பாடுகள் கழிவீட்டுக்கான ஏற்பாடுகள் என்பவற்றை மிகையாகக் காட்டுதல்.

❊ பின்வரும் காரணங்களின் பொருட்டு மறைவொதுக்கத்திற்கு எதிர்ப்புகள் தெரிவிக்கப்படுகின்றன.

அ) ஐந்தொகை உண்மையான நிதி நிலைவரத்தினைப் புலப்படுத்த மாட்டாது.

ஆ) சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்படுவதால் அவற்றிற்கு இழப்புக்கள் ஏற்படின் பெறக்கூடிய இழப்பீட்டுத் தொகை குறைவாகவே இருக்கும்.

இ) சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்படுவதால் கம்பனியின் பங்குகளின் பெறுமானம் வீழ்ச்சியடையும்.

ஈ) சில நிதி நிறுவனங்கள் தவிர ஏனைய கம்பனிகள் மறைவொதுக்கங்களைப் பயன்படுத்தக்கூடாது எனக் கம்பனிச் சட்டம் கட்டுப்படுத்துகின்றமை.

முடிவுரை:

தொகுத்துக் கூறுமிடத்து ஏற்பாடுகள் எந் நோக்கங்களுக்காகச் செய்யப்படுகின்றன என்பது பற்றியும் ஒதுக்கங்களின் பல்வேறு வகைகள் பற்றியும், அவை ஒவ்வொன்றும் எந் நோக்கங்களுக்குப் பயன் படுத்தப்பட வேண்டும், எந் நோக்கங்களுக்குப் பயன் படுத்தல் தவிர்க்கப்பட்டுள்ளது என்பது பற்றிய விடயங்களையும் இக்கட்டுரை உள்ளடக்கியுள்ளது. நிறுவனங்கள் குறித்த இலக்கைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவதற்கு இவ்வேற்பாடுகளும் ஒதுக்கங்களும் அவசியமானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமாகக் காணப்படுகின்றன.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் எண்ணிக்கை 1996ல் 17 ஆகும். 96ல் கண்டி. கம்பகா, மாத்தறை, களுத்துறை ஆகிய இடங்களில் 4 கிளைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1996ல் கிளைகளின் மொத்த எண்ணிக்கை — 175 ஆகும்.

# நிதி அறிக்கை இடலில் நியமம் — I
# Financial Reporting Standard No — 1 (FRS — I)

சாந்தி மகாலிங்கம்
99 வர்த்தகப்பிரிவு

இலங்கைக் கணக்கீட்டு நியமம் — 9
( SLAS — 9 )

இந்நியமத்தில் நிதி நிலைமாற்றங்களின் கூற்று எவ்வாறு தயாரிக்கப்பட வேண்டுமென்றும், சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும், நிதி பிரயோகிக்கப்படும் வழிவகைகள் எவை என்றும், நிதி பெறப்படும் வழிவகைகள் எவை என்றும், விபரிக்கப் பட்டுள்ளது. சமர்ப்பித்தல் என்ற வகையில் நோக்கும் போது பல்வேறு வடிவங்களில் அமையலாம். வருமானக் கூற்றுக்கள் எவ்வெவ் காலப் பகுதிக்கெனத் தயாரிக்கப்படுகின்றதோ அவ்வொவ்வொரு காலப்பகுதிக்கான நிதி நிலமை மாற்றங்களின் கூற்றும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு நிறுவனமும் நிதி மாற்றங்களின் கூற்றினைத் தயாரிக்கும்போது குறித்த சந்தர்ப்பத்தில் அதிக தகவல்களை அளிக்கத்தக்கதாகப் பொருத்தமான சமர்ப்பித்தல் வடிவத்தினைத் தெரிவு செய்தல் வேண்டும்.

இக்கட்டுரையில் இந்நியமத்தின அம்சங்களைக் கருத்தில் கொண்டு காசுப் பாய்ச்சல் கூற்றுப்பற்றி விளக்கப்பட்டுள்ளது.

காசுப் பாய்ச்சல் கூற்று
( Cashflow Statement )

ஒரு நிறுவனத்தின் நிதிவருடத்திற்குரிய காசு உட்பாய்ச்சல்கள், காசு வெளிப்பாய்ச்சல்கள் என்பவற்றைக் காட்டுகின்ற கூற்றே காசுப்பாய்ச்சல் கூற்றாகும்.

காசு உட்பாய்ச்சல்கள்
( Cash Inflow )

(1) இலாபம்.
(2) நிலையான சொத்து விற்பனை.
(3) இருப்பு, கடன்பட்டோர்கு றைதல்.
(4) நீண்டகாலக் கடன் பெறல்.
(5) கடன்கொடுத்தோர் அதிகரித்தல்
(6) பங்கு வழங்கல்.
(7) மேலதிக மூலதனம் இடல்.

காசு வெளிப்பாய்ச்சல்கள்
( Cash Out Flow )

(1) நட்டம்.
(2) நிலையான சொத்துக் கொள்வனவு.
(3) இருப்பு, கடன்பட்டோர் அதிகரிப்பு.
(4) நீண்டகாலக் கடன் தீர்த்தல்.
(5) கடன்கொடுத்தோர் குறைதல்.
(6) பங்குமீட்பு
(7) பற்று

காசுப்பாய்ச்சல் கூற்றின் பயன்பாடு
( Uses Of Cash Flow Statement )

(1) சிறிய வியாபாரிகள் தனது வங்கிக் கணக்கில் மேலதிகப் பற்று ( O / D ) ஏற்பட்டால் அதற்குரிய காரணத்தை அறிந்து அதைத் தீர்ப்பதற்கான வழிகளைக் காண உதவுதல்.

(2) வேறு நிறுவனங்களின் வங்கி மீதி உயர்ந்து காணப்பட்டபோதும் நிறுவனம் தொடர்ந்தும் நட்டத்தில் இயங்கினால் நட்டம் ஏற்படுவதற்கான காரணத்தை அறிய உதவும்.

(3) பங்காளர்கள் மேலதிக நிதியினை இட்டபோதும் வங்கி மீதி திடீர் எனக் குறைந்து காணப்படின் அதற்கான காரணத்தை விளங்கிக் கொள்ள உதவும்.

குறிப்பு ( **Note** )

(1) காசுப்பாய்ச்சல் கூற்றானது இலாப நட்டக்கணக்கில் இருந்து வேறுபட்டது.

(2) சட்டத்தின்படி பெரிய கம்பனிகள் நிதி அறிக்கைகளுடன் காசுப்பாய்ச்சல் கூற்றையும் வெளியிட வேண்டும்.

காசு மீதி அடிப்படையிலான பாய்ச்சல் கூற்றுத் தயாரிக்கும் போது வருட ஆரம்ப காசு மீதியில் இருந்து வருட இறுதிக் காசு மீதியை மூலகங்கள் பிரயோகங்கள் என்பவற்றுக் கூடாக வந்தடைந்ததை விளக்குவதாகும். நடைமுறைச் சொத்துக்களின் அதிகரிப்பு நடைமுறைப் பொறுப்புக்களின் குறைவு பிரயோகமாகவும் நடைமுறைச் சொத்துக் குறைவு நடைமுறைப் பொறுப்பு அதிகரிப்பு மூலமாகவும் கருதப்படவேண்டும். காசு மீதியினை அடிப்படையாகக் கொண்ட நிதிப்பாய்ச்சல் கூற்று பல்வேறு வடிவங்களில் தயாரிக்கப்படுகின்றன. இங்கு இலகுவான முறையிலே இக் கூற்றுத் தயாரிக்கப்படும் முறை விளங்கப்படுகின்றது.

### காசுப் பாய்ச்சல் கூற்றின் மாதிரி

| | | |
|---|---|---|
| ஆரம்ப காசு வங்கி மீதி | | XXX |
| கூட்டுக :- மூலகங்கள் | | |
| உள்வாரி மூலங்கள். | | |
| செயற்பாட்டு ரீதியான இலாபம் ( பெறுமானத் தேய்வு உட்பட ) | XXX | |
| அதிகரித்த நடைமுறைப் பொறுப்பு | XX | |
| குறைவடைந்த நடைமுறைச் சொத்து | XX | XXX |
| வெளிவாரி மூலகங்கள் | | |
| பங்கு விற்பனை | XX | |
| நீண்டகாலப் பொறுப்பு அதிகரிப்பு | XX | |
| நிலையான சொத்து விற்பனை | XX | |
| முதலீட்டு விற்பனை | XX | XXX |
| | | XXXX |
| கழிக்குக:- பிரயோகங்கள் | | |
| செயற்பாட்டு ரீதியான நட்டம் | XX | |
| பங்கு மீட்பு | XX | |
| தொகுதிக் கடன் மீட்பு | XX | |
| நிலையான சொத்துக் கொள்வனவு | XX | |
| நீண்டகாலப் பொறுப்புக் குறைவு | XX | |
| அதிகரித்த நடைமுறைச் சொத்து | XX | |
| குறைந்த நடைமுறைப் பொறுப்பு | XX | ( XX ) |
| இறுதிக் காசு மீதி | | XXX |

உதாரணம் :- 1

சிவா Ltd. இன் 31–3–96, 31–3–97 இல் ஐந்தொகை வருமாறு

| | 31-3-96 | 31-3-97 |
|---|---|---|
| பங்கு மூலதனம் | 200000 | 250000 |
| பங்குவட்டம் | — | 10000 |
| பகிரப்படாத இலாபம் | 149000 | 161000 |
| தொகுதிக் கடன் | 50000 | — |
| கடன் கொடுநர் | 89000 | 104000 |
| வங்கி மேலதிகப்பற்று | — | 92000 |
| வரி 1994 / 1995 | 18000 | — |
| 1995 / 1996 | 28000 | 27000 |
| 1996 / 1997 | — | 21000 |
| பெறுமானத் தேய்வு ஒதுக்கம் : கட்டிடம் | 30000 | 36000 |
| பொறி | 62000 | 57000 |
| பிரேரித்த பங்கிலாபம் | 20000 | 25000 |
| | 646000 | 783000 |
| இறையிலாதனம் கொள்விலையில் | 180000 | 230000 |
| பொறி | 144000 | 172000 |
| கையிருப்பு | 158000 | 189000 |
| கடன்படுநர் | 145000 | 190000 |
| வங்கி | 19000 | — |
| தொகுதிக் கடன்மீட்பு வட்டம் | — | 2000 |
| | 646000 | 783000 |

மேலதிகமானவை

(1) இறையிலாதனம் எதுவும் விற்கப்படவில்லை.

(2) 27000 ரூபா கொள்விலையான பொறி 24000/ரூபா வாகத் தேய்விடப்பட்டு 70000 ரூபாவுக்கு விற்கப்பட்டது.

காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்குக

செய்கை

இலாப நட்ட க/கு

| | | | |
|---|---|---|---|
| பங். லாபம் | 25000 | மீ / வ | 149000 |
| வரி | 21000 | பொ. வி. இ. | 4000 |
| மீ / செ | 161000 | மிகைவரி | 1000 |
| | | வ முன் இ. | 53000 |
| | 207000 | | 207000 |

பொறிவிற்பனைக் க/கு

| | | | |
|---|---|---|---|
| பொ.க/கு | 27000 | காசு | 7000 |
| இலாபம் | 4005 | பெ. தே. ஒ. | 24000 |
| | 31000 | | 31000 |

| பொறி க/கு | | | |
|---|---|---|---|
| மீ/வ | 144000 | பொ. வி. க/கு | 27000 |
| காசு | 55000 | மீ / செ | 172000 |
| | 199000 | | 199000 |

| பொறித்தேய்வு ஒதுக்கற் க/கு | | | |
|---|---|---|---|
| பொ. வி. க/கு | 24000 | மீ / வ | 62000 |
| மீ / செ | 57000 | தேய்வு | 19000 |
| | 81000 | | 81000 |

**வரையறுத்த சிவா கம்பனியின் 31-3-97 இல் காசுப்பாய்ச்சல் கூற்று**

| | | |
|---|---|---|
| ஆரம்ப வங்கி மீதி | | 19000 |
| ± மூலங்கள் | | |
| உள்வாரி | | |
| செயற்பாட்டு ரீதியான வருமானம் (பெ. தே.உ ட்.) | 78000 | |
| கடன்கொடுநர் அதிகரிப்பு | 15000 | 93000 |
| | | 112000 |
| வெளிவாரி | | |
| வட்டத்துடன் பங்கு வழங்கல் | 60000 | |
| பொறி விற்பனை | 7000 | 67000 |
| | | 179000 |
| (—) பிரயோகம் | | |
| இறையிலாதனம் கொள்வனவு | 50000 | |
| பொறிக்கொள்வனவு | 55000 | |
| தொகுதிக்கடன் மீட்டல் ( வட்டம் உட்பட ) | 52000 | |
| பங்கிலாபம் செலுத்தியது | 20000 | |
| 94 / 95 வரி செலுத்தியது | 18000 | |
| கையிருப்பு அதிகரிப்பு | 31000 | |
| கடன்படுநர் அதிகரிப்பு | 45000 | ( 271000 ) |
| வருட இறுதி வங்கிமீதி | | ( 92000 ) |

**உதாரணம் 2**

சிவா Ltdன் முடிவடைந்த ஆண்டிக்குரிய ஐந்தொகைகள் வருமாறு.

| | 31-12-1995 | | 31-12-1996 | |
|---|---|---|---|---|
| நிலையான சொத்துக் கொள்விலை | 6400 | | 8000 | |
| தேய்மானம் | (2400) | 4000 | (3200) | 4800 |
| நடப்புச் சொத்து | | | | |
| இருப்பு | 8436 | | 11308 | |
| கடன்பட்டோர் | 3120 | | 3684 | |
| வங்கி | 1680 | | 1390 | |
| | 13236 | | 16382 | |

| | | | | |
|---|---|---|---|---|
| நடப்புப் பரிப்பு | | | | |
| கடன் கொடுத்தோர் | 1844 | | 1976 | |
| வரி | 612 | | 820 | |
| பிரேரித்த பங்கிலாபம் | 1000 | | 1500 | |
| | (3456) | 9780 | (4296) | 12086 |
| | | 13780 | | 16886 |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்ட பங்குமுதல் | 10000 | 12000 |
| இலாப நட்டக்கணக்கு மீதி | 3780 | 4886 |
| | 13780 | 16886 |

சிவா லிமிட்டட்டின் 31–12–96 இல் முடிந்த வருட இலாப நட்ட கணக்குகள்

| | |
|---|---|
| வரிக்கு முன் இலாபம் (தேய்மானம் 800 உட்பட) | 3426 |
| செயற்பாடு மீதான வரி | (820) |
| | 2606 |
| கடந்த வருட இலாப நட்டக்கணக்கு மீதி | 3780 |
| | 6386 |
| பிரேரித்த பங்கி லாபம் | (1500) |
| | 4886 |

தயாரிக்குக

31–12–96ல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

31–12–96 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| | | |
|---|---|---|
| ஆரம்ப காசு மீதி | | 1680 |
| நிதி வளம் | | |
| செயற்பாட்டு ரீதியான வருமானம் | 4236 | |
| பங்கு வழங்கல் | 2000 | |
| கடன்கொடுநர் அதிகரிப்பு | 132 | 6358 |
| | | 8038 |
| நிதிப் பிரயோகம் | | |
| இருப்பு அதிகரிப்பு | 2872 | |
| கடன்பட்டோர் அதிகரிப்பு | 564 | |
| பிரேரித்த பங்கு இலாபம் | 1000 | |
| வரிகொடுத்தது | 612 | |
| நிலையான சொத்துக் கொள்வனவு | 1600 | (6648) |
| இறுதிக்காசு மீதி | | 1390 |

# இலங்கையில் நாணயமுகாமைத்துவத்தில் திறைசேரி உண்டியலின் பங்கு

**இ. இரட்ணம்**
*விரிவுரையாளர்,*
*வணிகத்துறை,*
*யாழ்-பல்கலைக்கழகம்.*

## முன்னுரை

நிதிச்சந்தை என்னும் போது நீண்ட காலக் குறுங்காலக் கடன் வழங்கும் நிதி நிறுவனங்கள் பெரிதும் முக்கியத்துவம் வகிக்கின்ற அமைப்பாக நிதிச் சந்தை காணப்படுகின்றது. நீண்ட காலக் கடன் வழங்கும் நிதி நிறுவனங்களும் பங்குத் தரகு நிறுவனங்களும் அங்கம் வகிக்கின்ற அமைப்பினையே மூலதனச் சந்தைஎன்பர். இதில் ஒருவருடத்திற்குக் கூடிய காலத்திற்கான கருவிகள் சம்பந்தப்பட்டுள்ளன. நிதிகளுக்கான நீண்டகால தேவையினை நிறைவு செய்து கொடுப்பதற்காக மூலதனச்சந்தை இயங்குகின்றது.

## 1. பணச்சந்தை

குறுங்கால கடன் கொடுப்போரும் குறுங்கால கடன் பெறுநரும் பணச்சந்தையுடன் தொடர்புடையவர்களாகக் காணப்படுகின்றனர். குறுங்கால கடன் வழங்குகின்ற அமைப்புக்களாக கழிவீட்டு இல்லங்கள், உண்டியல் தரகர், ஏற்கும் இல்லங்கள், வணிக வங்கிகள், பணத்தரகர்கள் மத்திய வங்கி போன்றன காணப்படுகின்றன. பணச்சந்தையுடன் தொடர்புடைய ஆவணங்களாக வியாபார உண்டியல்கள், திறைசேரி உண்டியல்கள், வைப்புச் சான்றிதழ்கள் வரிஒறுக்க சான்றிதழ்கள், சேமிப்பு சான்றிதழ்கள் போன்றன காணப்படுகின்றன.

## 2. திறைசேரி உண்டியல்கள்

அரசாங்கத்தின் பெயரில் மத்திய வங்கியால் வழங்கப்படும் கடன் பத்திரமே திறைசேரி உண்டியல்கள் ஆகும். அரசு குறுங்கால நிதித்தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக நிதி பெறும் போது சான்றாக வழங்கப்படுகின்ற ஆவணமாக இது காணப்படுகின்றது. பணச்சந்தையில் மிக முக்கியமான கருவியாக திறைசேரி உண்டியல்கள் காணப்படுகின்றது. இது அரசாங்கம், மத்திய வங்கி, முதலீட்டாளர்கள் ஆகியோரால் விரும்பப்படுகின்றது. இவ்வுண்டியல்கள் கூடிய திரவத்தன்மையையும் குறைந்த ஆபத்தும், உயர் வட்டி வீதமும் கொண்டதாக இருப்பதே இதற்குக் காரணம் ஆகும். அரசாங்கமும் தமக்குத்தேவையான நிதியினை விரைவாக திரட்டுவதற்கும் கடனாக்கத்தின் மூலமான பணவாக்கத்தினைக் கட்டுப்படுத்தி நாணய முகாமைத்துவத்தினைத் திறனாக நடைமுறைப் படுத்துவதற்கும் திறைசேரி உண்டியல்கள் உதவுகின்றது. இதனையே "சந்தையை நோக்கிய நாணயக் கட்டுப்பாட்டு முறை" (Market Based System Of Monetry Control) என அழைக்கப்படுகின்றது.

இங்கிலாந்தில் 1871 ஆம் ஆண்டு பாராளுமன்றச் சட்டத்தினால் திரு. வோல்ட்டர் பெகட் (Walter Begekat) என்பவரின் ஆலோசனைப்படி முதலில் திறைசேரி உண்டியல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இலங்கையில் 1923 ஆம் ஆண்டில்

"7 ஆம் இலக்கதிறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின்'' மூலம் இங்கிலாந்து முடிக்குரிய முகவர்களால் திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்டன. இவ்வுண்டியல்கள் 1000 ஸ்ரேலிங் பவுண்களை அல்லது அவற்றின் பெருக்கத்தைக் கொண்டதாக அமைந்திருந்தன. இதே ஆண்டில் 8ஆம் இலக்க திறைசேரி உண்டியலின் சட்டப் பிரகாரம் வழங்கப்பட்டன.

திறைசேரி உண்டியல் தொடர்பான வெளியீடு, மீட்டல் பதிவு செய்தலும் ஏடுகள் பாதுகாத்தலும் தொடர்பான நிர்வாகம் மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. நாட்டின் வழங்கக்கூடிய தொகுதிக் கடனின் உச்ச எல்லை பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படும். இத்தகைய தீர்மான எல்லையினை கீழ்வரும் புள்ளி விபரங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

1941 — 10M
1948 — 25M
1949 — 50M
1950 — 100M
1960 — 650M
1992 — 125000M
1995 — 175000M

(மூலம்-மத்திய வங்கி அறிக்கை)

திறைசேரி உண்டியல்கள் ஆரம்பத்தில் 3,6,12 மாதங்கள் முதிர்ச்சி கொண்டதாக அமைந்திருந்தன.

இவ்வாறு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட முதிர்ச்சி கொண்ட உண்டியல்கள் வழங்கப்படுவதால் பணச்சந்தையில் மட்டுமன்றி மூலதனச்சந்தையின் கருவியாகவும் திறை சேரி உண்டியல்கள் காணப்படுகிறது.

## 3. இலங்கையின் பணச்சந்தை அமைப்பு

இலங்கையில் குறுங்காலக் கடன் கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்பட்ட பணச்சந்தையின் உப சந்தைகளாக கீழ் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. வங்கிகளுக்கிடையிலான அமைப்புப் பணச்சந்தை
2. திறைசேரி உண்டியலுக்கான சந்தை
3. உள்நாட்டு அந்நியச்செலாவணிச்சந்தை
4. கரைகடந்த வங்கிச் சந்தை
5. மறு கொள்வனவுச் சந்தை (1988 இல் அறிமுகப்படுத்தியது)

## 4. திறைசேரி உண்டியலுக்கான சந்தை

திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு விற்பனை செய்கின்ற சந்தையினையே இது குறிக்கின்றது. இச் சந்தை செயல்படுகின்ற தன்மையினைப் பொறுத்து முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தை இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தை என இருவகையாக வகுத்து நோக்கலாம்.

திறைசேரி உண்டியல்கள் புதிதாக வெளியீடு செய்து விற்பனை கொள்வனவு நடைபெறின் அதனையே முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தை என்பர். மத்திய வங்கியிடம் இருந்து நிதி நிறுவனங்களும் நிதியல்லா நிறுவனங்களும் நேரடியாகக் கொள்வனவு செய்வதனை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். கொள்வனவு செய்யப்பட்ட உண்டியல்களை மூன்றாம் நபருக்கு விற்பனை செய்யும் போது "இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தை'' ஏற்படுகிறது. 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கையின் இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தை ஏற்படுத்தப்பட்டது. இதனால் முதிர்வுத் திகதி வரை உண்டியலை வைத்திருக்காமல் பணம் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் கழிவுடன்

மாற்றி கைமாற்றம் செய்யக்கூடியதாக இருக்கின்றது. இச்சந்தர்ப்பத்தில் உரித்தாண்மை மட்டுமே மாறுகின்றது. இரண்டாந்தரச் சந்தையில் விற்பனை செய்யும் பொழுது வங்கிகள் கொடுக்கும் மறுகழிவு வீதம் திறைசேரி உண்டியல் வருவாய் வீதத்திலும் குறையக் கூடாது. இதனாலேயே மறுகழிவு செய்பவர்கள் நட்டமடையாமல் பாதுகாக்கப்படுகின்றார்கள். திறைசேரி உண்டியலின் முகப் பெறுமதிக்கும் விற்பனை விலைக்கும் இடையிலான வேறுபாடு உண்டியல் வருவாய் ஆகும். இது முதலீட்டாளர்களுக்கு வருமானம் ஆகும்.

## 5. திறைசேரி உண்டியல் விற்பனை முறை

அரசின் சார்பில் மத்திய வங்கியினால் திறைசேரி உண்டியல்கள் வெளியிடப்படுகின்றன. 1992ற்கு முன்னர் கேள்விப் பத்திரங்கள் மத்திய வங்கியிடம் சமர்ப்பித்து இவற்றைக் கொள்வனவு செய்யக்கூடியதாய் இருந்தது. 1992ற்கு பின்னர் மத்திய வங்கியினால் சான்றளிக்கப்பட்ட முதன்மை வணிகரிடத்து மட்டுமே வாராந்த கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். தற்போது 13 வர்த்தக வங்கிகளும் 4 பணத்தரகு நிறுவனங்களும் ஒரு நம்பிக்கைக் கூறு முகாமைத்துவக் கூட்டு நிறுவனமும் மத்திய வங்கியினால் சான்றளிக்கப்பட்டவையாகக் காணப்படுகிறன.

திறைசேரி உண்டியல்கள் 1000 ரூபாவிற்கு மேற்பட்ட தொகையாக அல்லது 1000 மடங்காக இது அமைந்திருந்தது. 1992 ஆம் ஆண்டில் இருந்து மத்திய வங்கி வழங்குகின்ற திறைசேரி உண்டியல்கள் பின்வரும் பண்புகள் கொண்டதாக அமைந்திருக்கும்.

i) கேள்விப்பத்திரங்களின் ஆகக் குறைந்த கேள்விப்பத்திர அளவாக 5000,000 ரூபா ஆகும்.

ii) கேள்விப்பத்திரங்கள் பெறத் தகுதியானவர்கள் மத்திய வங்கியால் தெரிவு செய்யப்பட்ட சான்றளிக்கப்பட்டவர்களாக காணப்படுகிறார். இந்த முகவர்களூடாகத் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

iii) திறைசேரி உண்டியல்களுக்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டு மிகக் கூடுதலான கொள்விலை குறித்தோருக்கு விற்கப்படும். இக்கேள்விப் பத்திரங்கள் தொடர்புச்சாதனங்கள் மூலம் ஒவ்வொரு திங்கட்கிழமையும் தொடர்பான நிபந்தனைகளை உள்ளடக்கியதாக விளம்பரம் மேற்கொள்ளப்படும். இதில் கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் இறுதித் திகதி, கேள்விப் பத்திர குறைந்தளவு, கொள்வனவுக்கான தகுதியுடையோர், உண்டியலுக்கான முதிர்வு மாதங்கள், எடை எடுக்கப்பட்ட சராசரி விலை, எடை எடுக்கப்பட்ட சராசரி வருமானங்கள், கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் இடம் போன்ற தகவல்களை உள்ளடக்கியதாக இவ்விளம்பரம் அமைந்திருக்கும்.

வேறுபட்ட விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு முகவர்கள் தமது விண்ணப்பங்களை அந்தவார வியாழக்கிழமை 12 மணிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும். முகவர்கள் தாமாகவே சொந்த விலையைக் கோருவர். 100/=க்கு தற்போது தாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கின்ற விலையினைக் குறிப்பிட்டு இருப்பர். சகல கேள்விப் பத்திரங்களையும் மத்திய வங்கி பெற்ற பின்னர் தமது தேவைக்கேற்ப வங்கி விற்பனை விலைகளைத் தீர்மானிக்கும். அத்தீர்மானவிலைக்குக் குறைவாக இருந்தால் அந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இவ்விலைக்கு மேலாக இருக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படுவதைப் பின்வரும் அட்டவணை மூலம் விளங்கிக்கொள்ளலாம்.

| முதிர்ச்சியடையும் காலம் ( மாதம் ) | எடையெடுக்கப்பட்ட சராசரி விலை ஒவ்வொன்றும் 100 ரூபா | எடை எடுக்கப்பட்ட வீதம் ( வருடாந்தம் ) | சராசரி வருமானம் |
|---|---|---|---|
| 3 | 95.93 | $\frac{4.07}{95.93} \times 100 \times 4$ | 16·98% |
| 6 | 92 11 | $\frac{7·89}{92.11} \times 100 \times 2$ | 17·12% |
| 12 | 85·34 | $\frac{14·66}{85·34} \times 100$ | 17·18% |

( மூலம் – பத்திரிகை தினகரன் 16·09·1996 )

ஒவ்வொரு 100 ரூபா பெறுமதியான 12 மாதத் திறைசேரி உண்டியல் இன்று 80 ரூபாவிற்கு விற்பதற்கு வங்கி விரும்புகிறது. இதனால் வங்கி தர விரும்பும் வட்டி.

$$\frac{100 - 80}{80} \times 100 = \frac{20}{80} \times 100 = 25\ \%$$

ஆனால் ஒருவர் 75 ரூபாவெனத் தனது விண்ணப்பத்தில் கோரியிருந்ததால் அந்த முகவர் எதிர்பார்த்த வட்டி வீதம்

$$\frac{100 - 75}{75} \times 100 = \frac{25}{75} \times 100 = 33·333\ \%$$

இவ்வுதாரணத்தில் வங்கி கொடுக்க இருக்கும் வட்டி வீதம் 25% ஆனால் முகவர் எதிர்பார்த்த வட்டி வீதம் $33\frac{1}{3}\%$ ஆகும். எனவே இவ்வாறு விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

மறுபுறம் விண்ணப்பம் செய்தவர் 100க்கு 90 ரூபா தருவதாக கோரி இருந்தால் அவர் எதிர்பார்க்கும் வட்டி வீதம்

$$\frac{100 - 90}{90} \times 100 = \frac{10}{90} \times 100 = 11·11\%$$

ஆகவே வங்கி வழங்கத் தயாராக இருந்த வட்டி வீதம் 25% ஆனால் முகவர் கோரிய வட்டி வீதம் 11·11 எனவே இவரது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும்.

## 6. திறைசேரி உண்டியலும் நாணயக் கொள்கையில் அதன் தாக்கமும்

மத்திய வங்கியானது நிதியினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கோடு திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்யும்போது நிதி நிறுவனங்களிடமும், பொது மக்களிடமும் உள்ள பணம் மத்திய வங்கியைச் சென்றடைகிறது. இது நாணயத்தளத்திலிருந்து பணம் வெளியேற்றப்படுவதனால் நாணயத்தளம் சுருக்கம் அடைகிறது. மாறாக திறைசேரி உண்டியல்களை மீளக் கொள்வனவு செய்யும்போது நிதி நிறுவனங்களிடமும், நிதி அற்ற நிறுவனங்களிடமும் பணம் சென்று சேருகிறது. இதனால் நாணயத்தளம் விரிவடைகிறது. வணிக வங்கிகள் கடனாக்கத்தின் மூலம் பணவாக்கத்தையும் செய்கின்றது.

நாட்டின் பண நிரம்பல், வங்கியமைப்பிலுள்ள நாணயத்திற்கும் பணப் பெருக்கிக்கும் உள்ள தொடர்பில் தங்கியுள்ளது. ஆகவே இறுதியான பண விரிவாக்கம் என்பது நாணயத்தளத்திலும், பணப் பெருக்கியிலும் தங்கியுள்ளது. வணிக வங்கிகள் ஒதுக்கு வீதத்தைக் கொண்டு இயங்குவதனால் பணப்பெருக்கி எப்போதும் ஒன்றுக்கு மேற்பட்டதாகவே அமையும். இதனால் நாணயத்தளம் ஒரு குறிக்கப்பட்ட தொகையால் சுருக்கமடையும் போது பணநிரம்பலில் ஏற்படும் சுருக்கம் நாணயத் தளத்தில் ஏற்படும் சுருக்கத்திலும் பார்க்க அதிகமாக இருக்கும். இத்தகைய முறையில் தான் நாணயக் கொள்கை பெருமளவுக்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி 1987 தொடக்கம் அதன் திறந்த சந்தை செயற்பாடுகளுக்கான சிறந்த கருவியாக திறைசேரி உண்டியலைப் பயன்படுத்தி வந்துள்ளது. 1980க்கு பின் திறைசேரி உண்டியல்கள் ஒழுங்கான ஏல விற்பனையில் மேற்கொள்ளப்பட்டது. உண்டியல்களின் போட்டி வட்டி வீதங்களைச் சந்தை நிர்ணயித்து வந்தமையால் வங்கியல்லா முதலீட்டாளரைப் பொறுத்தவரை மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது. இதனால் 1991ல் 39·3% ஆக வங்கியல்லாத் துறைகள் திறைசேரி உண்டியல்களை வைத்திருந்தன. இக்காரணிகளினால் திறைசேரி உண்டியல்களின் தொகுப்பில் 10% ஆன வருடாந்த வளர்ச்சி வீதத்தையும் மொத்த வியாபாரத்தில் 15% வருடாந்த வளர்ச்சி வீதத்தையும் அண்மையில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

## 7. திறைசேரி உண்டியலின் சிறப்பு அம்சங்கள்

(i) அரசினுடைய 100% உத்தரவாதம் உண்டு.

(ii) மூன்று மாதத்தில் இருந்து 48 மாத முதிர்ச்சிவரை கொள்வனவு செய்யலாம்.

(iii) திறைசேரி உண்டியலை வைத்திருப்போர் பணம் தேவைப்படின் கழிவுடன் பணம் ஆக்கலாம்.

(iv) ஏனைய முதலீடுகளை விட உயர் வட்டி வீதம் உண்டு

(v) திறைசேரி உண்டியல் வெவ்வேறு வட்டி வீதங்களில் வழங்கப்படும்.

(vi) முதலீட்டு நடவடிக்கைகள் மிகவும் சிக்கனமானதாக அமைந்து இருக்கும்.

(vii) நாணயக் கொள்கையினை ஒழுங்குபடுத்த உதவுகிறது.

(viii) திங்கட்கிழமைகளில் அரசசார்பான நிறுவனங்களில் விளம்பரப் படுத்தப்படுகிறது. முதலீடுகள் நுணுக்கமாக ஆராய்ந்து செய்தல் வேண்டும். ஏனெனில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

(ix) மத்திய வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்ட முகவர்கள் மூலம் கையாளப்படுகிறது. முகவர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் முதலீடு செய்யலாம்.

## 8. திறைசேரி உண்டியல் சந்தை அதிக வளர்ச்சியடையாமைக்கான காரணங்கள்

(i) இலங்கையில் பணச்சந்தை அமைப்பு அதிகளவில் வளர்ச்சியடையவில்லை இதில் அமைக்கப்படாத பணச்சந்தை அதிக தாக்கத்தை ஏற்படுத்துகிறது

(ii) இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தையில் நிறுவனங்கள், வங்கி பங்குபற்றுவது மிகவும் குறைவாக இருக்கிறது.

(iii) திறைசேரி உண்டியல் சந்தையில் பங்கு கொள்வோர் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றனர்.

(iv) கொழும்பு நகரத்தில் பெரும்பாலும் செயற்படுவதால் எல்லோரும் அதிக அக்கறை கொள்வதில்லை.

1980ஆம் ஆண்டுக்குப் பின்னர் திறைசேரி உண்டியல் சந்தை துரித வளர்ச்சி ஏற்பட்டாலும் மேலுள்ள குறைபாடுகளை நீக்கி மேலும் விரிவாக்குவதற்கு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

முற்றும்

## உசாத்துணை நூல்கள்


1. மத்தியவங்கி அறிக்கைகள்
2. பொருளியல் நோக்கு
   ஒக்டோபர் 94
3. திறைசேரி உண்டியல் முதலீடுகளும் இரண்டாந்தர சந்தை வாய்ப்பும்
   திரு. மா. நடராசசுந்தரம்
4. தினகரன் பத்திரிகை 16-09-1996
5. வர்த்தகத்திற்கு ஓர் அறிமுகம்



### ரிதிரேகா பரிசுதிய சேமிப்புச் சான்றிதழ்
### ( N. S. B வங்கியின் )

ரிதிரேகா என்றால் பணத்தைச் சேமிப்பதோடு பரிசில்களையும் வெல்ல வழிகாட்டும் சிறந்த சேமிப்புத் திட்டமாகும். சேமிப்புக்களுக்கான வட்டிக்குப் பதிலாக வரிவிலக்குப் பெற்ற பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படுவது இச் சேமிப்புத் திட்டத்தின் சிறப்பம்சமாகும். இச் சேமிப்புச் சான்றிதழ்கள் 100/= 500/= 1000/= ஆகிய பெறுமதிகளில் கிடைக்கின்றன. 2 மாதங்களுக்கு ஒரு சீட்டிழுப்பு நடைபெறும். பரிசில்கள் வழங்கப்படுவதோடு இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் இலாபத்திலிருந்து உபகாரப் பணமும் வழங்கப்படும். இச் சான்றிதழ்கள் அரச உத்திரவாதத்தைப் பெற்றவை.


J/Convent Maha Vidyalayam
JAFFNA

# சந்தைப் பொருளாதாரமொன்றில் பொருளாதாரத் திறன்
# Economic Eificent in a Market Economy

நர்மதா இராஜரட்ணம்
97 வர்த்தகப் பிரிவு

நுகர்வோர் தமது பயனை உச்சப் படுத்தலையும் விற்பனையாளன் தமது இலாபத்தை உச்சப்படுத்தலையும் நோக்காகக் கொண்டு சந்தைப் பொருளாதாரம் மொன்றில் இயங்குகின்றபோது சந்தை நிலைமைகளால் மாற்றமுறும் விலை சைகைக்கேற்ப தமது கேள்வியையும் நிரம்பலையும் ஒழுங்குபடுத்துகின்றனர். அதாவது நுகர்வோர் விலைக்கு தமது எல்லை அலகின் பயன் சமப்படும்போது உச்சதிருப்தியையும், விற்பனையாளன் தனது எல்லை அலகின் செலவை விலை ஈடுசெய்யும்போது உச்ச இலாபத்தையும் அடைகின்றனர் என்பதாகும்.

ஆகவே ஒவ்வொரு சந்தைச் சமநிலையானது ஒரு பொருள் குறித்த நுகர்வோரின் எல்லைப்பயனும் அப்பொருள் உற்பத்தியாளரின் எல்லைச் செலவும் சமப்படும் ஒரு நிலையைக் குறிப்பதாக அமைகின்றது. அதாவது சந்தையின் எல்லைப்பயன் கோட்டின் பிரதிபலிப்பாகக் கேள்விக்கோடும் எல்லைச் செலவுக் கோட்டின் பிரதிபலிப்பாக நிரம்பல்கோடும் செயற்படுவதைக் குறிக்கின்றது. இவை இரண்டும் சந்திக்கும் இடமான சமநிலையானது ஒரு பொருளாதாரத் திறனை வெளிப்படுத்தும் நிலையாக அமைகின்றது.




படத்தில் கேள்விக்கோட்டின் பிரதிபலிப்பாக எல்லைப் பயன்கோடும் (Mu), நிரம்பல்கோட்டின் பிரதிபலிப்பாக எல்லைச் செலவுகோடும் காட்டப்படுகின்றது. இவை இரண்டும் ஒன்றை ஒன்று வெட்டும் புள்ளியானது ஒரு பொருளாதாரத்தின் பொருளாதாரத்திறனை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

இப்பொருளாதாரத்திறன் இரண்டு தெளிவான அம்சங்களை உள்ளடக்குகின்றது.

1. உற்பத்தி திறன்
2. ஒதுக்கீட்டுத் திறன்

உற்பத்தித்திறன் என்பது உற்பத்திக்கு எனத் தெரிவு செய்யப்பட்ட இரு பொருளின் உற்பத்தியில் ஒரு பொருளின் உற்பத்தியை மற்றொரு பொருளின் உற்பத்தியளவைக் குறைக்காது பெறமுடியாதிருக்கும் ஒரு நிலையைக் குறிப்பது ஆகும்.


ஒதுக்கீட்டுத்திறன் என்பது உற்பத்தி திறன் கொண்ட பொருட்சேர்க்கைகளைத் தெரிவு செய்வதுடன் சம்பந்தப்பட்டது. தற்போது உற்பத்தி நடைபெறும் பொருட்சேர்க்கையிலிருந்து உற்பத்திக்கெனத் தெரிவு செய்யப்படும் புதிய பொருட்சேர்க்கை ஒன்று எந்தவகையிலும் கூடிய பொருட்களை உற்பத்தி செய்யமுடியாது என்பதை இது குறிக்கின்றது. அதாவது ஒருவரைப் பாதிக்காது மற்றவரைச் சிறப்பாக்க முடியாமையே இது குறிக்கும்.


பொருளியலாளர்களால் செலவு என்பது ஒரு பொருளுக்கான மெய் அல்லது அமையச்செலவைக் குறிப்பிடுகின்றது. ஒரு பொருளுக்கான அமையச்செலவானது அதை உற்பத்தி செய்யும் வளங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் மற்றொரு பொருளைக் குறிக்கின்றது. எல்லா வளங்களும் ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்கு உற்பத்தியாளர்களால் பயன்படுத்தப்படும் போது உற்பத்தி செய்யப்பட்ட அப்பொருட்

களின் பெறுமதியானது அதன் மெய் அல்லது அமையச் செலவையும் பிரதிபலிக்கின்றது'

விலைக்குச் சமமாக எல்லைச்செலவு காணப்படும் சமநிலையானது குறிப்பிட்ட பொருள் உற்பத்தியில் சாதனங்களை ஈடுபடுத்தும்போது உற்பத்தியாளன் அதற்குப் பதிலாக உற்பத்தி செய்யக்கூடிய இன்னுமொருபொருளின் ஆகக்கூடிய பெறுமதியான அமையச் செலவையும் அது காட்டுகின்றது. இதே போன்று நுகர்வோனின் எல்லைப்பயன் விலைக்குச் சமப்படும்போது அப்பொருள் நுகர்வினால் நுகர்வோனுக்கு இழக்கக்கூடிய மற்றொரு பொருளின் அமையச்செலவை அது எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. இவை விலைப் பொறிமுறையினால் சமப்படுத்தப்படும் எல்லைப் பயனும் எல்லைச் செலவும் பொருளாதாரத் திறனை நிர்ணயிப்பதில் வகிக்கும் முக்கியத்துவத்தை விளக்குகின்றது. எல்லைப் பயனும் எல்லைச்செலவும் சமப்படும் நிலை உற்பத்தித் திறனை மட்டுமன்றி அதன் ஒதுக்கீட்டுத் திறனையும் மேற்கொள்கின்றது.

இதனை ஒரு பொருளாதாரத்தில் மேற்கொள்ளப்படும் இரண்டு பொருட்களின் உற்பத்திகளைக்கொண்டு விளக்க முடிகின்றது. ஒரு பொருளாதாரம் உணவு, புடைவை ஆகிய இரண்டு பொருள் உற்பத்தியில் ஈடுபடுகிறது என வைத்துக்கொள்வோம். இரண்டு பொருள்களுக்கான உற்பத்தியும் சந்தைச் சமநிலையில் உள்ளன என வைத்துக்கொள்வோம். உணவுச்சந்தையில் உணவுக்கான சமநிலைச் சந்தை விலை po ஆகவும் சமநிலைத்தொகை qo படத்தில் காட்டியவாறு காணப்படுகிறது. என வைத்துக் கொள்வோம்.




புடைவைக்கான சந்தை சமநிலை விலை Po ஆகவும் சந்தை சமநிலைத்தொகை Qo ஆகவும் காணப்படுகிறது. படத்தில் காட்டியபடி உணவுக்கான உற்பத்தி, சமநிலைத் தேவைக்கு அதிகமாக வளங்கள் ஒதுக்கப்பட்டு உற்பத்தி $q_1$ என மேற்கொள்ளப்படுகிறது. இந்நிலையில் உணவின் எல்லைப்பகுதியானது $P_1$ ஆக உள்ளது. அதாவது நுகர்வோர் உணவுக்கு செலுத்த விரும்பிய விலை $p_1$ என்பதாகும். எனினும் $q_1$ அளவான உணவுற்பத்தியை மேற்கொள்ள உற்பத்தியாளருக்கான எல்லைச் செலவு $P_2$ ஆக உள்ளது. இச்சந்தையில் உணவின் எல்லைப்பயனை மீறியதாக எல்லைச்செலவு காணப்படுகிறது. அதாவது உணவுற்பத்திக்காக ஒதுக்கப்பட்ட வளங்களிலிருந்து பெற்றபயனைக் காட்டிலும் அவ் உணவுற்பத்திக்காக இழந்தஅமையச்செலவு உயர்வாக உள்ளது. அதாவது அவ்வளங்களைக்கொண்டு உற்பத்திசெய்யக் கூடிய மற்றொரு பொருளின் உற்பத்தியளவுகள் குறைக்கப்பட்டுள்ளன.

தற்போது புடைவைச் சந்தைக்கு வருவோமானல் இங்கு அதற்கு மாறான நிலையேகாணப்படுகின்றது. இங்கு சமநிலைத் தேவைக்குக் குறைவான அளவில் $Q_1$ ல் புடைவை உற்பத்தி செய்யப்படுகின்றது எனக்


கொள்வோம். நுகர்வோர் $Q_1$ அளவான புடைவையை கொள்வனவு செய்யும்போது அதன் எல்லைப்பயன் $P_2$ க்குச் சமனாக காணப்படுகிறது. உற்பத்தியாளர் அதனை விடக் குறைவான $P_1$ என்ற எல்லைச்செலவில் உற்பத்தி செய்கின்றனர். இப்புடைவைச் சந்தையில் எல்லைப்பயன் எல்லைச் செலவை விஞ்சியதாகக் காணப்படுகின்றது. ஆகவே உணவுச் சந்தையில் ஓர் அலகு உற்பத்திச் சாதனத்தை புடைவை உற்பத்திக்கு மாற்றும் போது அப்புடைவை உற்பத்தியில் பெறப்படும் மேலதிக ஓர் அலகினால் நுகர்வோர் பெறும்பயன் அவ் உற்பத்தி அலகு உணவில் உற்பத்திசெய்த ஓர் அலகிலிருந்து பெற்ற பயனைவிட அதிகமானது ஆகும். ஆகவே சமநிலைத் தேவைக்கு மிஞ்சியதாகவுள்ள உணவு உற்பத்திக்கான உற்பத்தி சாதனங்களை புடைவை உற்பத்திக்கு மாற்றுவதனூடாக நுகர்வோர் முன்னரிலும் கூடிய பயனை அடையலாம். இங்ஙனம் உற்பத்திச் சாதனங்கள் திறனற்ற உற்பத்தியிலிருந்து திறமையான உற்பத்திக்கு மாற்றப்படும் வாய்ப்புக் காணப்படுகிறது. அதாவது எல்லைச் செலவிலும் குறைந்த எல்லைப் பயனை வழங்கிய உணவுற்பத்தியில் திறனற்று இருந்த சாதனங்களை எல்லைச் செலவிலும் எல்லைப்பயன் கூடுதலாகவுள்ள புடைவை உற்பத்திக்கு மாற்றும்போது அது திறனுடையதாகக் காணப்படுகிறது.

எனினும் கட்டுப்பாடற்ற சந்தைச் சமநிலையானது எப்போதும் எல்லைச்செலவிலும் எல்லைப்பயன் குறைவாக உள்ள உற்பத்தியிலிருந்து எல்லைச்செலவிலும் எல்லைப்பயன் உயர்ந்த உற்பத்திக்குச் சாதனங்களை மாற்றுவதைச் சாத்தியமாக்கும் என்பது மேற்கூறப்பட்டதன் பொருள் அல்ல. இதன் சாராம்சம் யாதெனில் எல்லைப் பயன் குறைந்த உற்பத்தியிலிருந்து எல்லைப்பயன் கூடிய உற்பத்திக்குச் சாதனங்களை மாற்றுவதனூடாக பொருளாதாரம் மேலதிக உற்பத்தி ஒன்றைப்பெற்றுக் கொள்ளலாம் என்பதையே இது குறிக்கின்றது. மேற்குறிக்கப்பட்ட இரண்டு சந்தைகளும் சமநிலையில் உள்ளபோது சாதனங்களை ஒன்றிலிருந்து ஒன்று மாற்றுவதன்மூலம் மேலதிகப் பெறுமதி ஒன்றையும் பெற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் உணவு உற்பத்தியில் ஓர் அலகைக் குறைப்பதன் மூலம் (q0 ல் ஒரு அலகை விடுவதன் மூலம்) புடைவையில் q0க்குச் சமனான Qo என்றளவான உற்பத்தியையே பெற்றுக்கொள்ளலாம்.

மேற்காட்டப்பட்ட உதாரணத்தில் உணவுச் சந்தையிலிருந்து புடைவைசந்தைக்கு சாதனங்கள் மாற்றப்பட்டபோது இது ஒவ்வொருவரையும் நன்நிலை அடையச்செய்யும் (Everyone better off) என்பது கருத்தல்ல. ஒவ்வொருவரையும் நன்நிலைப்படுத்தலை சாதனங்களின் மாற்றத்தினூடாக மேற்கொள்ள முடியாது. அதாவது ஒவ்வொருவருக்குமான மேலதிகப் பெறுமதி ஒன்றை சாதனங்கள் மாற்றப்படுவதனால் மேற்கொள்ள முடியாது என்பது இதன் பொருள். இது ஒரு வகையில் சிலருக்கு உரித்தாக இருந்த சாதனங்களைப் பெற்று சிலரை நன்னிலைப்படுத்துவதாக அமைகின்றது.

சுயாதீன சந்தைப்பொருளாதாரமொன்றில் பொருளாதாரத் திறனுள்ள ஓர் மட்டத்திலேயே வெளியீட்டு மட்டம் அமைகின்றது என்பது மேற்காட்டப்பட்ட விளக்கத்திலிருந்து பெறப்படுகின்றது. எனினும் இன்று சந்தைக் கட்டுப்பாட்டுக்குள் வராத சமூக எல்லைப்பயனும், சமூக எல்லைச் செலவு நிலை ஒன்றும் சில பொருட்களின் உற்பத்தியில் ஏற்படுகின்றது. இத்தகைய நிலமைகள் சந்தைக்குக் கட்டுப்படாத சந்தையின் வெளிவாரிப் பெறுமதிகள் அல்லது வெளிவாரி விளைவுகள் என்று அழைக்கப்படுகின்றன. இவை சுயாதீன சந்தை முறைமையின் ஒரு தோல்வியாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றன. இவ் வெளிவாரிவிளைவுகள் பொதுநன்மை அல்லது தீமை என்ற வடிவமாக அமைகின்றன.

குறிப்பிட்ட பொருளாதார நடவடிக்கையில் (உற்பத்தி அல்லது நுகர்வு) ஈடுபட்ட ஒருவர் அடையும் நன்மையைவிட அதனுடன் நேரடியாகத் தொடர்புபடாதவர் அல்லது சமூகம் அடையும் நன்மை உயர்வாக இருக்கும்போது அது வெளிவாரி நன்மைகள் அல்லது நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள் என்று அழைக்கப்படுகின்றன. இப்பொருட்களின் உற்பத்தியில் சந்தைப்பொருளாதாரம் சமூக எல்லைப்பயனும், எல்லைச் செலவும் சந்திக்கும் பொருளாதாரத் திறனுள்ள உத்தம மட்டத்தில் உற்பத்தியை மேற்கொள்ளாது தனியார் எல்லைப்பயனும் தனியார் எல்லைச்செலவும் சமப்படும் உத்தம மட்டம் ஒன்றிலே உற்பத்தியளவைத் தீர்மானிக்கின்றது. இது சமூகத் தேவைக்குக் குறைந்த ஒரு மட்டமாகும். இது சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் தோல்வியாக எடுத்துக்காட்டப்படுகின்றது.




MC - பொருளுக்கான எல்லைச்செலவு அல்லது நிரம்பல்

EB - வெளிவாரி நன்மை

MPB - தனியார் நன்மை அல்லது தனியார் எல்லைப்பயன்

MSB - சமூக எல்லைப்பயன்


qs - சமூக உத்தம வெளியீடு

qp - தனியார் உத்தம வெளியீடு

மேற்காட்டப்பட்ட படம் வெளிவாரி நன்மையை தெளிவுபடுத்துகின்றது. MPB கோடு பொருள்நுகர்வால் தனியார் அடையும் நன்மையினைக் காட்டுகிறது. EB என்பது தனியாரின் ஓரலகு நுகர்வால் சமூகம் அடையும் மேலதிக நன்மை காட்டப்படுகிறது. இது a என்ற அளவாக எல்லா அலகிற்கும் நிலையாகக் காணப்படுகிறது. சமூக நன்மையானது நேரடியாக தனியார் அடைந்த நன்மையையும் சமூகம் அடைந்த வெளிவாரி நன்மையையும் ஒன்றுசேர்ப்பதன் மூலம் (MPB+EB) MSB வளையியாக அமைகின்றது. படத்தில் சமூக உத்தம மட்டம் qs ஆக இருக்க சந்தை தனியார் உத்தம மட்டமாக அமையும், qp என்றளவாக உற்பத்தியை மேற்கொள்கின்றது. இங்கு சந்தைப் பொருளாதாரம் பொருளாதாரத்திறனுள்ள MSB ஐ MC வெட்டும் புள்ளியில் உற்பத்தியை மேற்கொள்ளத் தவறி விட்டமை சுட்டிக் காட்டப்படுகின்றது. கல்வி, சுகாதாரம் போன்ற சமூக நலச் சேவைகளின் உற்பத்தியில் இத்தகைய ஒரு நிலை சந்தைப்பொருளாதாரத்தில் காணப்படுகிறது.

இதே போன்று ஒருவரின் பொருளாதார நடவடிக்கை ஒன்றினால் சமூக நன்மையைக் காட்டிலும் தனியார் நன்மை உயர்வாக அமைதலும் உண்டு. இவை மற்றவர் அல்லது சமூகத்தின் மீது செலவுகளை அல்லது தீமைகளை சுமத்தி விடுவதாக அமைகின்றது, இவை எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் அல்லது வெளிவாரிச் செலவுகள் எனப்படுகின்றன. உதாரணமாக உற்பத்தி அல்லது நுகர்வு நடத்தை ஒன்றின் மூலம் சூழல் மாசுபடலைக் குறிப்பிடலாம். இத்தகைய வெளிவாரிச் செலவுகளைக் கொண்ட உற்பத்திகளில் தனியார் எல்லைச்செலவைக் காட்டிலும் சமூக எல்லைச் செலவு உயர்ந்ததாக அமைகின்றது. இந்நிலையில் சமூக உத்தம மட்டத்தைவிட உயர்வாகவுள்ள தனியார் உத்தம மட்டம் சந்தைப் பொருளாதாரத்தின்

வெளியீட்டு மட்டமாக அமைகின்றது. இது பொருளாதார நடவடிக்கை குறித்த எல்லைப்பயன் = எல்லைச்செலவு என்ற திறன் நிலையை வெளிப்படுத்தவில்லை.




MPC — தனியார் எல்லைச்செலவு

MU — பொருளுக்கான எல்லைப்பயன்

EC — வெளிவாரி செலவு

MSC — சமூக எல்லைச் செலவு

qs — சமூக உத்தம வெளியீடு

qp — தனியார் உத்தம வெளியீடு

படத்தில் MPC என்பது தனியார் எல்லைச் செலவையும் EC சமூகத்தின் மீது ஓரலகினால் சுமத்தப்படும் வெளிவாரிச் செலவை a என்ற நிலையான அளவாக காட்டுகின்றது. உற்பத்தியாளரின் எல்லைச் செலவும் வெளிவாரிச் செலவும் (MPC+ EC) சேர்ந்து குறிப்பிட்ட நடவடிக்கையில் சமூகம் தாங்கும் எல்லைச் செலவை MSC என்றவகையில் காட்டுகின்றது.

இங்கு பொருளாதாரத்தின் வெளியீட்டு மட்டம் தனியார் உத்தம மட்டமாக qp என்பதில் அதாவது எல்லைப் பயனும் (MU) வும் தனியார் எல்லைச் செலவும் (MPC) வெட்டும் இடத்தில் அமைந்து விடுகின்றது எனினும் சமூக எல்லைச்செலவும் (MSC), எல்லைப்பயனும் (MU) வெட்டுமிடமான சமூக உத்தம மட்டத்தில் அமையவில்லை. அதாவது பொருளாதார நடவடிக்கைகளுக்கான (MU=MSC) உண்மையான பொருளாதாரத்திறனுள்ள புள்ளியில் வெளியீட்டுமட்டம் அமையவில்லை. இது சந்தைப்பொருளாதாரம் பொருளாதாரத் திறனுடன் செயற்படாமையை விளக்குகின்றது.

## தேசிய அபிவிருத்தி வங்கி

இவ்வங்கி 1993 ல் பட்டியல் இடப்பட்டு தனியார் மயமாக்கப்பட்டது, 1995 ல் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழ் உரிமை பெற்ற தனித்துறை சிறப்புப் பெற்ற வங்கி என பட்டியலிடப்பட்டது. இதன் விளைவாக தேசிய அபிவிருத்தி வங்கி இலங்கை மத்திய வங்கியின் கட்டுப்பாட்டுக்குட்பட்டது. இவ்வங்கியின் பங்குதாரர்களாக பொதுமக்கள், இலங்கை அரசாங்கம், பல கட்சிசார் நிறுவனங்கள் காணப்படுகின்றன.

# பதங்கள் TERMS

இவாஞ்சலின் பெனிற்றா—வென்செஸ்லாஸ்
99 கலைப்பிரிவு

## முகவுரை

அளவையியலில் பாரம்பரிய அளவையியல் நவீன அளவையியல் என இரு பெரும் பிரிவுகள் அடக்கம் பெறுகிறது. பாரம்பரிய அளவையியலில் எடுப்புக்களை அதிகமாகப் பயன் படுத்துவதால் அவ் எடுப்புக்களில் எழுவாய் பயனிலையாகப் பதங்கள் கொள்ளப்படுவது ஒரு சிறப்பம்சமாகும். இந்த வகையில் பதங்களிற்கான வரைவிலக்கணங்களின் வகைகள் பதங்களுக்கு இடையான தொடர்புகள் போன்றவற்றை இக்கட்டுரை தெரியப்படுத்துகிறது.

வாதங்களின் வாய்ப்பினை ஆராய்வது அளவையியல் ஆகும். அளவையியலின் வாதங்களின் மூலங்களாக எடுப்புக்களையும் எடுப்புக்களின் உறுப்புக்களாகப் பதங்களும் அமைகின்றன.

எடுப்புக்கள் என்பது உண்மையாக அல்லது பொய்யாக அமையக்கூடிய அர்த்தமுள்ள கூற்றுக்களாகும். இவ்வெடுப்புக்களில் எழுவாய்ப்பதம், பயனிலைப்பதம் அளவீட்டுச் சொல் இணைக்கும் சொல் என 4 உறுப்புக்கள் காணப்படுகின்றன.

உ+ம்:- ''எல்லா மனிதரும் இறப்பவர்கள் ஆவார் என்னும் எடுப்பில் எல்லாம் என்பது அளவீட்டுச் சொல் ஆகவும் மனிதர் என்பது எழுவாய் பதம் ஆகவும், இறப்பவர் என்பது பயனிலைப் பதம் ஆகவும் ஆவார் என்பது இணைக்கும் சொல்ஆகவும் அமைந்துள்ளது.

இவ்வுறுப்புக்களில் எழுவாயும் பயனிலையுமே பதங்கள் ஆகும். ஒரு எடுப்பின் எழுவாயாகவும் பயனிலையாகவும் அமைந்த சொல் அல்லது சொற் கூட்டம் பதம் எனப்படும் உ+ம்:- ''எல்லா மலர்களும் அழகானவை'' ஆகும். என்பதில் மலர்கள் எழுவாய்ப் பதம் என்பனவாகவும் அழகானவை பயநிலைப்பதமாகவும் அமைந்துள்ளது.

உ+ம்:- ''எனது வீட்டுத் தோட்டத்தில் மல்லிகை மலர்கள் எல்லாம் அழகானவை ஆகும்''

இதில் எனது வீட்டுத் தோட்டத்தில் மல்லிகை மலர்கள் என்னும் எழுவாய்ப்பதம் ஒரு சொற் கூட்டம் ஆகும்.

பதங்கள் எல்லாம் சொற்கள் ஆகும். ஆனால் சொற்கள் எல்லாம் பதங்கள் அல்ல. ஏனெனில் ஒருஎடுப்பில் எழுவாயும் பயனிலையுமே பதமாகும். மாறாக அளவுச் சொற்களோ இணைக்கும் சொற்களோ பதங்களாகாது.

### பதங்களின் வகைகள்

பாரம்பரிய அளவில் பதங்கள் பலவாறாக வகைப்படுத்தப்படுகின்றது. இவை முற்றிலும் ஒன்றுக் கொன்று அதிக வேறுபாடு இல்லை. சில இயல்புகளின் அடிப்படையிலேயே பிரிக்கப்படுகின்றன. அந்த வகையில் பதங்களின் வகைகள் பின்வருமாறு.

1. தனிப்பொருட் பதமும் பொதுப் பதமும்
2. கருத்துக் குறிக்கும் பதமும் கருத்துக் குறியாத பதமும்
3. பண்புப்பதமும் பண்பிப்பதமும்
4. விதிப்பதமும் மறைப்பதமும்
5. தனிப்பதமும் சார்புப்பதமும்
6. குறைப்பதமும் குறையல்லாத பதமும்
7. சமுதாயப் பதமும் வியாதிப் பதமும்

### தனிப்பொருட்பதமும் பொதுப்பதமும்

இவை இரண்டும் ஒரு பதமானது. எத்தனை பொருளைக் குறிக்கப் பயன்படுகிறது என்ற அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டது.

### தனிப்பொருட்பதம்

தனித்து ஒரு பொருளைக் குறிக்கப் பயன்படும் பதம் தனிப் பொருட் பதம் எனப்படும்

உ+ம்:- இலங்கை, யாழ்ப்பாணம், இராமன், சாந்தி இப்பதங்கள் 2 வகைப்படும்

i) தனி இடு குறிப்பதம்
ii) தனி விபரணப் பதம்

### தனி இடுகுறிப்பதம்

தனித்து ஒரு பொருளைக் குறித்துக் கொண்டு எவ்வித கருத்தையும் வெளிக்காட்டாத பதம் தனி இடுகுறிப்பதம் எனப்படும் இப்பதம் தமது இயல்பை வெளிக்காட்டாததால் கருத்துக் குறிப்பு அற்ற பதமாகும். ஆனால் ஒரு பொருளைக் குறிக்கப் பயன்படுவதால் அகலக் குறிப்புடைய பதங்கள் ஆகும்.

உ+ம்: ஆதவன், கொழும்பு, சுதர்சினி

### தனி விபரணப்பதம்.

தனித்து ஒரு பொருளைக் குறித்துக் கொண்டு தனக்கே உரிய இயல்பை வெளிக்காட்டும் பதம் தனிவிவரணப் பதம் ஆகும் இப்பதம் தன் இயல்பை வெளிக்காட்டுவதால் கருத்துக் குறிப்புடைய பதமாகும். அத்துடன் ஒரு பொருளையும் குறிக்கப்பயன்படுவதால் அகலக் குறிப்புடைய பதமாகும்.

உ+ம்: I இலங்கையில் தற்போதைய ஜனாதிபதி
இலங்கையில் முதல் பெண் பிரதமர்

### பொதுப்பதம்

ஒத்த இயல்புடைய ஒரு பொருளையோ பல பொருளையோ குறிக்கப் பயன்படும் பதம் பொதுப்பதம் ஆகும். இப்பதங்கள் தமக்குரிய இயல்பை வெளிக்காட்டுவதால் கருத்துக் குறிப்புடைய பதங்கள் ஆகும். அத்துடன் தமது அங்கத்துவங்களையும் எடுத்துக்காட்டுவதால் அகலக் குறிப்புடைய பதம் ஆகும்.

உ+ம் மனிதன், மிருகம், பறவை

### கருத்துக் குறிக்கும் பதமும் கருத்து குறியாப் பதமும்

இவ்விரு பதங்கள் பற்றி பாரம்பரிய ரீதியாகவும் நவீன நோக்கிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பாரம்பரிய அளவியலாளரின் கருத்துப் படி கருத்துக் குறிப்பைக் கொண்டமைந்த பதங்கள் கருத்துக் குறிக்கும் பதங்கள் எனவும் கருத்துக் குறிப்பைக் கொண்டிராத பதங்கள் கருத்துக் குறியாப் பதங்கள் எனவும் கொள்ளப்படுகிறது. இதன்படி தனி விபரணப் பதம், பொதுப்பதம் என்பன கருத்துக் குறிப்பைக் கொண்டிருப்பதால் கருத்துக் குறிக்கும் பதங்கள் எனவும் இடு குறிப் பதம் கருத்து குறியாதபதம் எனவும் பாரம்பரிய அளவியலாளர் கொள்கின்றனர்.

நவீன அளவியலாளரின் கருத்துப்படி கருத்துக் குறிப்பையும் அகலக் குறிப்பையும் ஒருங்கே கொண்டமைந்த பதங்கள் கருத்துக் குறிக்கும் பதங்கள் என்றும் இவற்றில் ஒன்றேனும் இல்லாத பதங்கள் கருத்துக் குறியாத பதங்கள் என்றும் கொள்ளப்படுகிறது. இதன்படி தனி விபரணப் பதம் போன்றவை கருத்துக்குறிப்பையும் அகலக் குறிப்பையும் கொண்டிருப்பதால் இவை கருத்துக் குறிக்கும் பதம் என்றும் பண்புப் பதம் தனித்து கருத்தினை வெளிக் காட்டுவதாலும் இடு குறிப் பதம் தனித்து அகலக் குறிப்பைக் கொண்டதாலும் இவை கருத்துக் குறியாப் பதங்கள் ஆகும்.

கருத்துக்குறிப்பிற்கும் அகலக்குறிப்பிற்கும் இடையே உள்ள தொடர்பு

ஒரு பதம் குறிக்கும் பொருளின் இயல்பைக் குறிப்பது கருத்துக் குறிப்பாகும். ஆனால் ஒரு பதம் குறிக்கும் பொருளின் அங்கத்துவங்களைக் குறிப்பது அகலக் குறிப்பாகும். இங்கு கருத்துக் குறிப்பிற்கும் அகலக் குறிப்பிற்கும் இடையே நேர்மாறு தொடர்பு காணப்படும். ஆனால் இவை இரண்டும் எப்போதும் நேர்மாறான தொடர்பைக் கொண்டவை அல்ல.

| உதாரணம்: | கருத்து | அகலம் |
|---|---|---|
| | பிரதமர் | 100 |
| | இலங்கைப் பிரதமர் | 10 |
| | இலங்கையின் தற்போதைய பிரதமர் | 1 |

விதிப்பதமும் மறைப்பதமும்

ஒருங்கிசையாத எண்ணக் கருத்துக்களை வெளிப்படுத்தும் பதங்களே விதிப்பதமும் மறைப்பதமும் ஆகும். இதில் விதிப்பதம் என்பது ஒரு இயல்பை உள்ளதென ஏற்றுக் கொள்ளும் பதமாகும்.

உதாரணம்: வெள்ளை மனிதன் இலாபம்

விதிப்பதத்தில் கூறப்படும் இயல்பினை மறுத்துக் கூறும் பதங்கள் மறைப்பதங்கள் எனப்படும். இப்பதம் இரண்டு வகைப்படும்.

1. எதிர் மறைப் பதம்
2. மறுதலைப் பதம்

எதிர் மறைப் பதம்

விதிப்பதத்தில் கூறப்படும் இயல்பினை வெறுமனவே, அல்ல, அன்று, அற்றது போன்ற சொற்களால் மறுத்துக் கூறும் பதம் எதிர் மறைப் பதமாகும்.

உதாரணம்: வெள்ளை — வெள்ளையன்று
மனிதன் — மனிதனல்ல

எதிர் மறைப் பதமானது ஏனைய பத வகைகளை விட உலகின் முழு அங்கத்துவங்களையும் குறித்துக் கொள்ளலாம். இது ஒரு பதமாகும்.

உதாரணம்: வெள்ளை வெள்ளையன்று என்னும் எதிர்மறைப் பதத்தினால் முழு அங்கத்துவங்களையும் குறித்துக் கொள்ளலாம். இதனால் இது வரம்பில் பதம் எனவும் அழைக்கப்படுகிறது. இப் பதத்திற்கு காணப்படும் வரம்பற்ற தன்மையை மட்டுப்படுத்துவதற்காக 19ஆம் நூற்றாண்டு அளவியல் ஆளர்களின் ஒருவரான டிமோர்கன் என்பவர் உரையாடல் என்ற பதத்தை முன் வைத்தார்.

மறுதலைப் பதம்

விதிப்பதத்தில் கூறப்படும் இயல்பினை மறுப்பதோடு அதற்கு முரணான கருத்தினை உள்ளதெனக் கூறும் பதம் மறுதலைப் பதம் எனப்படும். இப்பதம் வரம்பில் பதமாக அல்லது உரையாடல் உலகுப் பதமாகவோ கொள்ளக் கூடியதல்ல, ஏனெனில் மறுதலைச் சோடியால் உலகின் முழு அங்கத்துவங்களையும், குறிக்க முடியாது.

உதாரணம்: வெள்ளை — கறுப்பு
மனிதன் — மிருகம்
மேடு — பள்ளம்

பண்புப் பதமும் பண்பிப் பதமும்

ஒரு பொருளுக்கு இயல்பினை உடைய பதம் பண்புப் பதம் ஆகும், அவ்வியல்பினை உடைய பொருள் பண்பிப் பதமாகும். இதனை இன்னுமொரு வகை கூறின் பண்பு கொள் எழுவாய் பண்பிப் பதமாகும். இதனால் இவ்விரு பதங்களும் இணைந்த பதங்கள் எனப்படும், ஆனால் இவை இரண்டிற்கும் இடையே வேறுபாடு ஒன்று காணப்படுகின்றது. அதாவது பண்புப் பதத்தைப் பார்க்க முடியாது ஆனால் பண்பிப் பதத்தைப் பார்க்க முடியும்.

| உதாரணம் | பண்பு | பண்பி |
|---|---|---|
| | இளமை | இளைஞன் |
| | மனிதத் தன்மை | மனிதன் |
| | தாய்மை | தாய் |

## தனிப்பதமும் சார்புப் பதமும்

ஒரு பதம் தனது இயல்பினைத் தனித்து வெளிப்படுத்துமாயின் அது தனிப்பதம் எனப்படும்.

உதாரணம்: மனிதன், முக்கோணம், பறவை மரம் ஒரு பதம் தனது இயல்பினை பிறிதொரு பதத்துடன் சார்ந்து வெளிப்படுத்தும் ஆயின் அது சார்புப் பதம் எனப்படும்.

உதாரணம்: தாய் — பிள்ளை
ஆசிரியர் — மாணவர்

## குறைப்பதமும் குறை அல்லாத பதமும்

ஒரு பதம் குறிக்கும் பொருளில் எதிர் பார்க்கப்படும் இயல்பு இல்லாது இருக்கும் ஆயின் அது குறைப்பதம் எனப்படும்.

உதாரணம்: குருடு, நொண்டி, மலடு

ஒரு பதம் குறிக்கும் பொருளில் எதிர் பார்க்கும் இயல்பு இருக்கும் ஆயின் அது குறை அல்லாத பதம் எனப்படும்.

உதாரணம்: தாய்மை, அன்பு, நேர்மை

## சமுதாயப் பதமும் வியாதிப் பதமும்

சமுதாயப் பதம்

ஒத்த அலகுகளைக் கொண்ட ஒரு தொகுதியைக் குறிக்கப் பயன்படும் பதம் சமுதாய பதம் எனப்படும்

உதாரணம்: நூல் நிலையம், பூங்கா மந்திரி சபை

இப்பதமானது 2 வகைப்படும்
தனிப் பொருட் சமுதாயப் பதம்
பொதுச் சமுதாயப் பதம்

I. தனித்து ஒரு தொகுதியை குறிக்கும் சமுதாயப் பதம் தனிப் பொருள் சமுதாயப் பதம் எனப்படும், இப் பதம் தனி இடுகுறி சமுதாயப் பதம் தனி விபரண சமுதாயப் பதம் என 2 வகைப்படும்.

உதாரணம்: இமயமலைத் தொடர்

தனக்குரிய இயல்பினை வெளிக்காட்டும் தனி விபரணப் பதத்துடன் சமுதாயப் பதத்தினைச் சேர்த்துக் கூறுவதால் பெறப்படும் பதம் தனி விபரணச் சமுதாயப்பதம். எவ்வித கருத்தையும் வெளிக்காட்டாத இடுகுறிப்பதத்துடன் சமுதாயப்பதத்தைச் சேர்த்துக் கூறுவதால் பெறப்படும் பதம் தனி இடுகுறிச் சமுதாயப் பதம் எனப்படும்.

உதாரணம்: உலகில் மிக உயர்ந்த மலைத் தொடர்

பொதுச் சமுதாயப் பதம் என்பது எந்த ஒரு தொகுதியைக் குறிப்பிடும், சமுதாயப்பதம் பொதுச்சமுதாயப்பதம் ஆகும்.

நூல் நிலையம் என்ற சமுதாயப் பதத்தினால் உலகில் உள்ள எந்த நூல் நிலையங்களையும் குறித்துக் கொள்ளலாம்.

வியாதிப்பதம் :-

ஒரு பதம் குறிக்கும் வகுப்பில் முழு அங்கத்துவத்தையும் எடுத்துக்காட்டும் பதம் வியாதிப் பதம் எனப்படும்.

பதங்களின் நிறை எழுவாய் பதங்களும் மறைப் பயனிலைப் பதங்களும் தம்மை உள்ளடக்குகின்றன. முழு அங்கத்துவங்களையும் எடுத்துக்காட்டுவதால் அது வியாதிப் பதம் எனப்படும்.

## பதங்களின் தொடர்புகள்

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட தொடர்புள்ளதைக் கொண்டு பதங்களில் தொடர்புகளைப் பின்வருமாறுவகைப் படுத்தலாம்.

I. சமச்சீரான தொடர்பு :

இருபதங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ளும்போது அதாவது A, B என்னும் இருபதங்கள் தொடர்புகொள்ளின் A, Bற்கு உள்ள தொடர்பு B இற்கும் A இற்கும் காணப்படுமாயின் அது சமச்சீரான தொடர்பு எனப்படும்

A ன் சகோதரன் B
∴ B ன் சகோதரன் A

II சமச்சீர் அற்ற தொடர்பு :

A, B ஆகிய 2 பதங்கள் தொடர்பு கொள்ளும் போது Aற்கும் Bற்கும் உள்ள தொடர்பு Bற்கும். Aற்கும் இல்லை எனில் அது சமச்சீர் அற்ற தொடர்பு எனப்படும்.

உதாரணம் : Aன் தம்பி B

ஃ Bன் தம்பி A அல்ல

III. கடந்தேகு தொடர்பு

A, B, C என்ற மூன்று பதங்கள் தொடர்பு கொள்ளும் போது Aற்கும் Bற்கும் உள்ள தொடர்பு B, Cற்கும் காணப்படும் போது A, Cயிற்கும் அதே தொடர்பு காணப்படும் அது கடந்தேகு தொடர்பு எனப்படும்.

உதாரணம் : Aயின் சகோதரன் B

Bயின் சகோதரன் C

Cயின் சகோதரன் A

IV. கடந்தேகா தொடர்பு :

A, B, C என்ற 3 பதங்கள் தொடர்பு கொள்ளும் போது A, Bற்கும் உள்ள தொடர்பு B, Cற்கும் காணப்படும் போது A, Cற்கும் இல்லை எனில் அது கடந்தேகா தொடர்பு எனப்படும்.

உதாரணம் : A யின் தந்தை B

B யின் தந்தை C

ஃ A யின் தந்தை C அன்று

V. சமச்சீரான கடந்தேகு தொடர்பு :

A, B, C என்னும் மூன்று பதங்கள் தொடர்பு கொள்ளும்போது A, Bற்கும் உள்ள சமச் சீரான தொடர்பு B, Cற்கும் காணப்படும் போது அதே சமச்சீரான தொடர்பு A, Cற்கும் காணப்படின் அதுசமச் சீரான கடந்தேகு தொடர்பு எனப்படும்.

உதாரணம் ; A யின் நண்பன் B

B யின் நண்பன் C

ஃ A யின் நண்பன் C அன்று

VI சமச்சீரான கடந்தேகா தொடர்பு :

A, B, C என்ற பதங்கள் தொடர்பு கொள்ளும் போது A, Bற்கும் உள்ள சமச் சீரான தொடர்பு B, C ற்கும் காணப்படும் போது A, Cற்கும் அதே சமச்சீரான தொடர்பு காணப்படாவிடின் அது சமச் சீருள்ள கடந்தேகா எனப்படும்

உதாரணம் : A யின் நண்பன் B

B யின் நண்பன் C

ஃ A யின் நண்பன் C அன்று

VII சமச்சீரற்ற கடந்தேகு தொடர்பு..

A, B, C என்றமூன்று பதங்கள்தொடர்பு கொள்ளும் போது A Bற்குள்ள சமச் சீரற்ற தொடர்பு B Cற்கும் காணப்படும் போது அதே சமச்சீரற்ற தொடர்பு A Cற்கு மிடையே காணப்படுமாயின் அது சமச் சீரற்ற கடந்தேகு தொடர்பு எனப்படும்.

உதாரணம் : A யின் சகோதரன் B

B யின் சகோதரன் C

ஃ A யின் சகோதரன் C

ஆவான்

VIII சமச்சீரற்ற கடந்தேகா தொடர்பு,

A, B, C என்ற மூன்று பதங்கள் தொடர்பு கொள்ளும் போது A Bற்குள்ள சமச்சீரற்ற தொடர்பு B Cற்கு இடையே காணப்படும்போது அதே சமச்சீரற்ற தொடர்பு A Cற்கு இடையே காணப்படா விடின் அது சமச் சீரற்ற கடந்தேகா தொடர்பு எனப்படும்

உதாரணம் : A யின் தந்தை B

B யின் தந்தை C

ஃ A யின் தந்தை C அன்று

# காலத்தொடர் பகுப்பாய்வில் பருவகால மாறலும் அதனைக் கணிப்பிடும் முறைகளும்
# The Time Series Analysis and Seasonal Variation and Calculation Methods


சில்வேனியா சிங்கராயர்

98 வர்த்தகப் பிரிவு


ஒரு மாறியானது கால வேறுபாடுகளுக்கேற்ப பல பெறுமானங்களை எடுக்கலாம். குறிப்பிட்ட நேரத்தில் அல்லது கால இடைவெளியில் அம்மாறி கொள்ளும் பெறுமானங்களை ஒரு வரிசையில் அமைத்து பெறப்படும் தொடரே காலத் தொடர் எனப்படும்.

ஒரு காலத்தொடரில் உள்ள பெறுமானங்களை ஆராய்ந்து அவற்றின் போக்கை அறிவதே எமது நோக்கமாகும். இவ்வாறான காலத்தொடரின் போக்குகளைப் பிரித்தாராயும் வழிகளில் பருவகால மாறலும் ஒன்றாகும்.

## பருவகால மாறல் [Seasonal Variation]

குறுங்கால அடிப்படையில் காலத் தொடர்த் தரவுகளை உற்று நோக்கும்போது ஒரே விதமான ஏற்ற இறக்கங்களை கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். இத்தன்மையே பருவகால மாறல் எனப்படுகிறது.

இது குறுங்கால அடிப்படையில் காலத் தொடர்த்தரவுகளை உற்று நோக்குவதனால் குறுங்கால மாறல் எனவும் அழைக்கப்படுகிறது.

உ+ம்:-

அரிசியின் விலைகளை 4,5 வருடங்களுக்கு எடுத்துப் பார்க்கும் போது ஒவ்வொரு ஆண்டும் முதல் காலாண்டுப் பகுதிகளில் குறைந்தும் ஏனைய காலண்டுப் பகுதிகளில் அதிகரிக்கக் கூடியதாக இருக்கும். இத்தன்மை பருவகால மாறல் எனப்படும்.

## பருவகால மாறல்களை அறிதல் அல்லது விடாய் ஆய்வு

பெறப்பட்ட காலத்தொடர் ஒன்றினது பருவகால மாறல்கள் பின்வரும் முறைகளில் அறியப்படலாம்.

1. எளிய சதவீதமுறை அல்லது எளிய சராசரி சதவீத முறை
   Simple percentage Method or Simple Average percentage Method
2. நகரும் சராசரி சதவீதமுறை அல்லது நகரும் சராசரி விகித முறை
   Moving Average percentage Method or Ratio Moving Average percentage Method

## எளிய சதவீத முறை மூலம் பருவகால மாறல்களை அறிதல்

இம்முறையில் பருவகால மாறல்களை அறிவதற்குப் பின்வரும் படிமுறைகளுக்கமைய அணுகப்படவேண்டும்.

1. தரப்பட்ட காலத்தொடர்களைப் பருவகால ரீதியாக வகைப்படுத்தப்படவேண்டும்.
2. பருவகாலங்களுக்குரிய மொத்தங்கள் அறியப்படவேண்டும்.
3. ஒவ்வொரு பருவகாலங்களுக்குரிய சராசரி காணப்படவேண்டும்.
4. இச்சராசரிகளைக் கொண்டு பொதுச் சராசரி அறியப்படவேண்டும்.
5. ஒவ்வொரு பருவகாலங்களுக்குரிய பருவகாலச் சுட்டி அல்லது பருவகால மாறல் பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிக்கப்படும்.

$$\text{பருவகால மாறல்} = \frac{\text{பருவகால சராசரி}}{\text{பொதுச் சராசரி}} \times 100$$

உதாரணம்:

3 ஆண்டுகளில் காலாண்டுகள் தோறும் பொருளொன்றின் விலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பின்வருமாறு.

| ஆண்டுகள் | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| 1990 | 10 | 12 | 18 | 20 |
| 1991 | 17 | 24 | 36 | 31 |
| 1992 | 21 | 21 | 30 | 36 |
| மொத்தம் | 48 | 57 | 84 | 87 |
| சராசரி | 16 | 19 | 28 | 29 |

$$\text{பொதுச் சராசரி} = \frac{\text{மொத்தச்சராசரி}}{\text{காலாண்டுகள்}}$$

$$= \frac{92}{4}$$

$$= 23$$

ஆகவே

$$\text{பருவகாலச்சுட்டி} = \frac{\text{பருவகாலச்சராசரி}}{\text{பொதுச்சராசரி}} \times 100$$

$$S_1 = \frac{16}{23} \times 100$$

$$= 69{\cdot}5\%$$

$$S_2 = \frac{19}{23} \times 100$$

$$= 82{\cdot}6\ \%$$

$$S_3 = \frac{28}{23} \times 100$$

$$= 121{\cdot}7\ \%$$

$$S_4 = \frac{29}{23} \times 100$$

$$= 126{\cdot}08\ \%$$

**நகரும் சராசரி சதவீத முறை மூலம் பருவகால மாற்றங்களைக் காணல்**

காலத் தொடர் ஒன்றானது பெருக்கல் வடிவத்தில் காணப்படும் போது பருவகால மாறலை அறிவதற்கு இம்முறை பயன் படுத்தப்படுகிறது. இம்முறையில் பருவகால மாறல் பின்வரும் படிமுறையில் கணிக்கப் படும்.

1. பொருத்தமான நகரும் சராசரியை பயன்படுத்திப் போக்கு, பெறுமானம் அறியப்படும்.
2. உண்மைப் பெறுமானம் Yற்கும் நகரும் சராசரிப் பெறுமானம் Tற்குமான விகிதத்தை சதவீதத்தில் $\frac{Y}{T} \times 100$ கணிக்கப்படும்,
3. கணிக்கப்பட்ட இப்பெறுமானங்களைக் கொண்ட விகித அட்டவணை தயாரிக்கப்படும்.
4. இவ்வட்டவணையிலிருந்து பருவகாலங் களுக்குரிய மொத்தங்கள் அறியப் பட்டு சராசரி கணிக்கப்படும்.

5. இச்சராசரிகளில் இருந்து பொதுச்சராசரி அறியப்பட்டு பருவகால சராசரிக்கும் பொது சராசரிக்குமிடையே உள்ள விகிதத்தின் சதவீதமாற்றம் கணிக்கப்படும். இச்சதவீத மாற்றல்களே பருவகால மாற்றம் எனப்படும்.

உதாரணம்: பின்வரும் தரவுகளை அவதானித்து நகரும் சராசரி விகித முறை மூலம் பருவகால மாறலைக் காண்க.

| ஆண்டுகள் | காலாண்டுகள் | | | |
|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 |
| 1988 | 68 | 62 | 61 | 63 |
| 1989 | 65 | 58 | 66 | 61 |
| 1990 | 68 | 63 | 63 | 67 |

| ஆண்டு | | Y | 4 qYr. M. T | 4 q Yr.C.M.T | 4 qYr.M.A | $\frac{Y}{T} \times 100$ |
|---|---|---|---|---|---|---|
| 1988 | 1 | 68 | — | — | — | — |
| | 2 | 62 | 254 | — | — | — |
| | 3 | 61 | 251 | 505 | 61.125 | 96·94 |
| | 4 | 63 | 247 | 498 | 62·25 | 101·2 |
| 1989 | 1 | 65 | 252 | 499 | 62·375 | 104·2 |
| | 2 | 58 | 250 | 502 | 62·75 | 92·41 |
| | 3 | 66 | 253 | 503 | 62·875 | 104·9 |
| | 4 | 61 | 258 | 511 | 63·875 | 95 51 |
| 1990 | 1 | 68 | 255 | 513 | 64·125 | 106·04 |
| | 2 | 63 | 261 | 516 | 64·5 | 97·66 |
| | 3 | 63 | — | — | — | — |
| | 4 | 67 | | — | — | — |

விகித அட்டவணை

| ஆண்டு | காலாண்டு | | | |
|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 |
| 1988 | — | — | 96·94 | 101·2 |
| 1989 | 104·2 | 92·41 | 104·9 | 95·51 |
| 1990 | 106·04 | 97·66 | — | — |
| மொத்தம் | 210·24 | 190·07 | 201·84 | 196·71 |
| சராசரி | 105·12 | 95·03 | 100·92 | 98·35 |

பொதுச் சராசரி $= \frac{399 \cdot 43}{4}$

$= 99 \cdot 85$

பருவகாலச் சுட்டி $= \frac{\text{பருவகாலச்சராசரி}}{\text{பொதுச்சராசரி}} \times 100$

$Q_1 = \frac{105 \cdot 12}{99 \cdot 85} \times 100$

$= 105 \cdot 3\%$

$Q_2 = \frac{95 \cdot 03}{99 \cdot 85} \times 100$

$= 95 \cdot 16\%$

$Q_3 = \frac{100.92}{99 \cdot 85} \times 100$

$= 101 \cdot 04\%$

$Q_4 = \frac{98 \cdot 35}{99 \cdot 85} \times 100$

$= 98 \cdot 5\%$

ஆகவே இத்தரவுகளுக்கான பருவகால மாறல்கள் முறையே 105·3%, 95·16%, 101·04%, 98·5% ஆகும்.

# தமிழ் — க. பொ. த( உயர்தரம்) புதிய பாடத்திட்டம்
## — ஒரு மாணவியின் கண்ணோட்டம் —

சுகன்யா வைற்றஸ்
97 கலைப்பிரிவு

### முகவுரை

"கற்க கச  க் கற்பவை கற்றபின்
நிற்க அ  ருத் தக"

இது வள்ளுவன் வாக்கு. எந்தக் கல்விக்கும் ஏதாவது நோக்கம் இருக்கும். பயன்பாடு இருக்கும். இதற்கு எதுவும் விதிவிலக்கல்ல. இந்த ரீதியில் க. பொ. த. உயர்தரத்தில் கலைப்பிரிவில் ஒரு பாடமாக இருக்கும் தமிழைப்பற்றிய ஒரு கண்ணோட்டம், நோக்கு இப்பகுதியில் மேற்கொள்ளப்படுகின்றது. இதை இன்னும் விளக்கமாகச் சொன்னால், அண்மையில் அறிமுகப் படுத்தப்பட்ட புதிய 'பாடத்திட்டம்' மாணவர்களுக்குப் பொருத்தமானதா? பயனுள்ளதா ? என ஆராய்வதே இதன் நோக்கம்.

அதற்கு முன், இப்புதிய தமிழ்ப் பாடத்திட்டம் என்ன நோக்கத்தைக் கொண்டுள்ளது எனப் பார்க்கவேண்டியது அவசியம். புதிய பாடத்திட்டத்தில் எல்லாமாக 9 புத்தகங்கள். அவைகள் பொதுவாக, பின்வரும் நோக்கங்களைக் கொண்டுள்ளது.

1. மொழிவழியாகத் தெளிவான சிந்தனையை மேற்கொள்ளவும், விளங்கிக் கொள்ளவும் தொடர்பாடலுக்கு வேண்டிய திறன்களையும், அவை பற்றிய அறிவினையும் பெறுவதுடன், தொடர்புச் சாதனங்களுக்குரிய மொழியாகத் திறனை அறிந்து வளர்த்தல்.

2. மொழி, இலக்கிய வழிவரும் மானுட, பண்பாட்டு விழுமியங்களை இனங்கண்டு கொள்வதுடன், இலக்கியத்தைச் சுவைக்கவும், விமர்சனம் செய்யவும் வேண்டிய ஆற்றலை வளர்த்தல்.

3. கட்டுரை, நாவல், சிறுகதை போன்றவை ஆக்கும் திறனை விளங்கிக்கொள்வதுடன் அடிப்படை இலக்கண அறிவைப் பெறல்.

4. ஒரு மாணவன் தமிழில் குறைந்த பட்சமாவது பரந்த அறிவைப் பெறல். இந்த நோக்கங்களை மையமாகக் கொண்டுள்ள புதிய பாடத்திட்ட தமிழ் மொழியின் அம்சங்களைக் கூறமுன், பழைய பாடத்திட்டத்தைப்பற்றிச் சற்றுக் கூறுவது பொருத்தமாக இருக்கும்.

பழைய பாடத்திட்டத்திற்கு அமைவாகக் கற்பிக்கப்பட்டு வந்த தமிழ் நூல்களில் குறை எதுவும்இல்லை. பொதுவாக அது சிறந்ததே. அதில் ஒவ்வொரு பகுதியும் ஆழமாகவே கற்பிக்கப்படுகிறது. இலக்கணம், இலக்கியம் இரண்டிலும் மாற்றம் இல்லை. ஆனால், ஏனைய பாடப் புத்தகங்கள் அடியோடு மாறியுள்ளன.

பழைய பாடத்திட்டத்தில் கற்பிக்கப்பட்ட இலக்கியவழி, ஆசியஜோதி, இரட்சணிய யாத்திரிகம், திருக்குறள் (இல்லறவியல்) போன்ற புத்தகங்கள் ஒவ்வொன்றும் ஆழமாகக் கற்பிக்கப்பட்டு வந்தது. இக்குறிப்பிட்ட புத்தகங்களை வினாத்தாள்களின் வினா மாற்றங்களுக்கு ஏற்றவாறு மாணவர்கள் தயார் செய்து பரீட்சை எழுதி வந்தார்கள். ஆனால் இம்மாணவர்களில் பலபேரிடம் இப்பகுதிகள் தவிர தமிழில் வேறு பகுதிகள் பற்றிக் கேட்டால் ஆழமான பதில்கள் அவர்களிடம் இருந்து வரத்தயங்குகின்றது என்பதுதான் சற்றுச் சிந்திக்கவேண்டிய விடயம். இந்த

ரீதியில் புதிய பாடத்திட்டம் விஸ்தாரமான முறையில் வந்து சேர்ந்ததென்றால் அதில் வியப்பில்லை.

புதிய பாடத்திட்டம் பரவலானது. பரந்த அறிவையும், ஆழமான அனுபவத்தையும் தரக்கூடியது என்றால் அதை உணர்ந்து கற்றயாருமே மறுக்க மாட்டார்கள். இலக்கணம், இலக்கியம் தவிர புதிதாக 'ஈழத்து இலக்கிய வரலாறு' என்ற பகுதி, அறிமுகப் படுத்தப்பட்டமை வரவேற்கத்தக்கது. இதை விட செய்யுட்கோவை, கம்பராமாயணம், சிறுகதைத் தொகுப்பு, உரைநடைக்கோவை, நாகம்மாள் நாவல், பாரதியார் பாடல், திருக்குறள் (ஒழிபியல்) போன்ற புத்தகங்கள் பழைய பாடத்திட்டத்திற்கு முற்றிலும் புதியவை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாணவனுக்கும் தனிப்பட்ட அறிவை இல்லாமல் பரந்த அறிவினைத் தருகிறது என்பது தான் ஆச்சரியமான விடயம். இதைப் பொதுவாகப் பார்ப்பதை விடத் தனித்தனியாகப் பார்ப்பது பயனுடையதாக இருக்கும்

'ஈழத்து இலக்கிய வரலாறு' என்பது தனியான ஒரு பகுதி. இதில் இலங்கையில் இலக்கியம் வளர்ந்த விதம், இங்கே எழுந்த இலக்கியங்கள் என்பன பற்றிக் கூறப் படுகிறது. ஆரியர் ஆட்சிக்காலத்தில் இருந்து 20ஆம் நூற்றாண்டு வரையான இலக்கிய வளர்ச்சி அதாவது 'இலங்கை இலக்கிய வளர்ச்சி' ஆதாரங்களுடன் அதில் கற்பிக்கப்படுகின்றது. இது கற்பதற்கு இலகுவானது என்பதனை விட 'இலங்கையில் இலக்கியம் வளர்ந்ததா?' என்று பழைய பாடத்திட்ட மாணவர்களைப்போல் நினைக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்தவகையில் இப்பகுதி தமிழிற்கு ஒரு வரப்பிரசாதம். தமிழ் கற்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் இப்பகுதி ஒரு புதிய ஆனால் மிகவும் பரந்த அறிவைத் தரும் என்பதில் மிகையில்லை.

தமிழ் புதிய பாடத் தொகுதிகளில் முக்கியமான ஒன்று, 'செய்யுட் கோவை' சங்க காலம் முதல் 20ஆம் நூற்றாண்டுவரை எழுந்த குறிப்பிட்ட இலக்கியங்களில் சில பகுதிகள் கோர்க்கப்பட்ட இக் கோவை ஒரு சிறந்த பகுதி. இதில் இருக்கின்ற ஒவ்வொரு பகுதியிலும் மிகச் சிறந்த கவிநயத்தோடு கூடிய பாடல்கள் இருக்கின்றன. இப் புத்தகத்தைக் கற்கின்ற மாணவர்களுக்கு ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு விதமான அறிவையும், உணர்வையும் தருகின்றது என்றால் வியப்பில்லை. புறநானூறில் வருகின்ற பாடல் வீர உணர்வைத் தருகின்றதென்றால், நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகையில் இருந்து எடுக்கப்பட்ட பாடல்கள் அக்காலத்தில் காதலுக்கு இருந்த சிறப்பினைப் புலப்படுத்துகிறன. சிலப்பதிகாரம் இளங்கோ அடிகளின் கவியாற்றலையும், சொல் வீச்சையும் புலப்படுத்தும் அதே வேளை திருவாசகமும், நாச்சியார் திருமொழியும் தெவிட்டாத பக்திச் சரங்களாக இருக்கின்றன. திருக்குற்றாலக் குறவஞ்சியில் இருந்து எடுக்கப்பட்ட பகுதியும், இராம நாடக கீர்த்தனையும், ஏனைய கால இலக்கியங்கள் மத்தியில் நாயக்கர் கால இலக்கியத்தின் சுவைச் சிறப்பையும் ஓசை நயத்தையும், ஒரு மாணவனுக்குத் தெளிவாகப் புரிய வைக்கின்றன. இவற்றோடு, சி. வி. வேலுப்பிள்ளை, பிச்சமூர்த்தி, கம்பதாசன், பாரதி, பெரியதம்பிப்பிள்ளை, அண்ணல் போன்றவர்களின் சிறந்த கவிதைகளும் இதில் கோர்க்கப்பட்டுள்ளன. குறுந்தொகையில் வருகின்ற ஒரு பாடலை நயக்கும் ஒரு மாணவன் சி. வி. வேலுப்பிள்ளையின் கவிதையையும், பிச்சமூர்த்தியின் புதுக்கவிதையையும் நயப்பான். இதுதான் செய்யுட் கோவையின் சிறப்பு.

அடுத்து இடம் பெறும் முக்கியபுத்தகம் கம்பர் கைவண்ணத்தில் எழுந்த கம்பராமாயணத்தில், 'திருவடி ஆட்டுப் படலம்' உண்மையில் புதிய பாடத் திட்ட தமிழ் மொழி (உயர்தரம்) கற்கும் மாணவர்களைக் கேட்டால், திருவடி ஆட்டுப் படலக் கதையை ஒவ்வொருவரும் நயத்துடன் புட்டுப்புட்டு வைப்பார்கள். அவ்வளவிற்கு

எல்லோர் மனத்தையும் கவர்ந்த, எல்லோராலும் விரும்பிக் கற்கப்பட்ட புத்தகம் இது. இப்புத்தகத்தில் எல்லாமே சிறப்புத்தான்.

உவமையா? உருவகமா? நயமா? கவிநடையா? எதுகை மோனையா? எல்லாமே இதைப் படிக்கும்போது ஒரு வியப்புடன் எம்மனதில் பதிகின்றது. கவிச்சக்கரவர்த்திதான் கம்பர் என்று பல மாணவர்களும் ஒத்துக்கொண்டு உணர்ந்து இதைப் படித்திருக்கிறார்கள். இது அனுபவம்.

புதிய பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இன்னுமொரு வித்தியாசமான அம்சம் சிறுகதைத் தொகுதி. புதுமைப்பித்தன், கு. ப. இராஜகோபாலன், கு. அழகிரிசாமி போன்ற இந்திய எழுத்தாளர்களினதும், சி. வைத்திலிங்கம், இலங்கையர்கோன் போன்ற ஈழத்து எழுத்தாளர்களினதும் சிறந்த ஐந்து சிறுகதைகளையும் தேர்ந்தெடுத்து கோர்க்கப்பட்ட ஒரு சிறிய புத்தகம் இது. என்றாலும் இது தரும் அறிவு பிரமாதம். ஒவ்வொரு கதையையும் சுவைத்து வாசிக்கும் அதேவேளை ஒவ்வொரு கதாசிரியர்களினது நடைக்கும், திறமைக்கும் இடையிலான வேறுபாட்டையும் உணர்ந்து கொள்ளலாம். 'சிறுகதை' என்றால் என்ன? என்பதைப் புரிந்துகொள்ளலாம். அத்துடன் இதைக் கற்பதனால் சிறுகதைகளைப் படிக்கும் ஆர்வமும், அவற்றை ஆக்கும் திறமையும் மாணவர்களுக்கு ஏற்படுகிறது. அந்த வகையில் இதுவும் புதிய பாடத்திட்டத்தில் வரவேற்கக் கூடிய ஒரு அம்சமே.

உரைநடைக் கோவையும் ஒரு பாடத்தொகுதி. இதில் பல்வேறுபட்ட ஆசிரியர்களின் உரைநடைகள் தரப்பட்டு இருக்கின்றன. இதனைப் படிக்கும் மாணவர்கள் பல்வேறு உரைநடை ஆசிரியர்களின், உரைநடைகளையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் இந்தப் பரந்த தன்மை பழைய பாடத்திட்டப் புத்தகங்கள் எதிலுமே இல்லை. அவர்களிடம் பாரதியினதும், மறைமலை அடிகளினதும் உரைநடைகளுக்கு இடையிலான வேற்றுமைகள் கேட்டால்? தெரியாது. ஆனால், புதிய பாடத்திட்டக் கலைப்பிரிவு மாணவர்களுக்கு விரும்பியோ, விரும்பாமலோ இவை அத்துப்படி.

அடுத்து இன்னுமொரு முக்கியமான புத்தகம் 'நாகம்மாள் நாவல்' இது ஒரு பெரிய நாவல், 'நாகம்மாள்' என்ற பெண்ணே இதில் முக்கிய பாத்திரம். இதன் மூலம் சமூக விழிப்புணர்வையும், பிரச்சனையையும், மூடநம்பிக்கைகளின் விளைவையும் எடுத்துக்காட்ட முனைகின்றார் ஆசிரியர். இதைப் படிக்கும் ஒரு மாணவன் நாவல் என்றால் என்ன என்பதை அறிவதோடு, நாவல்களில் காணப்படும் குறை, நிறைகளையும், அதன் அமைப்பு ரீதியான அறிவையும் இலகுவில் இனங்கண்டு கொள்கின்றான். 'கதை' என்ற ரீதியில் இதனைப் படிக்கும்போது இதன் ஒவ்வொரு வார்த்தைகளும், சம்பவங்களும் எம் மனங்களில் இலகுவில் பதிந்து விடுவதும் இதிலுள்ள முக்கிய அம்சம்.

அடுத்துச் சிறந்த பலராலும் அனுபவித்துப் படிக்கப்பட்ட எல்லோரும் இலகுவில் மனனம் பண்ணக்கூடிய வாழ்க்கைக்கு என்றும் கை கொடுக்கக்கூடிய 'பாரதியார் பாடத் தொகுதிகள்' புதிய பாடத் தொகுதியில் இடம் பெறுகின்றது. இதில் பாரதியாரின் தெய்வீகம், சமூகம், தேசியம், தத்துவம் சம்பந்தமான 10 பாடல்கள் இத்தொகுதியில் அடங்கும். இதில் ஒவ்வொரு பாடல்களும் ஒவ்வொரு முத்து, பல ஆழமான கருத்துக்களைக் கொண்ட கலைப் பொக்கிஷம். இதைப் படிக்கும்போது பாரதியின் கவியாற்றலை வியக்கத் தோன்றுகிறது, என்பதுடன் இப்பாடத் தொகுதிக்கு வரும் வினாக்களிற்கு இலகுவாக விடையளிக்கவும் முடியும்.

இறுதியாகத் திருக்குறள், புதிய பாடத் திட்டத்திற்கு அமைவாக 'ஒழியியல்' என்ற தலைப்பில் 10 அதிகாரங்களுடன் 100 பாடல்களைக் கொண்ட இப்புத்தகமும் வள்ளுவரின் கைவண்ணத்தில் பல அரிய கருத்துக்களை அள்ளி வழங்குகின்றது.

இவை எல்லாமாக இலக்கியம் 'இலக்கணம்' சேர்த்து ஒன்பது புத்தகங்கள் புதிய பாடத் தொகுதியில் இடம் பெறுகின்றன. இவற்றில் ஒவ்வொன்றிலும் பரந்த கருத்துக்கள் உதிரிப்பூக்களாக இணைக்கப்பட்டுள்ளதால், பரந்த அறிவினைப் பெற முடிகிறது. புதிய பாடத் திட்டத்திற்கு அமைவாகத் தமிழ் கற்ற மாணவர்கள் மாணவிகளிடம் கவிதை, செய்யுள், உரைநடை, சிறுகதை, நாவல் இவற்றோடு எல்லா இயக்கியங்கள் பற்றிய ஒரு பொது அறிவு என்பவற்றை எதிர்பார்க்கலாம். இது பரந்த அறிவில்லாமல் என்ன?

இதைவிடப் பயன் தரக்கூடியதாகத் தமிழ்ப் பாடத்திட்டத்தினை மாற்ற முடியாது என்பது என் கருத்து. மேலும் பழைய பாடத்திட்டம் சிறந்ததாக, ஆழமானதாக இருந்தாலும் அதில் இந்தப் பரந்த அறிவு இல்லை. குறிப்பாக ஈழத்து இலக்கிய வரலாறு' 'உரைநடைக் கோவை' போன்ற வித்தியாசமான பாடப்புத்தகங்கள் அதில் இல்லை.

புதிய பாடத் திட்டத்தினை காலத்துக்குக் காலம் ஏற்படும் மாற்றல்கள், தேவைப்பாடுகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு தமிழ் அறிஞர்கள் ஆராய்ந்து, தெரிவு செய்து, வடிகட்டி அவற்றுட் சிறந்ததைத் தெரிவு செய்து மாணவச் செல்வங்களுக்குத் தந்து உதவியுள்ளார்கள் என்பதனையும், அதனைப் பரீட்சை கருதிப் படித்தாலும் அவை மாணவர்களின் தமிழ் அறிவை மேம்படுத்துவதுடன் அவர்களின் வாழ்க்கைக்கும் வழிகாட்டியாக இருக்கின்றது என்பதையும் மறுத்துவிடவே முடியாது.

புதிய பாடத்தில் தமிழ்ப் புத்தகங்களை கற்கும்போது அவை சம்பந்தமான புத்தங்களைக் குறிப்பாக கம்பராமாயணம், சிலப்பதிகாரம், புறநானூறு' புதுக்கவிதைத் தொகுதி, 'பாரதி பாடல் போன்றவற்றை வாசிக்க ஆர்வம் மாணவர்களிடம் எழுகின்றது. கட்டுரைகள் ஆக்கும்போது அவர்கள் கற்ற செய்யுட்களும், உரைநடைகளும், கருத்துக்களும் கைகொடுக்கின்றன. எனவே தமிழைப் பொறுத்தவரையில் ஒரு மாணவன் தன்னை அறியாமல் தமிழ் பற்றிய பரந்த அறிவைப் பெறுவதால் புதிய பாடத் திட்டம் தமிழில் பொருத்தமானது; பயனுடையது என்பதை யாராலும் மறுக்க முடியாது. தமிழில் பெறுபேறுகள் குறைந்தாலும், அதற்கும் அப்பாற்பட்டுப் பரீட்சை சரிவரச் செய்யாத ஒரு 'நவீன' மாணவன் சிலப்பதிகாரம், கம்பராமாயணம், குறுந்தொகை, கலித்தொகை, உரைநடை, ஈழத்து தமிழ் இலக்கியம் போன்றவற்றை அறிந்திருக்கிறான் என்பதுதான் யதார்த்தம்.

புதிய பாடத்திட்ட வினாத்தான் அமைப்பும் வரவேற்கத்தக்கதே. இலக்கண வினாக்கள் தான் சற்றுக் கடினமானவை. சிந்திக்கத் தூண்டுபவை.

மற்றப்படி எல்லாப் புத்தகங்களையும் சரிவரக் கற்றால் வினாக்களுக்கு உரிய முறைப்படி விடையளிக்க முடியும். இந்த ரீதியில் பார்த்தால் புதிய பாடத்திட்டம் தமிழிற்குப் பொருத்தமானதே.

## முடிவுரை

புதிய பாடத்திட்டத் தொகுதிகளை அமைத்துத் தந்த தமிழ் அறிஞர்கள் தமிழ் இலக்கியத்தில் எழுந்த சிறப்பான இலக்கியங்களைத் தெரிவுசெய்து ஒவ்வொன்றையும் ஆராய்ந்து வடிகட்டி, அதிலும் சிறப்பானவற்றையே அமைத்துத் தந்திருக்கிறார்கள் என்பது இதனைப் படிக்கும்போது புரிகின்றது. அவர்கள் எதிர்பார்ப்பது தமிழில்

$\frac{80}{100}$ வீதமான 'A' ஐ அல்ல, அதை மட்டுமல்லாமல் ஒரு மாணவன் ஒரு மாணவி தமிழில் குறைந்த அளவாவது பரந்த அறிவைப் பெறவேண்டும், முன்னோர்களின் ஆற்றலைப் புரிந்து கொள்ளவேண்டும் என்பதையும்தான். இந்தவகையில் அவர்கள் வெற்றி அடைந்து இருக்கிறார்கள் என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் மாணவர்கள் பரீட்சைக்காக இவற்றை எல்லாம் படித்தாலும் அது அவர்களது அறிவினையும் மேம்படுத்துகிறது. இலக்கியங்களைத் தேடி எடுத்து வாசிக்க நேரமோ, ஆர்வமோ இல்லாத இக்காலகட்டத்தில் அவர்கள் அதனை ஓரளவாவது படித்தே தீரவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாவது வரவேற்கக்கூடிய ஒன்றுதான். அத்துடன் இப்புதிய பாடத்திட்டம் தமிழைப்பொறுத்தவரையில் மாணவர், மாணவிகளின் வாழ்நாள் முழுவதற்கும் துணையாக இருக்கும் என்பதை மறுக்க முடியாது.

வினாத்தாளைப் பொறுத்தவரையில் 1997ஆம் ஆண்டு பரீட்சை எடுத்த கலைப்பிரிவு மாணவர்கள் வினாத்தாள் அமைப்பை புதிதாக எதிர்கொண்டமையால் சற்று சிரமப்பட்டார்கள். மற்றப்படி இனி அக்குறையும் தீர்ந்தமையால் தமிழிற்குப் புதிய பாடத்திட்டம் பொருத்தமானது என்ற புதியபாடத் திட்டத்திற்கு அமைவாகத் தமிழ்ப் பரீட்சை எடுத்த என்னைப் போன்ற மாணவ மாணவிகளின் கண்ணோட்டப் சரியானதுதான்.

### உசாத்துணை நூல்கள் :

1. க. பொ. த. (உயர்தர) புதிய பாடத் திட்டக் கைந்நூல்.
2. தமிழ் (உயர்தர) புதியபாடத் தொகுதிப் புத்தகங்கள்.


### ஶ்ரமா றக்ஷணய-குழந்தை நலன் காப்புறுதித் திட்டம்

இந்நாட்டின் எதிர்காலப் பரம்பரையினராகிய குழந்தைகளின் கல்வித் தேவைக்கு வேண்டிய பணவசதியை ஏற்பாடு செய்து அவர்களின் எதிர்காலம் ஒளிமயமானதாக அமைய காப்புறுதித் துறையில் முன்னனி வகிக்கும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இவ் "ஶ்ரமா றக்ஷணய" எனும் குழந்தை நலன் காப்புறுதியை அறிமுகப் படுத்தியுள்ளது

# கத்தோலிக்க விவிலியத் தொகுப்பில் சேராத மறைவு நூல்கள்

சஜினி குணநாயகம்
98 கலைப்பிரிவு

வேதாகமம் என்பது பல்வேறுபட்ட கால சூழ்நிலையில், பல்வேறுபட்ட ஆசிரியர்களால் இறை ஏவுதலையும் இறைவெளிப்பாட்டையும் கொண்டு எழுதப்பெற்ற நூல்கள் வேதாகமம் எனப்படும். கத்தோலிக்க வேதாகம நூலிற்கும் பிரிவினைச் சகோதரர்களின் வேதாகம நூலிற்கும் இடையில் பாரிய வேறுபாடு உண்டு. இவ்வாறு கத்தோலிக் வேதாகமத்தினைச் சேராத நூல்களை,''அப்பாகிரிபா'' என்று கிரேக்கசொல்லில் அழைப்பர். இச் சொல்லின் பொருள் மறைந்த அல்லது புனைந்த எனும் பொருளாகும். எனவே இந் நூல்களை மறைவு நூல்கள் என அழைப்பர்.

மறைவு நூல்களின் இலக்கிய மரபினை நோக்கும்போது யேசுவின் வாழ்க்கை வரலாற்றை உலகிற்குத் தெளிவான முறையில் அறிவிக்க எழுதப்பட்டன. வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு வர்ணிக்கும் தன்மையும் மிகைப்படுத்திக் கூறும் தன்மையையும் கொண்டுள்ளது. ஆனால் நற்செய்தி நூல்கள் உலகிற்கு மீட்பின் செய்தியைப் பறைசாற்ற எழுதப்பட்டன. இப் பண்புகளைப் புரிந்துகொள்ளும் போது மறைவு நூல்களைத் தெளிவாக இனங்காண முடியும்.

இவை ஏன் மறைநூலில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை, எனப் பார்க்கும் போது இவை அப்போஸ்தலர் வழிவராத நூல்களான படியால், அத்தோடு பரிசுத்த ஆவியின் வல்லமையால் எழுதப்படவில்லை என்பதாலும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. ஆனாலும் சில உண்மையில் கத்தோலிக்க மரபோடு சம்பந்தமுடையவை என்பதும் மறுக்க முடியாத உண்மை. திருச்சபை மறைவு நூல்களை விவிலியத்தில் சேர்க்காது விட்டாலும் அவற்றிற்கான முக்கியத்துவத்தையும், மதிப்பையும் கொடுக்கத் தவறவில்லை. இவை தெய்வீக மறைபொருளைக் கொண்டிராது விடினும் உண்மையான பாரம்பரியத்தைக் கொண்டு முதல் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், பண்பாட்டையும், எண்ணத்தையும் ஓரளவிற்குப் புரிந்து கொள்ளலாம்.

இனி மறைவு நூல்களின் வகைகளைப் பார்க்கின்,

பழைய ஏற்பாட்டில் மறைவு நூல்கள்
- காட்சிகள் அடங்கிய மறைவு நூல்கள்
- வரலாற்று மறைவு நூல்கள்
- போதனை மறைவு நூல்கள்.

புதியேற்பாட்டில் மறைவு நூல்கள் (4வகை)

(அ) மறைவு நற்செய்தி நூல்கள்
- எபிரேயர் எழுதிய நற்செய்தி நூல்கள்
- எகிப்தியர் எழுதிய நற்செய்தி நூல்கள்
- எபியோனியர் எழுதிய நற்செய்தி நூல்கள்.
- நற்செய்திக்கு முன் யாகப்பர் எழுதிய நூல்.

— இராயப்பர், தாமஸ், பார்த்தலோம், நிக்கோதேமுஸ் பிலிப்பு எழுதிய நற்செய்தி நூல்.

— புனித வளனாரின் வாழ்க்கைச் சரிதை

— மரியாளின் விண்ணேற்பு

(ஆ) பணிகள் அடங்கிய மறைவு நூல்கள்

— இராயப்பர், சின்னப்பர், அருளப்பர் இவர்களின் பணிகள் அடங்கியவை.

— இராயப்பரின் போதனை.

— பிலவேந்திரர், தாமஸ், பிலிப்பு, மத்தேயு, பர்ணபகஸ் இவர்களின் பணிகள் அடங்கியவை.

(இ) மறைவு நூல் கடிதங்கள் :

— நமதாண்டவரின் கடிதங்கள்

— சின்னப்பர், செனக்கா இவர்களின் கடிதங்கள்.


— யேசுவிற்கும், அப்போஸ்தலர்க்கும் இடையே நடைபெற்ற உரையாடல்கள்

(ஈ) காட்சிகள் அடங்கிய மறைவு நூல்கள்.

— இராயப்பர், சின்னப்பர், தாமஸ், ஸரீபன், அருளப்பர், மரியாள் ஆகியோர் கண்ட காட்சிகள்.

இவை மறைக்கப்பட்ட மறைவு நூல்கள் என அழைக்கப்படுகிறது.

தற்காலத்தில் கத்தோலிக்க வேதாகமத்தினர்க்கும், பிரிவினைச் சகோதரர்க்கும் இடையில் பாரிய வேறுபாடு, பாகுபாடு இருப்பினும் இரு பகுதியினரும் புரிந்துணர்வின் அடிப்படையில் ஒன்றிப்பின் அடிப்படையில் பொது மொழி பெயர்ப்பு எனும் பெயரில் வேதாகமத்தினைத் தொகுத்துள்ளனர். இதில் இருபகுதியினரதும் வேதாகமங்களும் கையாளப்பட்டுள்ளது. அதாவது பேதுரு, யோவான், பவுல், ஸ்தேவான் போன்ற பெயர்கள் கத்தோலிக்கருக்கு அறிமுகப்படுத்தப்பட்ட அதே வேளை கத்தோலிக்க வேதாகம வசனங்கள், பகுதிகள் அதே வகையில் மாற்றமின்றிக் கையாளப்பட்டுள்ளன. இவ்வாறு தற்போது வேதாகமம் பொது மொழி பெயர்ப்பு எனும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன. இவ் வகையான ஓர் முயற்சி ஒன்றிப்பின் முதலாவது அடிக்கல் என்றே கூறலாம் என்பது எமது கருத்து.



# EDUCATION FOR PEACE

Cinthiya Christy
98 Arts

Today what the world needs most in the 20 th century is peace. Man has progressed in every sphere of life. Science medicine, technology education travel and transport have all taken giant strides. But alas the one thing that the human race is longing for is peace. But it seems an impossible dream. Wars create death and disaster, desolation and deprivation. But peace promises progress and achievements advancements and fulfilment. How could we achieve peace?

One way we could make the dream come true is by education. Education as we all know means not mere literacy. Even in countries where there is a 100% literacy rate there is a lack of quality education. By quality we mean a liberal education which develops the personality of people to the fullest. It will consist of physical spiritual, social and moral development. When people are fully developed they are more satisfied, happier and more fulfilled individuals. Such people will not give way to aggressive tendencies and pugnacious instincst. They all control themselves and their feelings. They will have peace within themselves. True peace begins in the heart of every individual. It spreads in families. and humans society. It spreads from country to country and the whole world is at peace.

True education develops human resources. Man power is a great human resource. When man power is developed, other resources are also developed. Science, agriculture, medicine industry trade and business, and commerce all develop. Thus nations progress. Poverty illness, famine and low living standards are all wiped away, when human resources are developed. We all know the illness, poverty and ignorance are good breeding grounds of war. If these deprivations are wiped away the possibilities of war will decreace. Peace can then find a place in the world.

A liberal education must also consist of elements that foster democracy, tolerance, compromise and respect for human rights and dignity. Such and education must

promote understanding and friendship among all racial, ethnic and religious groups. Many a war is the result of the greed and ambition of a dictator and total disregard for human rights. Moreover we must also take i..to account "preventive Education" such education would prevent certain courses of war. This world include sex education to produce good leaders workers and citizens.

Sex education would prevent sexual crimes and misbehaviour. Education for women would prevent the exploitation and abuse of woman, and civic education would make citizens socially responsible for their condition of their society. These would go a long way in making peace a reality.

A special subject through teaching on peace, and international relationship should be introduce in a curriculum in all schools. This could ensure correct value and attitudes for living in peace. It would expand the vision of man as a world citizen who has the tremendous power of fostering world peace.

Above all religious knowledge should be imparted with a accent on the qualities that make for peace. Humility, compassion, selflessness, forgiveness and gentleness must be taught through religious education. The father-hood of God, the brotherhood of man will help to instil unity, equality, fraternity and liberty as nothing else can what the world needs most is a change of heart and this could be achieved only through a liberal education.


**ஸ்ரீலங்கா ரெலிகொம் லிமிட்டெட் SLTL**

யப்பானின் NTT கம்பனி (Nippon Telegraph & Telephone Corporation) உடன் இலங்கை கூட்டிணைந்து அபிவிருத்தியடைந்த உலகின் உயர்ந்த தொலைத்தொடர்பு முறைகளுடன் போட்டியிட ஆரம்பித்துள்ளது. நாடளாவிய தொலைத்தொடர்பு வலையமைப்பின் ஏகபோக உரிமை யாளர்களான ஸ்ரீலங்கா ரெலிகொம் லிமிட்டெட் மாபெரும் சர்வதேச தொலைத்தொடர்பு நிறுவனமாகிய NTT உடன் ஒன்றிணைந்த தொழில் நுட்ப மாற்றீடுகளுடன் நிர்வாக அமைப்பிலும் இணைந்து கொள்ளும்.

# நன்றி நவில்கின்றோம்

* மலர் பொலிவுற ஆசிகளை வழங்கிச் சிறப்பித்த கல்விப் பணிப்பாளர் ( வலயம் – I ) அவர்களுக்கும், உதவிக் கல்விப் பணிப்பாளர் ( வர்த்தகம் ) அவர்களுக்கும்,

* இம்மலர் நறுமணமும், உறுபயனும் மிக்கதாய் வெளிக் கொணர்வதற்கு விடய தானங்களை வழங்கிய விரிவுரையாளர்களுக்கும், மன்ற உறுப்பினர்களுக்கும்,

* எமக்கு அறிவுரை, ஆசியுரை வழங்கி ஊக்கமூட்டிய அதிபரும், மன்றக்காப்பாளரு மாகிய அருட்செல்வி யோலன்ட் மத்தியாஸ் அவர்களுக்கும்,

* மலர் வெளியீடு தொடர்பாக ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கி எமக்கு உற்சாகமளித்த மன்றப் பொறுப்பாசிரியர்கள், துணை ஆசிரியர்கள் ஆகியோருக்கும்,

* மலர் வெளியீட்டு விழாவிலே ஆசியுரை, சிறப்புரை, வெளியீட்டுரை, சமர்ப்பண உரை வழங்கிய பெரியோர்களுக்கும்,

* முதற்பிரதி, சிறப்புப்பிரதிகளைப் பெற்று எம் மன்றத்தினரை ஊக்குவித்த நலன் விரும்பிகளுக்கும்,

* விளம்பரங்கள் நல்கி எம்பணிக்கு விருப்பூட்டிய விளம்பர தாரர்களுக்கும்,

* தேவையான சந்தர்ப்பங்களிலெல்லாம் எமது மன்ற வளர்ச்சிக்கு முன்னின்று நெறிப் படுத்தி உதவும் உபகாப்பாளர் மற்றும் ஏனைய ஆசிரியர்கள் ஆகியோருக்கும்,

* இத்தனிரைச் சிறப்புடன் அச்சிட்டு வனப்புடன் திகழவைத்த புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தாருக்கும்,

* மலர் இத்தகைய பொலிவும், வளமும் பெற ஆதரவு நல்கிய அனைத்து உள்ளங் களுக்கும்,

* எமது அழைப்பை ஏற்று இம்மலர் வெளியீட்டு விழாவிற்கு வருகைதந்த ஏனைய பாடசாலை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும்,

* ஈற்றில் எமது அழைப்பை ஏற்று விழாவை மேம்படுத்திய எமது கல்லூரி ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவர்க்கும்,

## எமது உளமார்ந்த நன்றிகள்

**வணிக மன்றத்தினர்,**

யா / திருக்குடும்பக் கன்னியர் மடம்

# அங்கலின் ரெக்ஸ்ரைல்

## புடவை றெடிமெற் ஆடைகள்

* பேபி சூட்
* சாறிக்கேற்ற பிளவுஸ் பீஸ்
* தையல் வேலைகளுக்கேற்ற பொருட்கள்
* எல்லா சைஸ்களிலும் பொலிதீன்
* மேசை விரிப்பு
* குறோசறி பாக் சைஸ்கள்

***அனைத்தையும் ஒரே இடத்தில் மொத்தமாகவும்***

***சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள***

# அங்கலின் ரெக்ஸ்ரைல்

**43, 48. நவீன சந்தை, யாழ்ப்பாணம்**

# கோபிகா ஆடை அகம்

கண்டவுடன் அகமகிழ்ந்து

கொண்டவுடன் அணிந்து மகிழ

நாடவேண்டிய ஒரே இடம்

*தலைச் சோடனை வாடகைக்கு விடப்படும்*

*நங்கையர்களுக்கான இறக்குமதி செய்யப்பட்ட பஞ்சாபி மற்றும்*
*சிறுவர்களுக்கான ஆடைகளுக்கும்*
*மங்கள வைபவங்களுக்கான பட்டாடைகள் மனம் விரும்பியபடி*
*தெரிவு செய்ய நீங்கள் நாடவேண்டியது*

## கோபிகா ஆடை அகம் GOPIGA TEX

4, சிறப்பு அங்காடி
*(நவீன சந்தை உட்புறம்)*
யாழ்ப்பாணம்

4, Model MARKET
(Inside)
JAFFNA

வணிகத்தளிர் புதுப்பொலிவுடன் மிளிர

எமது வாழ்த்துக்கள்

# லைடன் புடவை நிலையம்

# Leyden Textile Centre

DEALERS IN

TEXTILES, READYMADE GARMENTS &

LEYDEN PRODUCTS

32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

32, Kasthuriar Road
JAFFNA

Tel: 22089

*With Best Compliments From*

# NEW PRAGAS FANCY PALACE

**நியூ பிரகாஸ்**

63 A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

வணிகத்தளிருக்கு எமது வாழ்த்துக்கள்

# SIVAKANESAN STORES

முகூர்த்தப் பட்டு பிடவைகளுக்கு
கைராசியான நிறுவனம்

# சிவகணேசன் ஸ்ரோர்ஸ்

41 பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

41, Grand Bazaar,
JAFFNA.

# SHOBAHANA TEXTILES

உங்களுக்குத் தேவையான சகலவித உள்நாட்டு வெளிநாட்டு
சாறிவகைகள் சாறிகளுக்கேற்ற நிறங்களில்
பிளவுஸ் துணிவகைகள் மற்றும் சிறுவர்களுக்குரிய
றெடிமேட் ஆடைகள் சூட் வகைகள் அழகுசாதனப் பொருட்கள்
யாவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்
கல்யாணப் பட்டு பிடவைகளின் கைராசி நிறுவனம்

# சோபனா ஆடை அகம்

16, Grand Bazaar,
JAFFNA.

16, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

# சிவா புடவை அகம்

இல. 27, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

திருமணம் மற்றும் எல்லா வைபவங்களுக்கு தேவையான
பட்டுச் சேலைகள் பட்டு வேட்டிகள்
மற்றும் பல பிடவைத் தினிசுகளையும் தெரிவு செய்ய
யாழ் நகரில் நம்பிக்கையான ஸ்தாபனம்

# SIVA TEXTILES

No. 27, Grand Bazaar Road, JAFFNA

---

வணிகத்தளிர் சிறப்புடன் வளர்க

# அல்டி

77, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்

# மேகாஸ் வீடியோ & போட்டோ

உங்கள் இல்லங்களில் நடைபெறும்
மங்களகரமான நிகழ்ச்சிகளையும்
பொது வைபவங்களையும்
அதி நவீன வீடியோ மிக்சிங் கமரா மூலம்
வீடியோ எடுக்கவும், புகைப்படம் பிடிப்பதற்கும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

# மேகாஸ் வீடியோ

உரிமையாளர்: S. இரவீந்திரன்

**தலைமையகம்:**
58, குகன் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.


**கிளை:**
494, கண்டி வீதி
தபாற்கட்டைச் சந்தி
அரியாலை, யாழ்ப்பாணம்.

வணிகத்தளிர் இதழ் இனிது வெளிவர

எமது வாழ்த்துக்கள்

# RENNY OPTICIANS

## றெனி மூக்குக்கண்ணாடி அகம்



288, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

கண்டி வீதி,
(பிரதேச செயலகம் முன்பாக)
சாவகச்சேரி.

Res: 19/3, Colombogam Road,
Chundikuli,
Jaffna.

*With Best Compliments From*

# ARUN CREAM HOUSE

34, KASTHURIAR ROAD,
JAFFNA.

வாழ்க

வளர்க

வணிகத்தளிர்

# சூரியன் களஞ்சியம்

140, சிறப்பு அங்காடி
யாழ்ப்பாணம்

வணிகத்தளிரை வாழ்த்துகிறோம்

* தரமான போட்டோஸ்ரற் பிரதிகள்

* அடையாள அட்டை கவரிடுதல்

* 58 வருட றைக்கிளினர்ஸ்

இம் மூன்றும் இணைந்த சேவைகளை

ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# சன்லைற் றைக்கிளினர்ஸ்

பஸ்நிலையம் யாழ்ப்பாணம்

*With Best Compliments From*

# KUHAN STORES

180 ( 380 ), HOSPITAL ROAD,
JAFFNA.
T. Phone: 24427

With Best Compliments From

# SIVA FANCY PALACE

185, Kasthuriar Road,
JAFFNA.

அழகிற்கு அழகு செய்யும்
அழகிய தங்கப்பவுண் நகைகளுக்கு

# சிறி நதியா நகை மாடம்

மீண்டும் மீண்டும் செல்லத் தூண்டும்
காண்போர் மயங்கும் காட்சிக்கூடம்

## SREE NATHIYAA NAKAI MAADAM

கிளை :

2G, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இன்றைய அறிமுகம் நாளைய நாகரிகம்
நல்லின ஆடைகளை நயமுடனே வழங்கிட
நகரமதில் தோன்றிவிட்டாள்

# நல்லி சில்க்ஸ்

## NALLI SILKS

121/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

*With Best Compliments From*

# RATHINA STORES

287, BANKSHAL STREET,

JAFFNA

வணிகத்தவிரை வாழ்த்துகிறோம்

நியூ வசந்தா களஞ்சியம்

இல. 350, பாங்சால் வீதி,

குருநகர்,

யாழ்ப்பாணம்.

''வணிகத்தளிர்'' வரவால்

தேசத்து அறிவியல்

வளம் பெற்று வாழி! வாழி!

தரமான ஐஸ்கிறீம் வகைகளையும்

சிறந்த சிற்றுண்டி வகைகளையும்

பெற்றுக் கொள்வதற்கு நாடுங்கள்

★

# கல்யாணி கிறீம் ஹவுஸ்

73, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்


St Convent Maha Vidyalayam
JAFFNA

அன்புடன்

வாழ்த்தி வரவேற்கிறோம்

வளர்க

வணிகத்தளிர்



யாழ். நகரில் சிறந்த முறையில் உங்கள்

பற்களைக் கட்டுவதற்கும்

அழகிய முறையில் மூக்குக் கண்ணாடிகளைத்

தெரிவு செய்வதற்கும்

இன்றே விஜயம் செய்யுங்கள்

# லாவண்யா

## பல், மூக்குக் கண்ணாடி அகம்

525, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். வீதி, நெல்லியடி.

14

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம் - 1997